# உயிர்த் தீயின் சோதி

ஜெய்சக்தி



நூல் விவர அட்டவணை

நூலின் பெயர் : உயிர்த் தீயின் சோதி
நூலாசிரியர் : ஜெயசக்தி
உரிமை : ஆசிரியருக்கு
முதல் பதிப்பு : டிசம்பர், 2003
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2008
மொழி : தமிழ்
நூல் அளவு : 1 x 8 கிரவுன்
தாள் : 11.6 கி.கி. வெள்ளைத்தாள்
அச்சு எழுத்தளவு : 10 புள்ளி
மொத்தப் பக்கங்கள் : 138
பைண்டிங் : சாதா அட்டை பைண்டிங்
நூல் வெளியீடு : ஸ்ரீ செல்வ நிலையம்
தபால் பெட்டி எண். 5571
[illegible] 107/1
[illegible] சாலை,
[illegible]
விலை : ரூ. 55.00

# உயிர்த் தீயின் சோதி

## 1

'நல்ல வேளை பெண்ணைப் பிடித்து விட்டதாம். மேற்கொண்டு ஏற்பாடுகள் பார்க்க வேண்டியதுதான்!' என்றபடி, அப்பா ரிலாக்ஸ்டாக சேரில் சாய்ந்து அமர்ந்தார்.

'ஆமா, நமக்குப் பிடிச்சதுக்கு அவங்கல்ல சந்தோஷப் படணும். அதென்ன, மாப்பிள்ளைப் பையன் ரொம்ப அழுத்தமா உட்கார்ந்திட்டிருந்தான். கூட வந்தானே நம்ம குமாரு. அவன் தான் லொடலொடங்கறான். கிராமம் வேற.......' என்று சந்திரவதனி இழுத்தாள்.

'இங்க பார், சந்திரா, விசாரிச்ச வரைக்கும் பையன் ரொம்ப நல்ல மாதிரின்னுதான் எல்லாரும் சொல்றாங்க. என்ன, அதிகம் பேச மாட்டானாம். இருந்துட்டுப் போகட்டுமே......' என்றார் முத்துவேல்.

வசுமதியும், வந்தனாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் களுக்கென்று சிரித்துக் கொண்டார்கள்.

'என்னடி சிரிப்பு?' என்றாள் சந்திரவதனி.

'என்ன இப்ப. அப்பாவுக்குப் பேசத் தெரியுது. நீயென்ன பேசவா விடறே? நம்ம வசுமதிக்கா மட்டுமென்ன? கலகலப்பாப் பேசிடப் போறாளாக்கும். ரெண்டு ஊமைக் கோட்டான்களுக்கும் சரியாகத்தான் இருக்கும்!' என்றாள் வந்தனா.

'ஏங்க இந்தச் சின்னவளுக்கு ரொம்ப வாய்க்கொழுப்பாப் போச்சு. பெரியவங்க பேச்சிலே நீயெதுக்குடி வர்றே? போ நீ முதல்லே......' என்றாள் சந்திரவதனி.

'ஆமா...... போம்மா..... நானென்ன L.K.G. பாப்பாவாக்கும். இல்லே..... நான் என்ன வசுமதியா? நீ என்ன சொன்னாலும் கேட்டுக்கறதுக்கு..... சீக்கிரம் அவளுக்குக் கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிவிட்டு அடுத்த வருஷமே எனக்கும் பண்ணி வைக்கிற வழியைப் பாரு......' என்று சொன்னவள், அப்பாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி விட்டு, அங்கேயிருந்து ஓடி விட்டாள்.

சந்திரவதனி நிஜமாகவே கோபப்பட்டாள்.

'இவளை..... அப்புறம் வச்சுக்கறேன். இத பாருங்க. உங்களுக்குப் பிடிச்சிருக்குன்னு நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கலை. உங்க வீடு மாதிரி இல்லாம எங்க வீட்டு ஸ்டேட்டஸுக்கு சமமா இருக்குங்கறதுக்காக ஒத்துக்கறேன். புரியுதா! ஏற்பாடுகளைப் பாருங்க......' என்று போகிற போக்கில் அவரை ஒரு போடு போட்டு விட்டு அந்தப் பக்கம் போனாள்.

முத்துவேல் அடிவாங்கினாற்போல் மௌனமாக அமர்ந்து விட்டார்.

சந்திரவதனி மிக வசதியான குடும்பத்தில் பிறந்தவள். முத்துவேலின் குணம் பார்த்துத்தான் அவள் அப்பா திருமணம் செய்து கொடுத்தார். முத்துவேலுக்கு அது குறித்துக் கொஞ்சம் காம்ப்ளெக்ஸ் இருந்ததாலோ என்னவோ சந்திரவதனி தாக்கும் போதெல்லாம் சுருண்டு போவார்.



கோயமுத்தூரில் பெரிய நிறுவனங்களெல்லாம் இழுத்து மூடப்பட்டு விட்ட நிலையில் கூட அவர்களது பெரிய அந்தத் தொழிற்சாலையை அவர் திறம்படத்தான் நடத்திக் கொண்டிருந்தார். அலுவலகத்தில் அவர் புலிதான். ஆனால், இளம் வயதில் விழுந்து விட்ட அந்தக் காம்ப்ளெக்ஸை மட்டும் அவரால் வெல்ல முடியவில்லை.

சில நேரங்களில் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டுப் போய் விடலாமா என்று தோன்றும். ஆனால், குத்தலாகப் பேசிவிட்டுப் போன மனைவி அடுத்த நிமிடமே, 'என்ன, இன்னைக்கு ஜூஸ் சாப்பிடலயாமே? எல்லாம் பாத்துப் பாத்துக் குடுக்கணுமாக்கும்?' என்றபடி வருவாள். பின்னாலேயே வேலைக்காரி ஜூஸ் கொண்டு வருவாள்.

சரி..... அவளுக்கும் அன்பிருக்கிறது. காட்டத் தெரியவில்லை..... என்று நினைத்துக் கொண்டு குளிர்ந்து விடுவார்.

பிறந்தது மூன்றும் பெண்கள். வசந்தி, வசுமதி, வந்தனா என்று பெயர் வைத்திருந்தார். அவர்களை எண்ணிப் பொறுத்துக் கொள்வார். ஆனால், பெண்களுக்குத் தன் நட்புக் கரம் நீட்டி நல்ல விதமான விஷயங்களை அறிமுகப்படுத்தி முடிந்தவரை சந்திரவதனியின் குணம் படியாமல் வளர்த்து வந்தார்.

'அம்மா....... அவளுக்கும் அன்பு இருக்கும்மா. காட்டத் தெரியறதில்லை.....' என்று அவளையும் உயர்வாகவே சொல்லி வைப்பார்.

வசுமதி அப்பாவை ஒரு நட்புடன் பார்த்தாள். போன வந்தனா திரும்பி வந்து, 'அம்மாவுக்கு லொள்ளு...... பாத்தீங்களா.... ஏம்ப்பா, சினிமாவுலே கிளைமாக்ஸ் சீனிலே ரோஷம் வந்த அப்பாக்கள் சாட்டையை எடுத்துகிட்டு வீசி அடிப்பாங்களே. அதுமாதிரி ஒரு நாளைக்கு ஒரு வீச்சு வீசிற வேண்டியதுதானே!' என்றாள்.

வசுமதியும், அவளும் கிளுகிளுவென்று சிரித்தார்கள்.

'அம்மா.... சினிமாவிலே அதோட கதை முடிஞ்சுடுதும்மா.... அடுத்த நாள் என்ன நடக்கும்னு யாருக்குத் தெரியும்? இங்கே...... அடுத்த நாள் உங்கம்மா சாட்டையை எடுத்தான்னு வை.....' என்று அவர் சிரித்தார்.

பெண்கள் இருவரும் சிரித்தார்கள்.

'அப்பா, நீங்க நிஜமாவே ரொம்ப நல்லவர்ப்பா......' என்று இரண்டு பேருமே அவர் இருபுறமும் அமர்ந்து கொண்டார்கள்.

'ம்.....ஏதோ... அந்தப் பேருதான் மிச்சம்!' என்று அவர் பெருமூச்சு விடுவது போல் நடித்தார்.

இருவரும் மறுபடியும் சிரித்தார்கள்.

அவர் வசுமதியைப் பார்த்து, "வசு...... நல்லா யோசிச்சுச் சொல்லும்மா..... உங்கம்மா சொன்னது கரெக்ட்தான்..... கிராமம் வேற.... அங்க வாழ்க்கை வேற மாதிரி இருக்கும். ரெண்டு மாமியார் வேற....... யோசிச்சுக்கம்மா....." என்றார்.

'அப்பா..... உங்களுக்குத் தெரியாததா? பெரும்பாலும் மனுஷங்களை நீங்க சரியாத்தான் கணக்குப் போடறீங்க. உங்களுக்குப் பிடிச்சா சரிப்பா.....' என்றாள்.

'வசு...... வாழ்க்கையில் எல்லாமும் எல்லாருக்கும் கிடைக்காது. கிடைத்ததை வச்சு சீர்படுத்திக்க வேண்டியதுதான். இப்ப உங்கம்மாவே பாரு..... டாமினேட்டிங்தான். ஆனா, உங்களையெல்லாம் தான் வளர்க்கலேன்னாலும் ஆள் போட்டு பாத்துக்க வச்சு சொகுசாத்தான் வளர்த்திருக்கா..... போற இடத்திலே சொகுசு கிடைக்காதும்மா.....' என்றார்.

'பரவாயில்லப்பா..... நான் சமாளிச்சுக்குவேன்.....' என்றாள் வசுமதி.



'அப்பா..... அப்படீன்னா.... மாப்பிள்ளையைப் பிடிச்சுப் போச்சுன்னு அர்த்தம்.....' என்று குதித்தாள் வந்தனா. முத்துவேல் சிரித்துக் கொண்டே எழுந்து போனார்.

'ஹேய்..... உங்கிட்ட என்ன தனியாப் பேசினார்.... சொல்லு,' என்று கலாட்டா செய்தாள் வந்தனா.

அந்தக் காட்சி வசுமதி மனதில் தோன்றியது.

தனியாப் பேசறதுன்னா பேசிக்கலாம் என்று ஆளாளுக்குச் சொல்லவும் அவன் எழுந்து வந்தான்.

உள்ளறையில் நின்றபடி அவள் அவன் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நல்ல உயரமாக இருந்தான். மாநிறமாக இருந்தான். கூர்மூக்கு. ஆழமாக ஊடுருவுகிற கண்கள். ஆனால் அழுத்தமாக இருந்தான். அதிகம் பேசவில்லை. கொஞ்சம் கர்வக்காரன் போல் தோற்றம் தந்தான். ஆனால், பேச்சிலே அப்படி யொன்றும் தெரியவில்லை. அவரவர்க்குத் தகுந்தபடி அளவாகப் பேசினான்.

உள்ளறைக்கு வந்தவுடன் அவனே பேசட்டும் என்று அவள் பேசாமல் நின்றாள். லேசாகத் திரும்பினாற்போல் நின்றான்.

'மனசுக்குப் பிடிச்சா மட்டும் சம்மதிச்சாப் போதும்....' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. 'அங்க வேலைக்கெல்லாம் போக முடியாது. வேலையை விட்ற வேண்டியிருக்கும்!' என்றான்.

'பிரைவேட் ஸ்கூல்தான். விட்றலாம்!' என்றாள் வசுமதி.

'பணம், நகை என்று எந்த எதிர்பார்ப்புமில்ல!' என்றான். அவளை ஒரே ஒரு வினாடி நேராகப் பார்த்தான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள். அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவன் புன்னகைக்கவில்லை.

ரைட்?' என்கிற மாதிரி லேசாகத் தலையசைத்தான். போய்விட்டான்.

'சே.... அவ்வளவுதானா?' என்றாள் வந்தனா.

'பணம் நகையெல்லாம் வேண்டாம்னு சொன்ன ஆளு.... நீ மட்டும் போதும்னு சொல்லியிருந்தா எவ்வளவு நல்லாருந்திருக்கும்!' என்றாள் வந்தனா. வசுமதி ஒன்றும் பேசவில்லை. 'ஆமாம்.... சொல்லியிருக்கலாம்.....' என்று அவளுக்கும் தோன்றியது.

குமார் சொன்னது நினைவுக்கு வந்தது. குமார் என்கிற செல்வகுமார் இரு வீட்டுக்கும் பொதுவான சொந்தக்காரன். மாப்பிள்ளை கந்தகுருவுக்கு நெருங்கிய நண்பனாம். வகுப்புத் தோழர்களாம். வசுமதிக்கு அண்ணன் முறை. அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவான். 'குமாரண்ணா' என்று பெண்களும் பிரியமாகப் பழகுவார்கள். அவன்தான் இந்தத் திருமணத்துக்கே ஏற்பாடு செய்தவன்.

இரண்டு நாட்களுக்கு முன் வந்திருந்தான். அவன் வந்தாலே வசுமதியும், வசந்தியும் ஊர்க்கதையெல்லாம் பேசி மகிழ்வார்கள். அவன் ஒரு பெரிய கம்பெனியில் ரிசர்ச் டிபார்ட்மெண்டில் இருந்தான். கலாட்டாவான பேர்வழி.

'வசு..... இந்த குருப்பய இருக்கானே. விசுவாமித்திரரு. எந்தப் பொண்ணையும் கேர் பண்ணிக்க மாட்டான். போடா, அவங்ககிட்ட சிக்கிட்டு..... இப்ப ஏதோ நிம்மதியா இருக்கேன். ஆளை விட்றாம்பான். பிரண்ட்ஸ் எல்லாரும் சேர்ந்து பிக்னிக் போகும்போது எல்லாரும் தண்ணியடிப்பானுக. சிகரெட் ஊதுவானுக..... நடுவிலேயே உட்கார்ந்திருப்பான். தொட மாட்டான். நான் கூட லேசா சிப் பண்ணுவேன்!' எனவும்....

'ஒஹோ.... லேசா.....சரி.... சரி..... நீ சொல்றதை நாங்க நம்பறோம்!' என்றாள் வந்தனா. சிரித்தார்கள்.



'சரி..... விடு..... நீ நம்பலேன்னாப் போ. கொஞ்சம் டேஸ்ட் பண்ணேன்னா, 'டேஸ்ட் பாக்கறதுக்கு இதென்ன அல்வாவா, மைசூர்ப்பாகா, போங்கடா.... மனசுக் கட்டுப்பாடு இல்லாதவனுக்குத்தான் இதெல்லாம் வேணும்!'பான். அப்பபடிப்பட்ட ஆளு, அந்த லாவண்யாவோட கல்யாணத்துல, அதாம்மா.... நீயும் வந்தனாவும் ஒரே கலாட்டா பண்ணிக்கிட்டிருந்தீங்களே.... அப்ப மெதுவா என்கிட்டே, 'அது யார்றா.... அந்தப் பொண்ணு?'ங்கறான்.

'சரீ... பய விழுந்துட்டானாக்கும்னு நெனச்சிட்டு..... 'என்னடா பாத்தர்லாமாங்கறேன்?

'அம்மாவும், கமலம்மாவும் கல்யாணம், கல்யாணம்னு தொளைக்கறாங்க. ஏதோ ஒண்ணைப் பண்ணித்தானே ஆகணும். இந்தப் பொண்ணு தேவலாம்போல, அப்படிங்கறான்!' என்று சிரித்தான்.

'என்னது? ஏதோ ஒண்ணுக்கு இதுவா? அப்ப மிஸ்டர் குமாரு, அப்படியெல்லாம் எங்கக்காவை உங்களுக்குத் தரத் தேவையில்லை. பொண்ணு கிடையாது!' என்றாள் வந்தனா. சற்றுக் கோபமாகவே.

'ஹேய்.... என்ன வந்தனா, இப்படி சீரியஸா எடுத்துக்கறே?' என்றான் குமார்.

'பேசாமயிரு..... வந்தஸ்!' என்றாள் வசுமதி.

'ம்.... என்று இழுத்துப் பெருமூச்சு விட்ட வந்தனா, 'ம்..... உனக்குப் பிடிச்சிருச்சு போல..... இனி என்ன செய்ய?' என்றாள். சிரித்தார்கள்.

வசுமதி மெதுவாக, 'ஏண்ணா கொஞ்சம் ரிசர்வ்டா இருப்பாரு போல இருக்கு!' என்றாள்.

'ரைட்?' என்கிற மாதிரி லேசாகத் தலையசைத்தான். போய்விட்டான்.

'சே.... அவ்வளவுதானா?' என்றாள் வந்தனா.

'பணம் நகையெல்லாம் வேண்டாம்னு சொன்ன ஆளு.... நீ மட்டும் போதும்னு சொல்லியிருந்தா எவ்வளவு நல்லாருந்திருக்கும்!' என்றாள் வந்தனா. வசுமதி ஒன்றும் பேசவில்லை. 'ஆமாம்.... சொல்லியிருக்கலாம்.....' என்று அவளுக்கும் தோன்றியது.

குமார் சொன்னது நினைவுக்கு வந்தது. குமார் என்கிற செல்வகுமார் இரு வீட்டுக்கும் பொதுவான சொந்தக்காரன். மாப்பிள்ளை கந்தகுருவுக்கு நெருங்கிய நண்பனாம். வகுப்புத் தோழர்களாம். வசுமதிக்கு அண்ணன் முறை. அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவான். குமாரண்ணா என்று பெண்களும் பிரியமாகப் பழகுவார்கள். அவன்தான் இந்தத் திருமணத்துக்கே ஏற்பாடு செய்தவன்.

இரண்டு நாட்களுக்கு முன் வந்திருந்தான். அவன் வந்தாலே வசுமதியும், வசந்தியும் ஊர்க்கதையெல்லாம் பேசி மகிழ்வார்கள். அவன் ஒரு பெரிய கம்பெனியில் ரிசர்ச் டிபார்ட்மெண்டில் இருந்தான். கலாட்டாவான பேர்வழி.

'வசு..... இந்த குருப்பய இருக்கானே. விசுவாமித்திரரு. எந்தப் பொண்ணையும் கேர் பண்ணிக்க மாட்டான். போடா, அவங்ககிட்ட சிக்கிட்டு..... இப்ப ஏதோ நிம்மதியா இருக்கேன். ஆளை விட்றாம்பான். பிரண்ட்ஸ் எல்லாரும் சேர்ந்து பிக்னிக் போகும்போது எல்லாரும் தண்ணியடிப்பானுக. சிகரெட் ஊதுவானுக..... நடுவிலேயே உட்கார்ந்திருப்பான். தொட மாட்டான். நான் கூட லேசா சிப் பண்ணுவேன்!' எனவும்....

'ஓஹோ.... லேசா.....சரி.... சரி...... நீ சொல்றதை நாங்க நம்பறோம்!' என்றாள் வந்தனா. சிரித்தார்கள்.



'சரி..... விடு..... நீ நம்பலேன்னாப் போ. கொஞ்சம் டேஸ்ட் பண்ணேன்னா, 'டேஸ்ட் பாக்கறதுக்கு இதென்ன அல்வாவா, மைசூர்ப்பாகா, போங்கடா.... மனசுக் கட்டுப்பாடு இல்லாதவனுக்குத்தான் இதெல்லாம் வேணும்!'பான். அப்படிப்பட்ட ஆளு, அந்த லாவண்யாவோட கல்யாணத்துல, அதாம்மா.... நீயும் வந்தனாவும் ஒரே கலாட்டா பண்ணிக்கிட்டிருந்தீங்களே.... அப்ப மெதுவா என்கிட்டே, 'அது யார்றா.... அந்தப் பொண்ணு?'ங்கறான்.

'சரீ... பய விழுந்துட்டானாக்கும்னு நெனச்சிட்டு..... 'என்னடா பாத்தர்லாமாங்கறேன்?

'அம்மாவும், கமலம்மாவும் கல்யாணம், கல்யாணம்னு தொளைக்கறாங்க. ஏதோ ஒண்ணைப் பண்ணித்தானே ஆகணும். இந்தப் பொண்ணு தேவலாம்போல, அப்படீங்கறான்!' என்று சிரித்தான்.

'என்னது? ஏதோ ஒண்ணுக்கு இதுவா? அப்ப மிஸ்டர் குமாரு, அப்படியெல்லாம் எங்கக்காவை உங்களுக்குத் தரத் தேவையில்லை. பொண்ணு கிடையாது!' என்றாள் வந்தனா, சற்றுக் கோபமாகவே.

'ஹேய்.... என்ன வந்தனா, இப்படி சீரியஸா எடுத்துக்கறே?' என்றான் குமார்.

'பேசாமயிரு..... வந்தஸ்!' என்றாள் வசுமதி.

'ம்....' என்று இழுத்துப் பெருமூச்சு விட்ட வந்தனா, 'ம்..... உனக்குப் பிடிச்சிருச்சு போல..... இனி என்ன செய்ய?' என்றாள். சிரித்தார்கள்.

வசுமதி மெதுவாக, 'ஏண்ணா கொஞ்சம் ரிசர்வ்டா இருப்பாரு போல இருக்கு!' என்றாள்.

'கொஞ்சமா.... ரொம்ப ரிசர்வ்ட்..... ஆனா, என்கிட்ட ப்ரீயாய் இருப்பான். அவன் சிஸ்டர்கிட்ட ரொம்ப அட்ஜஸ்ட் பண்ணிப் போவான். நல்லவன் வசு. ரொம்ப நல்லவன். எதையும் காட்டிக்க மாட்டான். பாமிலிக்கே அவன்தான் பொறுப்பு..... வாழ்க்கைன்னா சினிமா மாதிரி இல்லயே.... எப்பவும் டூயட் பாட.....' என்றான்.

வசுமதி லேசாகப் பெருமூச்சு விட்டாள். 'ஆமாண்ணா..... இருக்கட்டும்ண்ணா, ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி.... வாழ்க்கை பயணம்ன்னா..... தலையைக் குடுத்துத்தானே ஆகணும்,' என்றாள்.

'நீ சமாளிப்பே!' என்றான் குமார். வசுமதியும் அப்படித்தான் நம்பினாள்.

ஆனால், அப்போது அவளுக்குத் தெரியவில்லை. தான் வாழ்க்கைப் பயணத்தில் அல்ல..... வாழ்க்கை யுத்தத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறோம் என்று.....

## 2

கல்யாணக் கூட்டமெல்லாம் ஓய்ந்து விட்டது. ஒரு வாரமாகி இருந்தது.

எப்போதும் சுற்றிலும் ஆட்கள் இருந்ததால் கந்தகுருவுக்கும், வசுமதிக்கும் தனியான நேரம் அதிகம் கிடைக்கவில்லை. தனியாக நேரம் எடுத்துக் கொள்ள அவனும் முயற்சிக்கவில்லை.

கல்யாணத்தின் போது கூட முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல்தான் இருந்தான். ஒரு கட்டத்தில்.... 'என்னடா இஞ்சி தின்ன மாதிரியே நிக்கிறே...... சிரிச்சுத் தொலையேன்டா!' என்று பாதி எரிச்சலாகக் குமார் சொன்னபோது மட்டும் தன்னையும் மறந்து சிரித்து விட்டான். பற்கள் பளீரிட அவன் சிரிப்பதை



வசுமதி நிமிர்ந்து பார்க்கிற காட்சி போட்டோவில் அழகாக விழுந்திருக்கிறது. வசுமதிக்கு அது ரொம்பவும் பிடித்தது.

நான்கு நாட்கள் அவர்கள் வீட்டில்தான் கழித்தார்கள். அங்கேயே முதலிரவும் வைத்திருந்தார்கள்.

சற்று நேரம் வரை குமாருடனும், மாமனாரிடமும் பேசிக் கொண்டிருந்தவன் பத்துமணி வரை ஓட்டினான். நலுங்கு வைக்க வேண்டும் என்று அழைத்ததற்குப் பிறகுதான் வந்தான். அத்தையொருத்திதான் நலுங்கு வைத்தாள். 'சீக்கிரம் பாத்து உங்கம்மாவுக்கு ஒரு பேரனைப் பெற்றுக் குடு!' என்று கலாட்டா செய்து விட்டுப் போனாள். அவன் பதில் சொல்லாமல் அழுத்தமாகவே இருந்தான்.

தனிமை கிடைத்தபோது அவள் பால் சொம்பில் இருந்து டம்ளரில் பாலை ஊற்றிய போது மட்டும் தானே வாங்கி ஊற்றினான். 'நகர வாழ்க்கைக்கும்..... எங்க ஊருக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு..... நீ அங்க.... கந்தகுருவுடைய மிசஸ்ங்கற ஒரு ஐடென்டி மட்டும்தான்.... நிறைய மாத்திக்க வேண்டியிருக்கும்...' என்றான். அவள் தலையாட்டிக் கொண்டாள்.

'இங்க உங்க அம்மாதான் எல்லாம் போல இருக்கு..' என்றான்.

அவள் மெதுவான குரலில், 'இல்லே..... பாக்டரியெல்லாம் அப்பா பாத்துக்குவாங்க.... வீட்டு நிர்வாகம் அம்மாவுது. நல்லவங்கதான்.... ஆனா என்ன பண்றது. சிலருக்கு அன்பை வெளிப்படையாகக் காட்டத் தெரியறதில்லே....' என்றாள்.

தன்னையுமறியாமல் களுக்கென்று சிரித்து விட்டாள். அவன் சிரிக்கவில்லை.

அவளை ஒரு விதமாகப் பார்த்து விட்டு இடது கையால் அவளைத் தன்னருகில் இழுத்தபடி வலது கையால் விளக்கணைத்தான்.

அந்த உறவின் முதல் பரிச்சயத்தில் அவள் பேச்சற்றுப் போனாள். மௌனமாகவே கழிந்தது அந்த இரவு.

புதிய உறவு தந்த அதிர்ச்சி கலந்த உணர்வு, சுற்றத்தார் கூட்டம், பார்க்க வந்த பலரிடமும் நல்ல விதமாகப் பேசி அனுப்ப வேண்டியிருந்தது. எல்லாமாக அவளுக்கு யோசிக்க நேரம் இருக்கவில்லை.

நேற்றெல்லாம் பேக்கிங்கில் கழிந்தது. நேற்றே ஊர் வந்து சேர்ந்தார்கள். இன்று மாலை அவளது பிறந்த வீட்டார் புறப்படுவதாக இருந்தது.

பெரிய கிராமத்துத் தொட்டிக் கட்டு வீடு. மாடியிலும் அறைகள் இருந்தனவாம். இதுவரை யாரும் பயன்படுத்த வில்லையாம். இப்போதுதான் அவர்களுக்காக அறை ஒதுக்கினார்களாம். அவன் தங்கை கீதா சொன்னாள்.

கீதா அவளிடம் ஒட்டிக் கொண்டாள். வந்தனாவைப் போலவே துறுதுறுப்பாக இருந்தாள். அவள்தான் சொன்னாள். கமலம்மாதான் உண்மையில் அவர்களைப் பெற்றவளாம். ஆனால், பெரியம்மாவுக்குக் குழந்தைகள் இல்லாததால் தாங்கள் இரண்டு பேரும் அவளைத்தான் அம்மா என்று அழைக்க வேண்டும் என்று உத்தரவாம்.

அம்மாவைக் கண்டாலே கமலம்மா ரொம்ப மரியாதை கொடுப்பார்களாம். அம்மாவின் ராஜ்யந்தான் அவர்கள் வீட்டில் நடக்குமாம். அண்ணன் கூட அம்மா பேச்சுக்கு மறுபேச்சுப் பேச மாட்டானாம்.

அம்மா சற்றுக் கெடுபிடிதானாம். ஆனால், நல்லவளாம். ஆனால், எல்லாரும் பயப்பட வேண்டும் என்று எதிர் பார்ப்பாளாம்.

அவள் பிறந்த வீட்டு மனிதர்கள் எல்லாரும் புறப்பட்டார்கள். வந்தனா காரில் ஏறப் போனவள் மீண்டும் வந்து,



'அக்கா..... உன்னை விட்டுட்டு எப்படி இருப்பேன்?' என்று கலங்கினாள். வசுமதிக்கும் கண்கள் கலங்கின.

'சரி.... சரி.... அண்ணி! ரொம்பப் பீலா விடாதே.... உனக்கும் சீக்கிரம் மாப்பிளை பாக்கச் சொல்லலாம்!' என்று கீதா கலாட்டா செய்தாள்.

வந்தனா சட்டென்று குரலைத் தாழ்த்தி, 'பாரு.... வேண்டாங் கலே..... ஆனா, உன் அண்ணன் மாதிரி சிடுமூஞ்சியாப் பாத்திராதே....' எனவும் பக்கத்தில் நின்ற குமார் சிரித்து விட்டான். அதற்குப் பக்கத்தில்தான் கந்தகுரு நின்றிருந்தான். அவன் காதிலும் விழுந்ததோ என்னமோ. அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

முத்துவேல் மருமகனின் கையைப் பிடித்துக் கொண்டு, கலங்கிய குரலில், 'மாப்பிள்ளை.... நல்லாப் பாத்துக்குங்க....' என்றார்.

அவன் புன்னகைத்துத் தலையாட்டினான். புறப்பட் டார்கள். சற்றுப் போன வந்தனா காருக்கருகில் நின்றபடி, 'மாமா..... இங்க வாங்க....' என்றாள் கலவரமாக.

அவன் புதிராகப் பார்த்தபடி போனான். குமாரும், ஏதோ என்று போனான். 'மாமா, நீங்க சிரிச்சாக் காசு கீசு ஒண்ணும் குடுக்க வேண்டியதில்லே...... தாராளமா சிரிக்கலாம்.... என்ன?' என்றாள்.

அவன் திகைத்துப் போய் ஒரு நிமிடம் நின்றவன், குமாரைப் பார்த்தபடி சிரித்து விட்டான். 'இது..... இது.... நல்லாருக்கு.... போலாம், ரைட்.....' என்று காருக்குள் ஏறினாள்.

'ஐயோ! என்ன வாயடிக்கிறதா?' என்ற குருவிடம், 'உன் தங்கச்சியை விடவா?' என்றான் குமார்.

'என் தங்கச்சியா?' என்று ஆச்சரியமாகப் பார்த்தான்.

'ஆமா, வசுகிட்ட கேளு.... சொல்லுவா!' என்றான் குமார்.

'அவகிட்டயா? போடா, மொதல்லயே இடங்குடுத்துப் போட்டு அப்புறம் அவங்கப்பன் மாதிரி முழிச்சிட்டு நிக்கச் சொல்றியாக்கும்....' என்று நகர்கிற அவனைச் சற்றே அதிர்ச்சி யுடன் பார்த்தான் குமார்.

அன்றிரவு....

அறைக்கு அவள் வந்தபோது அவன் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். அவள் இயல்பாக அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

'ஏன்.... குரு....?' என்று ஆரம்பிக்கவும், அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

'இத பார்.... பேரைச் சொல்லிக் கூப்டற வேலையெல்லாம் வேண்டாம். அதெல்லாம் இங்கே சரிவராது....'

அவள் அடிபட்டாற் போலப் பார்த்தாள். 'தனியாக இருக்கும் போது..... கூடவா?' என்றாள், மெல்லிய குரலில்.

'வேண்டாம்னா.... வேண்டாம்...' என்றான். முடித்து விட்டான்.

பிறகு அவள் இருப்பதையே கவனிக்காதவன் போல் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

'ஏங்க....?'

'ம்...'

'புத்தகம் நிறையப் படிப்பீங்களா?'

'ம்... பிஸினஸ் சம்பந்தமாய்ப் படிப்பேன்.... நீ...?'

'ஒரு பெட்டி நிறையப் புத்தகங்கள்தான் கொண்டு வந்திருக்கேன்...'

'அதுசரி.... உங்க வீடு மாதிரி புஸ்தகத்தை வச்சுகிட்டு உட்கார்ந்துக்காதே. வீட்டுச் சம்பந்தமான வேலைகளைப் பாரு. வந்த இடத்தைப் புரிஞ்சுக்க முயற்சி செய்....' என்றான்.



அவள் தலையாட்டிக் கொண்டாள். அவன் ஒவ்வொரு வார்த்தையும் சம்மட்டி அடிபோல் தாக்குவதை உணர்ந்தாள். அவமானமாய் உணர்ந்தாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் கழிந்தது. அவன் பாட்டுக்குப் படித்துக் கொண்டிருந்தான். என்ன செய்வதென்று தெரியவில்லை.

'சரி..... நா படுத்துக்கட்டுமா?' என்றாள். அவன் புத்தகத்தை மூடி வைத்து விட்டுத் திரும்பினான்.

'ஏன்...?' என்றான்.

'இல்லே.... நீங்க பேசவே மாட்டேங்கறீங்க....' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் தனது வழக்கமான வறண்ட குரலில் சொன்னான். 'என்ன பேசணும்? நீ அழகா இருக்கேன்னு நான் சொல்லணும். நான் அழகா இருக்கேன்னு நீ சொல்லணுமாக்கும்.'

அவள் விக்கித்துப் போய்ப் பார்த்தாள்.

அவன் தொடர்ந்தான்.

'எனக்கு உன்னைப் பிடிச்சிருக்குன்னு நான் சொல்லணும். நீயும் அதையே சொல்லுவே..... எல்லாம் தெரிஞ்சதுதானே.... அதை எத்தனை தடவை சொல்லிக்கறது....' என்றான்.

'எல்லாம் எதுக்கு? கடைசியில இதுக்குத்தான்!' என்றபடி விளக்கை அணைத்தான். லேசான குரலில் சிரித்தான்.

இகழ்ச்சியாய்ச் சிரித்த மாதிரியும் இருந்தது. குறும்பாய்ச் சிரித்த மாதிரியும் இருந்தது. வசுமதியின் உள்ளத்தில் மின்னல், இடி எல்லாம் ஒரு சேரத் தாக்கியது மாதிரி இருந்தது. எரிமலை பொங்கியது.

இத்தனை சிந்தனை உள்ளே ஓடிக் கொண்டிருந்த போதும், தன் இளமை அவனுக்குப் பதில் சொல்லிக்

கொண்டிருப்பதையும் உணர்ந்த போது தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

விக்கித்துப் போய்க் கிடந்தாள்.

தன் கணவனுக்குப் பெண்களெல்லாம் இரண்டாம் தரப் பிரஜைகளே என்று எங்கேயோ போதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பரிபூரணமாக உணர்ந்தாள். திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவனுக்குள்ளும் ஏதோ போராட்டம் நிகழ்கிற மாதிரி அவளுக்குத் தோன்றியது. அப்பா ஊருக்குப் புறப்படுமுன் தன்னிடம் தனியாகப் பேசியது நினைவுக்கு வந்தது.

'அம்மா.... இன்னைக்குப் பெண்களின் வாழ்க்கை எல்லா இடத்திலயும் சுகமா அமையறது இல்லம்மா. இந்தக் கிராமத்துக்கு வந்து பாத்ததுக்கப்புறம் எனக்குக் கொஞ்சம் பயமா இருக்கும்மா. அங்க பார்த்த மாப்பிள வேற.... இங்க பார்க்கற மாப்பிள வேற மாதிரி தெரியுதும்மா.... என்றார்.

அவள் மௌனமாக நின்றாள்.

'ஏதாச்சும் பிரச்சினையா? உடனே வந்துருன்னு.... சொல்ல முடியாத நிலைமைம்மா. வந்தனா கல்யாணம் இருக்கு. ஏதோ பிரச்சினைன்னு எம் மனசுக்குப் படுதும்மா...' என்று மறுகியவரைப் பார்த்தாள்.

வருவித்துக் கொண்ட பாவனையுடன் மலர்ச்சியாய்ச் சிரித்தாள். 'அப்படியெல்லாம் இல்லப்பா.... கிராமத்திலே ஆர்த்தடாக்ஸ் பீப்பிள்க்கு நடுவிலே வளர்ந்திருக்காரு. குடும்பத்திலே பொறுப்பிருக்கிறதுனால அதுக்கேத்த மாதிரி நடந்துக்கறாரு. அப்புறம், அந்தக் கிராமத்து மனப்பான்மை, பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவங்கங்கற மனப்பான்மை... சரியாயிடும்ப்பா!' என்றாள்.





'அது சரிம்மா..... நீ சமாளிப்பே. பணத்துனால ஏதாவது பிரச்சினைன்னா உடனே கேளு!' என்றார்.

அது இப்போது நினைவுக்கு வந்தது. பல கேள்விகள் அவளுக்குள் படையெடுத்தன. என்னதான் அறிவுபூர்வமாக யோசிக்கிறவள் என்றாலும் தான் நடத்தப்பட்ட விதம் அவளைத் தாக்கியது.

திடீரென்று அவளுக்கு அது உறைத்தது. அவன் அந்த உறவின் போது கூட மௌனமாகவே அணுகுகிறான். மறந்தும் கூட உணர்வுகளை வெளியிடுவதில்லை. கொஞ்சல், கெஞ்சல் எதுவும் இருப்பதில்லை. அந்த மாதிரி எதுவும் நிகழ்ந்து விடக் கூடாது என்பதில் படு எச்சரிக்கையாக இருக்கிற மாதிரி உணர்ந்தாள்.

இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. விம்மி அழுவதற்குக் கூடப் பயந்து கொண்டு படுத்திருந்தாள்.

அப்படியே உறங்கிப் போனாள். நடு இரவில் அவன் தன் தலையைக் கோதிக் கொடுத்தபடி பக்கத்தில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது போல் கனவு கூட வந்தது. அதே கனவிலேயே அப்படியெல்லாம் நடந்து கொள்ளத் தன் கணவனுக்குத் தெரியாது என்ற எண்ணம் கூடத் தோன்றியது. இகழ்ச்சிப் புன்னகை ஒன்று இதழ்களில் உறைந்தது.

ஏதோ சுழல் தன்னை இழுத்துக் கொண்டு போவது போல் உணர்ந்தாள்.

## 3

சமையலில் மும்முரமாய் இருந்தாள் வசுமதி.

நேற்றிரவு நடந்ததெல்லாம் கனவுபோல் இருந்தது. என்ன சொல்லி விட்டான் கணவன். வெளிப்படையாகப் புகழ்ந்து கொள்வது தனக்குப் பிடிக்கவில்லை என்கிறான். அது என்ன பெரிய தவறா என்றுகூடத் தோன்றியது.

எல்லாப் பிரச்சினையும் துச்சமாகத் தோன்றியது. வழக்கம் போல் உற்சாகமானாள். வழக்கம் போல் கீதாவும், அவளும் சமையலறையில் கிளுகிளுவென்று சிரித்தார்கள்.

'ஏய்.... கீதா.... இங்க வா. என்ன ரெண்டு பொண்ணுகளும் சிரிச்ச மாயமா இருக்கு?' என்றபடி வந்தார் அம்மா. பின்னாலேயே வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக் கொள்ளாத ஒத்து மாதிரி கமலம்மாவும் வந்தாள்.

'வருகுது.... ரெண்டு அம்மாக்களும்!' என்று கீதா சிரித்தாள். 'கப்சிப்' என்று ஆகி விட்டார்கள். அந்த நேரம் சாப்பிடுவதற்காக வந்தான் கந்தகுரு. அவனும், கீதாவும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டார்கள்.

தானும், வந்தனாவும் அம்மாவைப் பார்த்துச் சிரித்துக் கொள்கிற மாதிரி என்று நினைத்துக் கொண்டாள் வசுமதி.

அவனுக்கு டிபன் எடுத்துக் கொண்டு வந்தாள் வசுமதி.

தன் வீட்டில் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது நினைவுக்கு வந்தது. ஆனால், இங்கே அப்படியில்லை.

ஆண்கள்தான் முதலில். பெரும்பாலும் தன்னைப் பார்க்க வருகிறவர்களோடு அவனும் சாப்பிடுவான்.

பெரியத்தை பக்கத்தில் நிற்பாள். கந்தசாமி என்றுதான் அவனை அழைப்பாள்.



'புதுசாக் கல்யாணமானதுங்கன்னு ரெண்டும் தனியா விடுதுங்களா பாரு.' என்று முணுமுணுப்பாள் கீதா.

வசமதி சிரிப்பாள். 'அப்படி விட்டாலும் ஒண்ணும் பிரயோஜனமில்லே.... கீதா!' என்பாள்.

'ஏன்?'

'உங்கண்ணன் அவங்கள்ளாம் எப்பவும் எதிரில இருக்கற மாதிரித்தான் ஒரு நினைப்புல இருக்காரு!' என்றாள்.

'அது... இந்தக் கமலம்மா செய்ற வேலை. அம்மா மாதிரி வராது..... வராதுன்னு சொல்லிச் சொல்லியே எல்லாத்தையும் கெடுத்து வச்சுருக்கு.'

இதெல்லாம் கேட்கக் கேட்க வசுமதிக்கு ஒரே புதிராய் இருந்தது. ஆனால், தன் கணவன் கடுமையான உழைப்பாளி என்பதைப் புரிந்து கொண்டாள்.

காலையில் அவனும்.... அம்மாவும் புறப்பட்டால் அம்மாவைக் கொண்டு போய் நிலபுலங்களைப் பார்வையிட விட்டு விட்டுத் தானும் ஒரு ரவுண்டு தேவைகள் என்ன என்று பார்த்து விட்டுக் கிளம்புவான்.

பத்து மணிக்கு பாக்டரிக்குப் போவான். சின்னதாக விவசாயத்துக்குத் தேவையான கருவிகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி செய்கிற ஒரு பாக்டரி வைத்திருந்தான். அது அவன் கனவுத் தொழிற்சாலை என்பதைப் புரிந்து கொண்டிருந்தாள்.

பிற்பகல் உணவுக்கு வருவான். சற்று ஓய்வெடுத்து விட்டுப் போவான். மீண்டும் அம்மாவை அழைத்துக் கொண்டு மாலையில் ஏழு மணிக்கு வருவான்.

வரும்போதே களைத்து வருவான். அவளுக்குப் பாவமாக இருக்கும். ஆனால் அவள் வந்ததிலிருந்து ஜூஸ், வெஜிடபிள் சூப், சுண்டல் என்று அந்த நேரத்துக்குச் செய்து கொடுத்தாள்.

ஆனால் வந்து ஒரு குளியல் போட்டதும் சுறுசுறுப்பாகி விடுவான். அந்த நேரம் நண்பர்கள் யாராவது வருவார்கள். ஊர்ப் பெரியவர்களும் வந்து ஊர் சம்பந்தமான பொது வேலைகளுக்காக அவனைக் கலந்தாலோசித்தார்கள். சற்றுப் பேசிக் கொண்டிருப்பான். பிறகு உணவு, பிறகு மீண்டும் அம்மாவிடம் போய் அடுத்த நாள் விஷயங்களைப் பேசி விட்டு அறைக்குப் போவான்.

அவர்கள் காலையில் அந்தப்புறம் போனதும் வசுவுக்கும், கீதாவுக்கும் வேலை தொடங்கிவிடும். வீட்டுக்குள் ஆட்களை வேலைக்கு விட்டால் அம்மாவுக்குப் பிடிக்காது.

துவைத்தல், பாத்திரம் கழுவுதல் என்று எல்லாமும் அவர்களே செய்ய வேண்டும். ஆனால், கமலம்மா வீடு துடைக்கிற வேலையை மட்டும் ஆட்களை விட்டு பக்கத்திலேயே இருந்து செய்து கொள்வார்.

கீதா விளையாட்டுப் போல் செய்தாள். ஆனால் வசுமதி திணறுவாள். அம்மா அதற்கு, 'இதுதான் பட்டணத்து உடம்புங்கறது. பூஞ்சை..... எல்லாம் மேம்போக்குத்தான்!' என்று சாடுவார்.

'பாவம்..... பழக்கமில்லக்கா.... சின்னப்புள்ளைதான.....' என்று கமலம்மா பரிந்து கொண்டு வருவார்.

ஆறுதலான வார்த்தை சொல்லாவிட்டாலும் சாடுகிறாரே என்று மனது வாடும். விழுங்கிக் கொள்வாள். 'சீக்கிரம் பழகிக்கிறேங்கத்தே....' என்பாள். பேச்சை வளர்க்க மாட்டாள்.

இத்தனை முடித்ததற்கப்புறம் இரவில் சற்று நேரம் அம்மாவுக்குக் கால் அமுக்கி விட வேண்டும் என்பார் கமலம்மா. 'மருமக அமுக்கினாத்தான் நல்லாருக்காம்...' என்று காரணம் வேறு சொல்லிச் சிரிப்பார்.



கோபமும், ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வரும். பொறுத்துக் கொண்டு அறைக்குப் போய் விடுவாள்.

ஒரே ஒரு முறை கணவனிடம் சொன்னாள். அவன், 'கிராமம்ன்னா அப்படித்தான்.... இங்கு உழைப்புக்குத்தான் மரியாதை!' என்றான்.

அவளுக்குத் தன்னையும் மீறிக் கொண்டு கோபம் வந்தது. 'என்ன எதுக்கெடுத்தாலும்.... கிராமம்... கிராமங்கறீங்க. கிராமத்துல மட்டும் அன்புங்கற வார்த்தைக்கும், மனுஷத் தன்மைங்கற வார்த்தைக்கும் வேற அர்த்தமா என்ன?' என்று சீறினாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். கண்கள் பயங்கரமாக மின்னின. அவள் தோளை அழுத்திப் பிடித்தான். இதுவரை தன் வாழ்நாளில் அந்த மாதிரி நடத்தப்படாத வசுமதி அதிர்ந்து போனாள். ஆனால் நேருக்கு நேராகப் பார்த்தாள். 'என்ன, அடிப்பீங்களாக்கும்? இல்ல.... பிடிக்கலன்னா போயிருன்னு சொல்லப் போறீங்களாக்கும்!' என்றாள்.

அவன் வெறுப்போடு தள்ளி விட்டு விட்டு வெளியே போய் விட்டான். சற்று நேரம் உலவி விட்டு வந்த போது அவள் உறங்குவது போல் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தாள்.

'வசுமதி.... ஏ'ப்...' என்று அழைத்தான். அவள் விழிக்கவில்லை.

அவனும் வீம்பாக எழுந்து போய் ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டான். அந்த நேரம் போன் அடித்தது.

'உங்கப்பாகிட்டயிருந்து போன்!' என்று குரல் கொடுத்தான்.

அவள் சிறு குழந்தையைப் போல் எழுந்து ஓடி வந்தாள். அந்த செட் பேசுபவர் குரல் கேட்கும்படியான செட்.

'அப்பா....' என்றாள். தன்னையுமறியாமல் தேம்பித் தேம்பி அழுதாள். அவன் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப்புறம் அவர் தவித்துப் போனார்.

'டேய் வசு.... என்னடா ஆச்சு?' என்றார் கலங்கிய குரலில்.

'அப்பா.... இப்படி நடுக்காட்டில் விட்ட மாதிரி விட்டுட்டுப் போயிட்டீங்களே!' என்று தழுதழுத்தாள்.

'என்னம்மா.... என்ன.... யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்களா? நான் வேணா புறப்பட்டு வரட்டுமா?' என்றார். பேசிக்கொண்டே தன்னையுமறியாமல் தன் கணவனைப் பார்த்தாள்.

அடிபட்டாற்போல் அவமான உணர்வுடன் அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தவுடன் ஒரு கணம் உருகிப் போனாள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'இல்லப்ப... உங்களையெல்லாம் பார்க்காமக் கஷ்டமா இருக்குப்பா....'

'அப்பாடா! அவ்வளவுதானே! வேற ஒண்ணுமில்லயே.... என்னவோ ஏதோன்னு பயந்து போனேன்.... என்றார்.

'வேற ஒண்ணுமில்லப்பா. இங்கே எல்லாரும் நல்லா வேலை செய்யறாங்கப்பா. என்னால அந்த அளவுக்குச் செய்ய முடியலப்பா....' என்று தன் மீதே பழியைப் போட்டுக் கொள்கிற அவளை அவன் விசித்திரமாகப் பார்த்சுக் கொண்டிருந்தான்.

'அதெல்லாம் போகப் போகப் பழகிக்குவம்மா. முடிஞ்ச வரைக்கும் செய்....நா வேணா மாப்பிள்ளை கிட்டப் பேசட்டுமா? அவரு உன்னை நல்லா வச்சுக்கிறார்தானே?' என்றார்.

'ம்.... அதெல்லாம் ஒண்ணும் குறையில்லப்பா. ஆனா அவரும் ரொம்ப பிஸிதாம்ப்பா.....' என்றாள்.



'என்னம்மா.... நீ, இப்படி அழுது ஒரு நிமிஷம் வயித்தக் கலக்கிட்டியே..... மூணு பேத்திலயும் நீதான் புத்திசாலி. பொறுமைசாலின்னு நா உன்னைப் பத்திப் பெருமையா நினைச்சிருக்கேன். டீச்சரா இருந்தவ. என்னம்மா நீ?' என்றார்.

'என்னப்பா நீங்க..... யாரா இருந்தா என்ன? மனசும், உணர்வும் எல்லாத்துக்கும் ஒண்ணுதாம்ப்பா....' என்றாள். சிரித்தாள். அவள் சிரிக்கவும் அவர் சமாதானமானார்.

'இப்பத்தான் என்னோட மகள் வசுமதி..... கவிதை ஒண்ணும் எழுதலயா?' என்றார்.

'நேரம் கிடைக்கலப்பா.... முதல்ல இங்க எல்லாரையும் புரிஞ்சுக்கறம்ப்பா. அப்புறம், கவிதை எங்க போகுது! அப்பா.... அம்மா..... எப்படி இருக்காங்க? வந்தனா எப்படி இருக்கா?'

அவர் சிரித்தார். 'அம்மா, உங்கம்மா.... என்னதான் ஆர்ப்பாட்டம் செய்தாலும் ரொம்ப மிஸ் பண்றா. வசு என்ன சாப்பிட்டாளோ, தூங்கினாளோ, கிராமத்துக் கும்பல்ல தள்ளிட்டீங்கன்னு ஒரே சண்டை . ஏம்மா... நா எதுவும் தப்புப் பண்ணிடலயே?' என்றார் தயங்கியபடி.

'இல்லப்பா.... நா நல்லாத்தான் இருக்கேன். கொஞ்சம் டைம் எடுத்துகிட்டு அட்ஜஸ்ட் ஆயிடுவேன்!' என்றாள். அதற்கப்புறம் அவர் கல்யாணக் கலாட்டாக்கள் ஒன்றிரண்டைப் பேச அப்பாவும், மகளும் கலகலவென்று சிரித்துக் கொண்டார்கள். சிறு குழந்தையைப் போல அவள் இடக்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டே சிரிப்பதைப் பார்த்த கந்தகுரு ஒரு கணம் உருகிப் போனான்.

எழுந்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

'அப்பா.... கீதா இங்க ரொம்ப நல்லாப் பழகறாப்பா..... வந்தனா மாதிரியேதான்.... குறும்பு !

'அவரு எப்படி?' என்றார் அப்பா.

'ம்.... அவரா.... அவரும் நல்லவர்தாம்ப்பா.... என்ன கலகலன்னு பேசறதில்லை. மற்றப்படி எனக்கு ஒண்ணும் குறை வைக்கிறதில்லப்பா!' என்றாள். அவன் குறுகுறுவென்று பார்ப்பதைச் சட்டை செய்யவில்லை.

'மாமியார்கள்...?' என்றார்.

'ஓ.... அப்பா! அது தனி டிபார்ட்மெண்ட்ப்பா. ஒரே ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்தான்!' என்று சிரித்தாள். அவரும் சிரித்தார்.

'சரிம்மா.... சந்தோஷம்மா....'

'அப்பா....' என்றாள்.

'என்னம்மா....' என்றார்.

'இப்படி ரெண்டு மூணு நாளுக்கெல்லாம் பேசாம இருக்காதீங்கப்பா. அடிக்கடி பேசுங்க. ஏன் அம்மா பேசலே....?' என்றாள்.

'அதுவா, இன்னைக்கு வந்தனா ஒரு அல்வா செஞ்சா பாரு. அதைச் சாப்பிட்டுட்டு வாயைத் திறக்க முடியாம உட்கார்ந் திருக்கா!' என்றார்.

வசுமதி சிரித்தாள் பிறகு, 'அப்பா.... எதுக்கும் சுத்தியல் ரெடி பண்ணிக்குங்கப்பா!'

'எதுக்கும்மா?'

'இல்ல.... எப்பவும் வந்தனா அல்வா செஞ்சா..... அடுத்த நாள் சுத்தியல் வச்சுத்தானே உடைக்கணும்!' என்றாள்.

அந்தப்புறம் அவர் சத்தமாகச் சிரித்தார்.

'அப்பா! தாங்க்ஸ் பார் காலிங்ப்பா. யு ஆர் ஆல்வேஸ் மை பிரண்ட்!' என்று சிரித்தபடி போனை வைக்கிற அவளை அவன் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.



அவள் அவன் முகத்தைப் பார்க்கவும் செய்யாமல் அறைக்குப் போய் விட்டாள். அவனும் சற்றுக் கழித்து எழுந்து வந்தான்.

அவள் அமர்ந்து கொண்டிருந்தாள். அவன் சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிக் கொண்டே, "தாங்க்ஸ் வசுமதி..." என்றான்.

'எதுக்கு?' என்றாள். அவனைப் பார்க்காமல் தரையைப் பார்த்தபடி.

'விட்டுக் கொடுக்காமப் பதில் சொன்னியே, அதுக்கு!' என்றான்.

'ஆமா.... ஆரம்பத்திலேயே எங்க வீட்டுக்காரரைவிட்டுக் கொடுத்துட்டா அவரோட வொய்புக்கு ரொம்பத் தொக்காப் போயிடும்!' என்றாள்.

'யார்?' என்று அவன் பார்க்க....

'அதான்.... எங்கம்மா.... இருக்காங்களே..... தாடகை!' என்றாள்.

அவன் தன்னையும் மறந்து புன்னகைத்து விட்டான்.

'ஹேய்... வசுமதி!' என்று அவள் அருகில் அமர்ந்து அவளை நோக்கிக் கையை நீட்டினான். அவள் சட்டென்று அவன் கையைத் தட்டி விட்டாள். அவன் முகத்தை நேராகப் பார்த்தாள்.

'தேவையில்லை. நா விட்டுக் கொடுக்காமப் பேசறது என் கடமை. அதுக்கு நா எந்தச் சலுகையையும் எதிர்பார்க்கல...' என்றாள்.

சட்டென்று அவன் முகம் இறுகியது.

'இப்ப... இப்பத்தான் உங்க முகம் இயற்கையாய் இருக்கு.... மிஸ்டர் கந்தகுரு!' என்று சொல்லி விட்டு அவன் எதுவும்

சொல்வதற்கு முன்னால் திரும்பிப் படுத்துக் கொண்டு விளக்கை அணைத்து விட்டாள்.

அவன் திகைத்துப் போய் விட்டான். ஏதோ ஒரு ஆயுதத்துடன் அவள் தன் போராட்டத்தைத் தொடங்கி விட்டது போல உணர்ந்தான். தந்தை தன்னிடம் கடைசியாகப் பேசிய வார்த்தைகள் வேறு ஒரு பக்கம் எதிரொலித்தது.

வெகு நேரம் ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்து கொண்டிருந்தான். அவள் குழந்தையைப் போல் உறங்கி விட்டிருந்தாள்.

## 4

'ஹல்லோ.... எல்லாரும் என்ன செய்துகிட்டிருக்கீங்க?' என்று ஆர்ப்பாட்டமாக உள்ளே வந்தான் குமார்.

'வாடா.... எங்க சத்தத்தையே காணோம்?' என்றான், இரவு உணவு அருந்திக் கொண்டிருந்த கந்தகுரு.

அம்மா பரிமாறிக் கொண்டிருந்தாள். வசுமதி உள்ளேயிருந்து தோசை ஊற்றிக் கொண்டு வந்தாள். 'வாங்கண்ணா!' என்றாள்.

'ஏத்தே... அதான் அவனுக்குப் பரிமாறதுக்கு எங்கூட்டுப் புள்ளையே கொடுத்தாச்சில்ல... அப்புறம், நீ எதுக்கு நந்தி மாதிரி இங்க நின்னுகிட்டிருக்கே?' என்றான் குமார்.

எங்கே பழகினாலும் உரிமையாகப் பழகுவான். நெருங்கிய உறவு வேறு என்பதால் இன்னும் உரிமை. கந்தகுருவின் தாயாரும், அவனுடைய தந்தையும் பெரியப்பா, சித்தப்பா மக்கள் என்று அவனுடைய அம்மா சொல்லுவார்.



'சும்மாரா.... பொச கெட்ட பயலே! என்ன இருந்தாலும் என்ற கந்தசாமிக்கு நான் பரிமாற மாதிரி வருமா?' என்றார்.

'ஆமா... முந்தானையில முடிஞ்சு வச்சுக்க. அடடடா, எங்க போனாலும் இந்தக் கெழவிக தொல்லை தாங்கறதில்லை. எங்க வீட்லயும் ஒரு கிழவி இருக்குதே...'

'இர்றா.... ரொம்ப லொள்ளுப் பேசறேன்னு என்ற பெரியாத்தாளுக்கு ஒரு பேச்சு சொல்லிப் போடறன்.'

'இந்தா... இப்பவே பண்ணு.... இந்தா, கடலை உருண்டை குடுத்தனுப்பிச்சிருக்கு எங்க கெழவி, கொறிச்சுகிட்டே பேசு!' என்று செல்ஃபோனில் நம்பரை அடித்துக் கொடுத்தான். மறுகையால் ஒரு எவர்சில்வர் தூக்கை டொம்மென்று வைத்தான். அம்மா பேசிக் கொண்டே அந்தப்புறம் போனார்.

கீதா வந்தவள், 'வாங்க மாமா...' என்றாள். 'ஹை... அத்தை வீட்டுக் கடலை உருண்டை!' என்று தூக்கைத் திறந்தாள்.

'வசும்மா.... எனக்கும் அந்தத் தோசைதானா? என்னம்மா.... உன் கையால கிச்சடி சாப்பிடலாம்னு நெனச்சேன்!' என்றான்.

'பேசிகிட்டிருங்க.... அஞ்சே நிமிஷத்திலே செஞ்சர்றேன்!' என்று ஆர்வமாக உள்ளே போனாள்.

இந்தப் பேச்சு எதிலுமே கலந்து கொள்ளாமல் கந்தகுரு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பிட்டு முடித்து விட்டு அங்கயே ரிலாக்ஸ்டாக அமர்ந்திருந்தான்.

ஊர் நிலவரம், நிலபுலன் விவகாரம் என்று சற்றுப் பெரியத்தையிடம் பேசிவிட்டு, கமலம்மாவிடமும் பேசி விட்டு வந்தவன் கந்தகுருவின் எதிரில் அமர்ந்தான்.

சொன்ன மாதிரியே சில நிமிடங்களில் ஒரு கப்பில் சூடான கேசரியும், மற்றொன்றில் கிச்சடியும் தொட்டுக் கொள்ளச் சட்டினியும் என்று கொண்டு வந்தாள் வசுமதி.

ஒரு தட்டில் இரண்டு கப்பில் கேசரியை வைத்து 'அத்தைகளுக்கு.... என்று கீதாவிடம் கொடுத்தனுப்பினாள். ஒரு தயக்கத்துக்குப் பின் கந்தகுருவுக்கும் இரண்டு கப்புகளில் கொண்டு வந்து வைத்தாள். அவன் மறுக்கவில்லை என்றதும் நிம்மதியானாள்.

'என்னம்மா.... ஸ்வீட்ல்லாம் அசத்தறே!' என்றான்.

'ம்... எங்க வீட்டுக்குக் கல்யாணத்துக்கப்புறம் முதல் முதலா வர்றீங்க!'

'இத பார்றா... அவங்க வீடாம்!' என்று குமார் சிரித்தான். அவளும் முகம் சிவக்கச் சிரித்தாள்.

'சூப்பர்ம்மா...' என்று ரசித்துச் சாப்பிட்டான். கந்தகுருவும் கூட மௌனமாகச் சாப்பிடுவதை அவள் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டாள்.

'எப்படி எங்க வசுவோட சமையல்?' என்றான் குமார் பெருமையாக.

'ம்.... பரவால்லே.... நல்லாத்தான் பண்றா...' என்றான், கந்தகுரு, அமர்த்தலாக.

அவள் முகம் மலர்ந்து போனது.

அவன் பார்வை அவள் முகத்தின் மேல் படிந்து மீண்டது.

'ம்... இந்தக் கீதாவுக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடு. போற இடத்துக்கு உபயோகமாகும்!' என்றான்.

'நான் எதுக்குக் கத்துக்கறேன்? சமையலுக்கு ஆள் போட்டுக்குவேன்!' என்றாள் கீதா.

'ஒரு வேளை உங்க வீடு மாதிரி மாமியார் வேலைக்கு ஆள் வச்சுக்கக் கூடாதுன்னா என்ன செய்வே?'

'டைவர்ஸ் பண்ணிடுவேன்!' என்றாள் அலட்டிக் கொள்ளாமல்.



'யாரை?!' என்று குமார் திடுக்கிட்டாற் போல் நடித்தான்.

'யாரை? மாமியாரை!' என்று சொல்லவும், குமார் சிரித்து விட்டான். கீதா, குமார், வசுமதி மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கலகலவெனச் சிரித்தார்கள். கந்தகுருவைக் கண்டு கொள்ளவேயில்லை.

மறுபடியும் ஒரு முறை கந்தகுரு கேசரி வாங்கிக் கொள்ளவும், வசுமதியின் முகம் மகிழ்ச்சியால் நிறைந்தது.

'பார்றா.... நான் மூணாவது கப் வாங்கிகிட்டேன். நீ ரெண்டாவது தடவை வாங்கிகிட்டியாம். முகம் பாரு, லைட் போட்டா மாதிரி ஆயிடுச்சு!' என்று கலாட்டா செய்தான் குமார்.

'போங்கண்ணா!' என்று சற்றே வெட்கப்பட்டபடி அவள் அந்தப் பக்கம் போகவும், 'சும்மாற்றா.... டேய்.... வம்பிழுக்காதே.... அம்மா இருக்காங்க!' என்று கணவன் சொல்வது காதில் விழுந்தது.

அடுப்படியில் போய் நின்றாள். என்ன இப்படி அவனுடைய ஒரு சின்னப் பாராட்டுதலுக்கு மனசு இப்படி இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது என்று எண்ணிக் கொண்டபோது தான் அவனை முழுமையாக நேசிப்பதை உணர்ந்தாள்.

தன்னையும் அறியாமல் பெருமூச்சு விட்டாள். அவனுடைய நேசம் எப்படியிருந்தாலும் சரி... தான் அவனுடைய மனைவிதான். அதை மாற்ற முடியாது. கிடைக்கிற வாழ்க்கையை நிறைவாக்கிக் கொள்ள வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டாள்.

மனசு லேசானதாக உணர்ந்தாள்.

'வசு... இன்னும் கொஞ்சம் கிச்சடி...' என்றான் குமார். கொண்டு போனாள்.

என்னம்மா... இவ்வளவு டேஸ்ட்!' என்றான்.

'அண்ணா! நல்ல கலப்படமில்லாத நெய்யில்ல. அதனால தான் இவ்வளவு டேஸ்ட்! அப்புறம்... இங்க வெஜிடபிள்ஸ்லாம் ப்ரெஷ்ஷாய்க் கிடைக்குது....' என்றாள்.

'அண்ணா, நம்ம ஊர்ல இப்படித் தோட்டமெல்லாம் பாக்க முடியாதில்லே. அந்தப் பக்கம் எவ்வளவு பட்டாம்பூச்சிகள் தெரியுமா..... காலங்காத்தால ஒரு ரவுண்டு பார்த்துருவேன்....' என்றாள்.

'நீ பரவால்லே.. இங்கே அட்ஜஸ்ட் ஆயிட்டே.... அங்க சந்திராம்மாவும், பெரிப்பாவும்தான் வந்தனா சமையல்ல சிக்கிகிட்டுத் திண்டாடறாங்க.'

'ஏன், சமையல்காரர் என்ன ஆனாரு?'

'ம்... வந்தனா அவனைச் செய்ய விட்டாத்தானே?' என்று சற்று நேரம் அவர்கள் வீட்டுக் கதையைப் பேசினார்கள். அவள் ஆர்வமாக எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டாள்.

பிறகு அவள் அறைக்குப் போனாள். நண்பர்கள் இருவரும் மேலே ஹாலில் சோபாவில் அமர்ந்து வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பேச்சுக்கு நடுவே....

'என்னடா, இப்படிப் பண்றானுக.... நியாயமில்லடா...' என்று கணவன் உரக்கச் சொல்வது கேட்டது.

குரல்கள் அருகில், அருகில் வருவது தெரிந்தது.

'சரிடா, குரு, நா ரெண்டு மாசம் டெல்லி போக வேண்டியிருக்கு.... வந்து பேசிப் பாக்கறேன்...' என்றான் குமார்.

'இந்த வருசம் ஆடிட்டுக்குள்ளே நான் பணத்தைப் போட்டாகணும்டா!' என்றான்.

'உன்னை யார்றா கேள்வி கேக்கப் போறாங்க....?'



'யாரும் கேக்கப் போறதில்லே! ஆனா நான் கரெக்டா இருந்துக்கணுமில்லே....' என்றான் குரு.

'சரிடா... குட்நைட்..... ஏதாவது அவசரம்னா டெல்லிக்குக் கூப்பிடு!' என்று தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குப் போனான். போகும்போது... "டேய் காலையில நேரத்தில கிளம்பிடுவேன்!' என்றபடி போனான்.

அவன் அறைக்குள் வந்தபோது வசுமதி தன் மூச்சே நின்றுவிடுவது போல் உணர்ந்தாள். ஒருக்களித்து உறங்குவது போல் படுத்திருந்தாள். அவன் சட்டையைக் கழற்றி ஹாங்கரில் மாட்டி விட்டுக் கதவைச் சாத்தினான்.

அந்த ஹாலில் அந்தக் கோடியில் இருந்த அறையில் குமார் தங்கியிருந்தான்.

ஒரு வாரமாகவே கணவன் தங்கள் அறைக் கதவைச் சாத்தவில்லை என்பதையும், லேசாக ஒருக்களித்தாற் போல் திறந்து வைத்துவிட்டுப் படுத்தான் என்பதையும் அவள் நினைத்துக் கொண்டாள்.

அந்தச் சண்டைக்குப் பிறகு வீம்பாகவே இருந்தாள். அவனும் நெருங்க வில்லை.

மற்றவர்கள் முன்னிலையில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. இல்லாவிட்டால் மட்டும் ரொம்பக் கலகலப்பாய்ப் பேசிருவாராக்கும் என்று அவள் நினைத்துக் கொள்வாள்.

ஆனால், இரவிலும் தேவைக்கு மட்டுமே பேசினான்.

'ஒரு படி இறங்கி லேசாகச் சமாதானம் செய்தால் கூடப் போதும்!' என்று அவளை ஏங்க வைத்தானே தவிர, அவன் விளிம்பிலேயே நின்றான்.

இன்றைக்கு அவன் நெருங்குவது தெரிந்தது. அவள் மறுக்கவில்லை. வழக்கம் போல் மௌனமாகவே நாடகம் நடந்து முடிந்தது.

சற்று நேரத்துக்குப் பின் அந்த அமைதியில், 'கோபமெல்லாம் தீர்ந்துச்சா?' என்றாள் கொஞ்சலாக.

அவன் எழுந்து வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டு டவலால் துடைத்தபடி வந்தான். 'எங்க வீடுன்னு குமார்கிட்ட சொல்லிட்டே. இந்த வீட்ல என் பங்குக்கு நான் யாருக்கும் எந்தக் குறையும் வைக்கிறதில்லை!' என்றான்.

அவள் அடிபட்டாற் போல் பார்த்தாள். அவன் அவள் முகத்தைப் பார்க்கவில்லை. மாறாக விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

'அப்புறம்.... எனக்கு இந்தக் கொஞ்சல்.. கெஞ்சல்.. மாய்மாலமெல்லாம் பிடிக்கறதில்லே...' என்றான்.

'இது மட்டும் பிடிக்குதாக்கும்...?' என்று முணுமுணுத்தாள்.

'தேவைகள்.... எல்லாமே... தேவைகள்....அவ்வளவுதான்!' என்றான் வறண்ட குரலில்.

அவள் எழுந்து அமர்ந்தாள். அவனை ஆழமாகப் பார்த்தாள்.

'என்ன?' என்றான்.

'நீங்க எங்கயோ பெருசா அடி வாங்கியிருக்கீங்க!' என்றாள்.

'இங்க பார்.... வசுமதி... நீ ரொம்பக் கனவு காணறே... இந்தக் குமார் பய மாதிரி, இல்லாத அழுகுகளையும், சோகங்களையும் கற்பனை பண்ணிக்கறே... ஐ டோன்ட் கேர் பார் தட்...'

அவள் ஒன்றும் பேசவில்லை. அவன் காலை ரிலாக்ஸ்டாக நீட்டிக் கொண்டான்.



'நா எல்லாத்திலயும் சிஸ்டமாடிக்தான். தேவைகள்ன்னு சொல்றானேன்னு சந்தேகப்பட்றாதே... உன்னை மட்டுந்தான் தொட்டேன். உன்னை மட்டுந்தான் தொடுவேன்!' என்றான்.

அவள் கேலியாகச் சிரித்தாள். 'வழக்கமாய்ப் பேசமாட்டீங்க. இன்னைக்கு ரொம்ப பேசிட்டீங்க!' என்றாள்.

அவன் அவள் கேலியைச் சட்டையே செய்யவில்லை. மாறாக.... 'இதையெல்லாம் குமார்கிட்ட பேசிட்டிருக்காதே...' என்றான்.

'இன்னும் அவ்வளவுக்குப் புத்தி கெட்டுப் போகலை!' என்றாள்.

அவன் லேசாகச் சிரித்தான். 'ஆனா.... ஒரு விஷயம் பிடிச்சிருக்கு... இப்படி சாலன்ஜ் பண்ற பாரு.... அது!' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. எழுந்து குளிக்கப் போனாள்.

தலையில் நீர் கொட்டக் கொட்டக் கண்களிலிருந்து கண்ணீரும் வழிந்தது. ஆனால், இத்தனைக்கும் நடுவிலும், 'உன்னைத்தான் தொட்டேன், தொடுவேன்!' என்று அவன் சொன்னதைக் கேட்டு இந்தப் பாழும் மனது குதி போடுகிறதே என்று நொந்து கொண்டாள்.

அவன் சொன்னது உண்மைதான்.

உண்பதிலோ, மற்ற விஷயங்களிலோ எதுவும் குறையிருக்கவில்லை. என்ன பிடித்தாலும் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் மனதில் குறை...?

கீதாவிடமும் எல்லாவற்றையும் பேசி விட முடியவில்லை. சின்னப் பெண். அவளிடம் மட்டும் தன் கணவன் காட்டுகிற மென்மையைப் பார்த்து அவளுக்குச் சற்றுப் பொறாமை கூட வந்தது. ஆனால், கீதாவின் கள்ளமில்லாத அன்பு அவள் மனத்தைக் கொள்ளை கொண்டது.

தன் உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ள யாருமில்லையென்று தன்னிரக்கம் கண்ணீராய் வடிந்தது.

யோசித்துக் கொண்டே பத்து நிமிடத்துக்கு மேல் நின்று கொண்டிருந்தாள்.

– – – – –

வழக்கம் போல் ஐந்து மணிக்கே விழித்து விட்டாள்.

விழித்தவுடனேயே, குமாரண்ணா நேரத்திலேயே போக வேண்டுமென்று சொன்னது நினைவுக்கு வந்தது.

கீழே இறங்கி வந்தாள். குமாரும் கூட அதற்குள் குளித்திருந்தான். அவள் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த போது அடுக்களைக்கு வந்தான்.

'என்னம்மா... குரு நல்லா வச்சுக்கறானா?' என்றான்.

அவள், அவன் கண்களை நேராகப் பார்க்காமல், அவசரமாக அடுப்பைக் குனிந்து பார்த்தபடி, 'ம்...' என்றாள்.

'வசு... இவன் என் ஃப்ரெண்ட் குரு இல்லை. அவனுக்குள்ளே ஏதோ ஒரு பிரச்சினை இருக்கு. ஒருவேளை இடம் கொடுத்துட்டா சந்திரா பெரியம்மா மாதிரி நீயும் டாமினேட் பண்ணிடுவேன்னு பயப்படறானோ....' என்றான்.

அவள், 'இருக்கலாம்' என்பது போலச் சகோதரனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

'ஆமாண்ணா, இயல்பா இருக்கறதில்லை!' என்றாள்.

'கொஞ்சம் பொறுத்துப் போம்மா..... விட்டுக் கொடு.... என்ன? அவன் குழப்பம் என்னன்னு அவனா சொல்லாதவரை நானும் சடார்ன்னு தலையிடக் கூடாது. ரொம்பத் தாங்க முடியாத நிலை வந்தா என்கிட்டே பேசு... நா பாத்துக்கறேன். பெரிப்பாகிட்டே எதுவும் சொல்லாதே.... என்ன?' என்றான்.



சட்டென்று எல்லா டென்ஷனும் வடிந்தாற் போல் உணர்ந்தாள் வசுமதி. 'சரிண்ணா!' என்றாள்.

அந்த நேரம் கீதாவும் வந்தாள். வசுமதி அவளுக்கும் தேநீர் தந்தாள்.

'அட, தூங்குமூஞ்சி.... என்ன ஆச்சரியம்? இந்த நேரத்துக்கு எழுந்திரிச்சிட்டே...' என்றான் குமார்.

'போங்க மாமா.... நேரத்துலயே கிளம்பறேன்னு சொன்னீங்களேன்னு.... வந்தேன்!' என்றாள்.

'டெல்லியிலிருந்து என்ன வாங்கிட்டு வரட்டும்?' என்று இருவரையும் பார்த்துப் பொதுவாகக் கேட்டான்.

'ஒண்ணும் வேண்டாம்ண்ணா. நீங்க பத்திரமாய்ப் போயிட்டு வாங்க!' என்று சிரித்தபடி அவள் பாத்திரங்களை வைத்து விட்டு வந்த போதுதான் அந்தக் காட்சியைக் கண்டாள்.

அண்ணன் கீதாவுக்குக் கண்களால் ஏதோ சேதி சொல்லுவதையும், அவள் முகம் சிவக்க நிற்பதையும் பார்த்தாள். தன் காலடிச் சத்தம் கேட்டதும் அவன் தன்னை மீட்டுக் கொள்வதையும் கண்டாள்.

கீதா, 'அண்ணி, மாமா டெல்லியெல்லாம் போயிப் பெரிய ஆளாகப் போறாரு. இனி நம்மளையெல்லாம் மறந்துடுவாரு!' என்றாள்.

'எங்க போனாலும் நம்ம வீட்டுக்கு வந்தா சாப்பிடற ரசஞ்சோறு ரொம்பப் பிடிக்குதில்ல!' என்றான். கீதா சட்டென்று உள்ளே போய்விட்டாள்.

'அண்ணா, நீங்க ரசஞ்சோத்தைத்தானே சொல்றீங்க?' என்று வசுமதி கேள்விக் குறியுடன் பார்க்க.....

'நீ எப்படி எடுத்துகிட்டாலும் சரிம்மா...' என்றான்.

'அண்ணா!' என்றாள் மகிழ்ச்சியுடன். அதற்குள் கந்தகுரு வரவும் அதோடு நிறுத்தி விட்டார்கள்.

காரில் ஏறும்போது, 'டேய்.... தடியா.... தங்கச்சியை நல்லாப் பாத்துக்க. நீயும் ஒரு நாளைக்கு என் தங்கச்சியை நல்லாப் பாத்துக்குங்கன்னு.... ஒருத்தர்கிட்டே கெஞ்சிட்டு நிக்கணும். ஞாபகம் வச்சுக்க!' என்று ஒரு போடு போட்டு விட்டுப் போனான்.

## 5

குமார் கிளம்பிப் போனதற்குப் பிறகு வசுமதி மிகவும் களைப்பாக உணர்ந்தாள்.

என்ன பிரச்சினை யென்றாலும் சொல் என்றுதான் அண்ணன் சொன்னான். அப்போதைக்கு அவளுக்குச் சாய்ந்து கொள்ள ஒரு தோள் கிடைத்தது என்று சந்தோஷமாக இருந்தது. ஆனால், பிறகு அடுப்படியில் நின்றபடி யோசித்த போது இந்தப் பிரச்சினையை என்னவென்று போய் அவனிடம் சொல்வது என்று தோன்றியது.

மனது சலிப்பாய் உணர்ந்தது. எதற்காக இந்தக் கல்யாணம்? அன்பைப் போராடிப் பெற முடியுமா? ஆனால், அவன் நேர்மை, உழைப்பு இதையெல்லாம் ஒவ்வொருவரும் சொல்லக் கேள்விப் பட்ட அவள், தன்னிடம் மட்டும் ஏதோ ஒரு கவசம் போட்டுக் கொள்கிறான் என்றுதான் நினைத்தாள். இல்லை, அவன் மனதுக்குள் ஏதோ ஒரு காயம் இருக்கிறதோ என்று தோன்றியது. ஏதாவது காதல்.... கீதல் இருக்குமோ.

கல்யாணத்துக்கு முன்பே குமாரிடம் ஜாடைமாடையாக விசாரித்திருந்தாள். அவன் சிரித்தான். 'குருவுக்கு அதிலெல்லாம் பெரிய ஆர்வமில்லை!' என்றான். 'போவதற்கு இன்னும் நெடுந் தொலைவு இருக்கிறது!' என்ற டாகூரின் கவிதைதான்



நினைவுக்கு வந்தது. முடிந்தவரை பார்க்கலாம். பிறகு ஏதாவது ஒரு வழி பிறக்காமலா இருக்கும் என்று எண்ணிக் கொண்டாள்.

தலையெல்லாம் பாரமாக இருந்தது. நேற்று அவ்வளவு நேரம் ஷவரில் நின்றிருந்திருக்கக் கூடாது.

கீதாவும், அவளும் தேநீரை எடுத்துக் கொண்டு பின் கட்டுக்குப் போய் விட்டார்கள். அது அவர்களுக்கான நேரம். சற்று நேரம் சிரித்துக் கொள்வார்கள்.

'கீதா, ரொம்பக் களைப்பா இருக்கு. சிம்பிளா ஏதாவது செஞ்சுக்கலாமா?'

'சரிண்ணி, துணிகளைக் கூட கொஞ்சமாத் துவைச்சுக் கலாம். மீதிய நாளைக்குப் பாத்துக்கலாம். நம்ம பண்ணையத்து ஆளுங்கலாம் உன்னைப் பாக்க நம்ம வீட்டுக்கு வராங்களாம். அதனாலே டிஃபன் மட்டும் செஞ்சாப் போதும்!' என்றாள்.

வசுமதிக்கு இன்னும் சலிப்பாக இருந்தது. 'ஹோஸ்ட் ரோல்' வேறு ப்ளே பண்ண வேண்டுமா என்றிருந்தது.

'டிஃபன் வேலைதானே, ஏழு மணிக்கு ஆரம்பிச்சாப் போதும். நா பாத்துக்கறேன். நீ போ அண்ணி!' என்றாள் கீதா.

ஒரு நன்றிப் பார்வையை வீசி விட்டு அறைக்குப் போனவள் ஏழு மணி வரை உறங்கி விட்டாள்.

'ஹேய் வசுமதி, என்ன இப்படித் தூக்கம்?' என்று கணவன் எழுப்பவும்தான் எழுந்தாள். அவசரமாய்க் குளித்து விட்டுக் கீழே வந்தாள்.

'வா அண்ணி!' என்றாள் கீதா. பின்கட்டில் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தாள்.

பெரியத்தை பெரிய அடுப்புக் கூட்டி ஒரு பெரிய பாத்திரம் வைத்து அதிலே ஏதோ கிண்டிக் கொண்டிருந்தாள். அவள் எட்டிப் பார்ப்பதைப் பார்த்தவுடன், 'வா... அம்மணி, என்ன

பாக்கறே? இதுக்குப் பேருதான் களி.... ராய்க்களி!' என்றாள் கமலம்மா.

'அம்மணிக்கு அதெல்லாம் எங்க தெரியும். அவங்களுக் கெல்லாம் புலாவ், ரைஸ், சில்லி மசாலா, அதென்ன கோபி செஞ்சுரியா என்று அம்மா சொல்லவும், கீதா –

'வர்லேன்னா விடேம்மா.... கோபி செஞ்சுரி.... இல்லே.... கோபி மஞ்சூரியன்!' என்று சிரித்தாள்.

கமலம்மா ஒரு சட்டியில் கீரை கடைய ஆரம்பித்தாள். அம்மா தொடர்ந்து, 'ம்... நீ என்னமோ சொன்னயே, அதெல்லாம் தான் தெரியும்!' என்றாள்.

வசுமதி அதைச் சட்டை செய்யவில்லை. மாறாக அவர் லாவகமாகக் கிண்டுவதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். பெரியத்தை – (அவள் பேரே பெரியாத்தாதானாம்) எப்போது பார்த்தாலும் மட்டம் தட்டிக் கொண்டிருந்தாலும், வசுமதிக்கு இப்போது பழகிப் போய்விட்டது.

'சரி.... அவங்க அப்படித்தான். அம்மா மாதிரி...' என்று நினைத்துக் கொண்டாள்.

'நான் டிரை பண்ணட்டுமா?' என்றாள்.

'சேரி.... இந்தா....' என்று கொடுத்தாள் அம்மா.

பெரிய மரச்சட்டுவத்தைக் கையில் பிடித்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அது சண்டித்தனம் செய்தது.

இரண்டு மாமியார்களும் சிரித்தார்கள். அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது.

அந்தச் சமயம் அங்கே வந்த கந்தகுரு தலையிடாமல் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அண்ணி, இரு. நான் சொல்லித் தரேன்!' என்று கீதா சொல்லித் தந்தாள்.



முதல் முறை முயற்சி செய்தாள் முடியவில்லை. இரண்டாம் முறை ஏதோ கிரிக்கெட் வீரன் மட்டையைத் திருப்பிப் பார்ப்பதைப் போல் பார்த்து விட்டு முயற்சி செய்தாள். பிடி கிடைத்து விட்டது. மறுபடியும் சிரித்தார்கள்.

'ம்.... தெரிஞ்சிடுச்சு!' என்று அத்தையைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தாள். ஒரு நிமிடம் அவள் கள்ளமில்லாமல் சிரிப்பதை இரண்டு மாமியார்களும் தங்களை மறந்து பார்த்தார்கள். கந்தகுரு கூடப் புன்னகைத்துக் கொண்டான்.

'வா.... கீதா.... நாமளே செய்யலாம்!' என்று இரண்டு பேருமாகச் செய்தார்கள்.

சற்று நேரத்துக்குப் பிறகு, 'கை வலிக்குதில்ல, கீதா. ஆனா, அத்தை எப்படி ஈஸியாச் செய்யறாங்க?' என்றாள்.

கந்தகுரு நகராமல் நின்று கொண்டிருந்தான். அவளுடைய வீட்டில் அவளுக்கென்றே ஒரு வேலைக்காரி இருப்பதையும், பெட் காஃபியோடுதான் அவளை எழுப்பு வார்கள் என்பதையும் சென்ற முறை சென்ற போது சொல்லிக் கேட்டிருந்தான். வசுமதியின் அப்பா கூடச் சில விஷயங்களில் அவளுடைய ஆலோசனை கேட்கிறார். போஸ்ட் கிராஜுவேட். அப்படிப்பட்ட பெண் இப்போது களி கிண்டிக் கொண்டிருக் கிறாள் என்று எண்ணிக் கொண்ட போது அவன் மனம் லேசாக நெகிழ்ந்தது.

அப்படியே இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு போக வேண்டும் என்ற பரபரப்பு தோன்றுவதைக் குறித்துத் திடுக்கிட்டுப் போனான். நிறையக் குரல்கள் கலகலவென்று சிரிப்பதைக் கேட்டுப் பூவுலகுக்கு வந்தான்.

'ஐயோ.... சின்னப் பண்ணாடிச்சி களி கிண்டுறாங்கடி....' என்று அவர்களது பண்ணையில் வேலை செய்கிற பெண்கள் கூட்டமாக நின்று சிரிப்பதைப் பார்த்தான்.

சட்டென்று அதைக் கீதா கையில் கொடுத்து விட்டு. 'பாருங்கத்தை.... சிரிக்கிறாங்க!' என்று அம்மாவின் தோளில் சாய்ந்தபடி அவள் பக்கத்தில் போய் நின்று கொண்டாள் வசுமதி. அவளது இயற்கையான அந்தச் செய்கையில் அந்தக் கணம் கந்தகுரு தன் உள்ளம் கொள்ளை போய்க் கொண்டிருப்பது போல் உணர்ந்தான்.

அவள் எல்லாரும் பார்த்தாலே பயப்படுகிற அம்மாவின் தோளில் சட்டென்று முகம் புதைத்துக் கொள்வதையும், அம்மா அந்த ஸ்பரிசத்தில் நெகிழ்கிற விதத்தையும் பார்த்துக் கொண்டு நின்றான். அவள் தொடுகையில் ஏதோ மந்திரம் இருக்கிறது என்றெண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

சட்டென்று அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்த அம்மா, 'போங்கடி.... என்ற அம்மிணியைப் பாத்துச் சிரிக்கிறீங்களாக்கும். களி செய்றது அவளுக்குப் புதுசு. பழக்கமில்லே! என்ற மருமகளை என்னடி நெனச்சீங்க? ஏய், கீதாப் புள்ளே! நேத்து செஞ்சாளே கேசரி. அதையும், முந்தா நேத்து செஞ்சாளே. அந்த ரவா லட்டு அதையும் இவளு களுக்குக் கொஞ்சம் கொண்டு வந்து குடு...' என்று கட்டையைத் தான் வாங்கி வேகமாகக் கிண்டினாள்.

கீதா கொண்டு வந்து விநியோகிக்கையில் வசுமதியும் சேர்ந்து கொண்டாள்.

'நெசமாலும் நல்லாருக்குதுங்கோ!' என்றார்கள் பெண்கள்.

'அதெல்லாம் சரி. சின்னப் பண்ணாடி பக்கத்துல போய் நில்லுங்க. நாங்கல்லாம் கொஞ்சம் பாத்துக்கறமுங்க!' என்று வயதான ஒரு பெண் கூறவும், அவள் மாமியாரைப் பார்த்தாள். அவள் சம்மதம் கொடுக்கவும் வெட்கத்துடன் அவன் அருகில் நின்றாள்.



'சமையல் நல்லாருக்குதுங்க. அதானுங்க சின்னப் பண்ணாடி பளபளன்னு ஆயிட்டு வாராங்க!' என்றாள் அதே பெண்மணி.

'கொலுசாத்தா. அம்மிணி யாருன்னு நெனச்சே? உங்க எசமானியம்மா. ரொம்பப் பேசுனே. ரெண்டு நாளுக்க வேலை கெடையாது, ஆமா!' என்றான் கந்தகுரு. அவள் தோள் மேல் கையைப் போட்டுத் தன்னருகில் நிறுத்திக் கொண்டான்.

மீண்டும் வெடிச் சிரிப்பு. பிறகு அவன், 'செரி.... செரி.... எல்லாரும் சாப்பிட்டுப் போட்டுத்தான் போகோணும். என்ன?' என்றான்.

'என்னத்தைங்க. இந்தக் களியைங்களா?' என்றாள் ஒருத்தி குறும்பாக.

'அடியே! என்ற அக்கா கிண்டற களியைப் பத்தி உனக்கென்னடி தெரியும்? உங்களுக்கெல்லாம் கொடுத்து வக்கலடி. உங்களுக்கு வேற சோறு வருது. பிரியாணியாக்கும்....' என்றாள் கமலம்மா.

கந்தகுரு நகர்ந்து விட்டான். முன்கட்டில் நின்று கொண்டிருந்த ஆண்களிடம் பேசப் போய் விட்டான்.

அங்கேயும் அவளை அவன் அருகில் சற்று சோஃபாவில் உட்கார வைத்தார்கள்.

'ஏனுங்க பண்ணாடி, சின்னப் பண்ணாடிச்சி நம்மூட்டுக்கு வந்ததுக்கு அடையாளமா கொஞ்சம் கூலி கூட்டிக் குடுக்கலாமில்ல...' என்றான் ஒருவன்.

'இத பார்றா.... நேரம் பாத்துக் கேக்கறான்!' என்று சிரித்தான் கந்தகுரு. பிறகு, 'உங்களுக்கென்னப்பா குறை வச்சிருக்கேன். இருக்கறதுக்கு வீடு குடுத்திருக்கேன். புள்ளைங்க படிப்புச் செலவுக்குப் பணம் குடுக்கறேன். குரூப் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடு

பண்ணியிருக்கேன். நீயி... கேட்டயே முனியாண்டி. தண்ணி போடறதை நிறுத்து. கூலி கூட்டித் தர்றேன்!' என்றான்.

எல்லாரும் கப்சிப். வயதில் ஒரு பெரியவர் மட்டும், 'ஆமாங்க... பண்ணாடி நீங்க தண்ணி போடற பயலுகளுக்கு ஒண்ணும் செய்யாதீங்க. நீங்க எவ்வளவு நல்லது செய்யறீங்க. அக்கம் பக்கத்துப் பண்ணையத்துல எங்கயும் இப்படியில்லீங்க. எங்க பண்ணாடி எங்களுக்கு பி.எஃப். மாதிரிப் பணம் போடறாங்க. பென்சனுக்கும் ஏற்பாடு பண்ணப் போறாங்க ளாம்ன்னு சொன்னா வாயைப் பொளக்கிறாங்க!' என்றார்.

'அதான். அதேதான். கல்யாணம் நிச்சயமான மாசத்திலே யிருந்தே உங்களுக்குப் பென்சன் திட்டத்துல போடறதுக்குப் பிளான் போட்டுப் பணம் போட்டிருக்கேன். ஆனா, உங்க பேர்ல இல்ல. உங்க சம்சாரத்துங்க பேர்ல. ஃபார்ம்ல கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாங்க. உங்ககிட்ட விவரம் சொல்லலை யாக்கும். கெட்டிக்காரப் பொம்பளைங்கப்பா!' என்று அவன் சிரிக்கவும், பெணகள் சிரித்தார்கள்.

ஆண்கள் திகைத்துப் போய் நின்றார்கள். வசுமதி தன் கணவனை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சரி... சரி.... சாப்பாடு வந்துருச்சு. சாப்பிட்டுப் போட்டு உங்க சின்னப் பண்ணாடிச்சி கையால துணிமணி வாங்கிக்குங்க!' என்றான்.

எழுந்து நின்று மேற்பார்வை செய்தான்.

மாமியார்கள் மேற்பார்வையில் வயிறார உணவு வழங்கப் படுவதையும், அவனுக்குக் கொடுக்கப்படுகிற மரியாதையையும் பார்த்து மலைத்துப் போனாள்.

அவளையே எல்லாருக்கும் துணிமணி கொடுக்கச் சொன்னார்கள். கொடுத்தாள். சாயங்காலம் தியேட்டரில் சினிமா பார்ப்பதற்கென்று டிக்கெட் விநியோகிக்கப்பட்டது. அவர்கள் மகிழ்ச்சியாகப் போனார்கள்.



மாலையாகி விட்டது. வீட்டுக்குள் வந்தவுடனேதான் நினைவுக்கு வந்தது. 'ஐய்யோ... கீதா! துணி நனைச்சு வச்சுட்டு மறந்தாச்சு...' என்றாள்.

துவைத்தார்கள். கையைத் துடைத்துக் கொண்டு வந்த போது வெகு களைப்பாக இருந்தது. அதிசயமாக கமலம்மா டீ கொண்டு வந்து கொடுத்தாள்.

கந்தகுரு ஹாலில் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தான்.

கமலம்மா... 'அக்கோவ்! இப்ப வந்த மருமகளுக்கும் கூடத் தெரிஞ்சு போச்சு.... நீதான் இந்த வீட்டு அதிகாரின்னு. டக்குன்னு உன்ற தோள்லதான வந்து சாஞ்சா....' என்று கலாட்டா செய்தார்.

பெரிய மமியார் சிரித்தார். 'எல்லாம் என்ற மகனோட ட்ரெயினிங்குதானம்மிணி' என்றவர், கைப்பிடியில் நிறைய மிளகாய் வைத்துக் கொண்டு நின்றார்.

கீதா, 'கமலம்மா.... அம்மா பயங்கரமான ஆளு... மருமகளுக்குக் களி கிண்டத் தெரியலேன்னு அந்தப் பொம்பளைங்க சொன்னவுடனே எவ்வளவு ரோஷம் வந்துச்சு பாரு. என்னடி நினைச்சிங்க.... அவ செஞ்ச கேசரி பாருங்க.... லட்டு பாருங்கன்னு எவ்வளவு பெருமை!' என்றாள்.

'ஆமா.... புள்ள! என்ற மருமகளை நான் ஆயிரஞ் சொல்லுவேன். அடிச்சாலும், புடிச்சாலும் என்ற மருமக, பண்ணையத்து ஆளுங்களுக்கெல்லாமா விட்டுக்கொடுப்பேன்?' என்றார்.

கந்தகுரு இதை யெல்லாம் காது கேளாதவன் போல் கேட்டுக் கொண்டிருந்தான்.

'ரொம்பத் தேங்ஸ்ங்கத்தை!' என்றாள் வசுமதி.

'அடேய்.... தேங்ஸீ சொல்றாடா!' என்று கமலம்மா சொல்லவும், அவனும் கலந்து கொண்டான்.

'அம்மா.... நம்மளை இதிலே இழுக்காதீங்க!' என்றான்.

'ஆனா... அண்ணி வெட்கப்பட்டுட்டு நிக்கறப்போ முழுங்கற மாதிரிப் பாத்தியாம். அந்தப் பொங்கியாத்தாளும், சரசுவும் எங்கிட்ட சொல்லிட்டு சிரிக்கறாங்க!' என்றாள் கீதா.

'அதுகளுக்கென்ன வேலை? பொழப்பு கெட்டதுங்க!' என்று அவன் சிவந்த முகத்துடன் எழுந்து போக முயற்சிக்கவும்..

'இர்றா.... சுத்திப் போட்டர்றேன். எல்லாக் கண்ணும் உங்க மேலதான்!' என்று சுத்திப் போட்டார் அம்மா.

மிளகாயை அடுப்பில் போட்டு விட்டு வந்து, 'பாத்தியா.... எத்தனை திருஷ்டி அம்மிணி, காரலே இல்லே. ஊர்க்கண்ணு பூரா உங்க மேலதான்!' என்று அங்கலாய்த்தார்.

மத்தியானம் ஆசைக்காகச் சாப்பிட்ட களியே வசுமதிக்கு நிறைந்த மாதிரி இருந்தது. இரண்டு இட்லி மட்டும் சாப்பிட்டாள். அவள் களைப்பைப் பார்த்த கமலம்மா, 'சரி..... நீ போய் ரெஸ்ட் எடு, போ....' என்றார்.

அறைக்குப் போனார்கள். அவளுக்கு ஏனோ உடம்பு அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. மூக்கு நுனி சிவந்திருந்தது. உதடுகள் வெகுவாகச் சிவந்திருந்தன. எப்போதும் அவளுக்குக் காய்ச்சல் வந்தால் உதடுகள் சிவந்து விடும். படுத்து விட்டாள். பகலா, இரவா எனத் தெரியாத நிலையில் களைப்பு அவளை ஆட்கொண்டது. அறைக்கு வந்த அவன் அவள் களைத்துக் கிடந்த விதம் பார்த்து, 'வசுமதி!' என்று எழுப்பினான்.

அவள் உள்ளங்கையில் அவன் கை பட்டவுடன் அவள் 'ஷ்' என்று வலியில் முனகினாள். உள்ளங்கையை எடுத்துப் பார்த்தான். இரத்தம் உறைந்திருந்தது. துவைக்கும் போது ஏதோ கீறியிருந்தது. அவன் லேசாக ஈரப் பஞ்சில் துடைத்து விட்டு மருந்துப் பவுடரைப் போட்டு விட்டான். 'குரோசின்' மாத்திரை



ஒன்று கொடுத்துச் சாப்பிடச் செய்தான். அவள் துவண்டு போனவளாகச் சாய்ந்தாள்.

அந்த அரை மயக்கத்திலும் 'தாங்க்ஸ்' என்றாள். குனிந்து அவளைப் படுக்க வைத்து விட்டு நிமிர்ந்த போது, அவன் கன்னத்தைத் தடவி, 'மிஸ்டர் கந்தகுரு .....யு ஆர் எ கோல்ட் ஹார்ட்டெட் பர்ஸன். லவ்வபிள்!' என்றாள்.

'நீங்க காட்டிக்கிற அளவுக்கு ஒண்ணும் கல் நெஞ்சன் இல்லே...' என்று உளறலாகச் சொன்னாள்.

அவன் திகைத்துப் போனான். 'ஹேய்! நீ ரொம்ப டயர்டாயிருக்கே.. தூங்கு!' என்றபடி அருகில் அமர்ந்து முதுகில் தட்டிக் கொடுத்தான். அவள் ஆழ்ந்து உறங்கி விட்டாள்.

கழுத்தைத் தொட்டுப் பார்த்தான். லேசாகக் காய்ச்சல் இருந்தது. சிந்தனையுடன் அருகில் அமர்ந்திருந்தான். கீழே போய்ச் சொன்னதும் எல்லாரும் வந்து பார்த்தார்கள்.

'நா பாத்துக்கறேன். ஏதாவது வேணும்னா கூப்பிடறேன்!' என்றான்.

'இல்லண்ணா, நா இருக்கேன்!' என்று கீதா அங்கேயே படுத்தாள்.

அவனும் ஹால் சோஃபாவில் படுத்தான். கோல்ட் ஹார்ட்டெட், லவ்வபிள் என்ற வார்த்தைகள் அவனுக்குள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தின. திரும்பத் திரும்ப ஒலித்தன.

அதே சமயம் வேறொரு குரல் ஒலித்தது. 'டேய்.... ஜாக்கிரதை... பொம்பளைங்களை நம்பாதே.... நாம என்னதான் உசுரையே குடுத்தாலும்.... நம்மகிட்ட எல்லாத்தையும் சொல்ல மாட்டாளுக. அவங்க துணை வேணும்டா.... இல்லாம முடியாது. ஆனா.... நமக்குக் கீழேங்கறதைப் புரிய வச்சிரணும்டா.... முழுசும் நம்பக் கூடாதுடா. சாக்கிரதை....' என்று அவன் அப்பா புலம்பியதுதான் அவனிடம் கடைசியாகப் பேசியது.

அவன் குழம்பிப் போனான். எவ்வளவு யதார்த்தமாக இருக்கிறாள். வசதியான வீட்டுப் பெண் தன் மனைவி. இந்த வீட்டில் வந்து தன் சக்திக்கு மீறி உழைத்துக் கொண்டு.... சே... என்று நொந்து கொண்டான்.

அவளை நினைத்துக் கொண்டே படுத்திருந்தான். அப்படியே சற்று உறங்கி விட்டான்.

## 6

நன்றாகத் தெளிவு வந்த போது கீழே இருக்கிற விருந்தினர் அறையிலுள்ள படுக்கையில் தான் படுத்திருப்பதை வசுமதி உணர்ந்தாள்.

இளங்காலைச் சூரியனின் கதிர்கள் உள்ளே பாய்ந்து கொண்டிருந்தன. கணவன் பக்கத்தில் ஈஸி சேரில் உறங்கிக் கொண்டிருந்தவன் அசைவு கேட்டு விழித்தான்.

'ஹலோ... குட் மார்னிங்!' என்றான்.

'குட் மார்னிங்!' என்று புன்னகைத்தாள்.

'ராத்திரி முழுக்க உட்கார்ந்திருந்தீங்களா, என்ன?' என்றாள்.

'மேடம்! காய்ச்சல்னு படுத்து மூணு நாளாயிருச்சுங்க.... வீட்டையே ஒரு கலக்கு கலக்கிட்டிங்க....' என்று அவன் சிரிப்பதைப் பார்த்து,

'ஓ....! மூணு நாளா!' என்றாள் திகைப்புடன்.

'அண்ணி!' என்று கீதா வந்தாள். வைரஸ் ஃபீவராம். ஒரே தூக்கந்தான். டாக்டர் வந்து பாத்துட்டுப் போனாங்க!' என்றாள்.



அன்று கொஞ்சம் தெளிவாக உணர்ந்தாள். ஓய்வு கிடைத்துக் கீதா வந்த போது, 'ஊருக்கு ஃபோன் பண்ணினீங் களா?' என்று கீதாவிடம் கேட்டாள்.

'இல்லையே, அண்ணி. முந்தா நேத்தே கேட்டப்ப, வேண்டாம், அம்மா ஆர்ப்பாட்டம் செய்வாங்க. அப்புறம் நல்லானதுக்கப்புறம் சொல்லிக்கலாம்ன்னு சொன்னியே!' என்றாள்.

'ஓ! அப்படியா சொன்னேன். அது கரெக்ட்டுத்தான்!' என்றாள்.

தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது என்றவுடன் அவர்கள் பட்ட கவலையை யெல்லாம் கீதா சொல்லச் சொல்ல அவள் ஆச்சரியப்பட்டாள்.

எப்போதும் கோபம் வந்து பார்த்திராத அண்ணனுக்குக் கூடக் கோபம் வந்ததாம். அவள் அரற்றியதையும், முனகியதை யும் கவலையுடன் பார்த்தவன் அம்மாவிடம் போய்....

'அம்மா.... பழக்கறேன்.... ஸ்ட்ரிக்டா இருக்கறேன்னுட்டு அவளை வறுத்து எடுத்துட்டீங்க. பட்டணத்துல ரொம்ப வசதியா இருந்தவ. அவளைக் கவனிக்கறத்துக்கு மட்டும் ரெண்டு வேலைக்காரங்க வச்சிருக்காங்க, எங்க மாமியாரம்மா. அந்தம்மா பேசற வாய்க்கு எம் மகளை ஒரே மாசத்திலே இப்படி ஆக்கிட்டியேடா. இதுக்கா பொண்ணைக் கொடுத்தேன்னு கேட்டா.... என்ன சொல்ல?' என்றானாம்.

'ஐயய்யோ! அதுக்கு அத்தை என்ன சொன்னாங்க?' என்றாள் கலவரமாக.

'நானே அதை நெனச்சுத்தான்டா வருத்தப்பட்டுகிட் டிருக்கேன். நீ வேற ஏன்டா சங்கடப்படுத்தறேன்னாங்க. அண்ணன் கொஞ்சம் சாஃப்டாயிட்டாரு.

"சாரிம்மா... அவ படற பாட்டை என்னால பாக்க முடியலேன்னாரு." அம்மா கண்ணு கலங்கிடுச்சு.

'டேய்... நம்ம சூழ்நிலைக்குப் பளகட்டுமேன்னு நெனச்சேன். இப்படியாயிப் போச்சு!' என்று வந்தவர், அவள் கால்களில் குடைச்சலினால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவள் காலை அமுக்கி விட்டபடி அமர்ந்திருந்தாராம்.

'ஐயோ.... நீ ஏம்மா.... இதெல்லாம் செய்யறே?' என்று அவன் பதறினானாம்.

'ஏண்டா, வந்த நால்ல இருந்து அவ எனக்குச் செய்யலே. கோடீஸ்வரன்டா அவங்கப்பன். நான் தப்புப் பண்ணீட்டன்டா. அவங்கம்மா மாதிரி இருந்திடுவாளோ, முதல்லயே கன்ட்ரோல் பண்ணனும்னு நெனச்சிட்டனாட்ட இருக்கு. என்ற வயசுக்கு இது எவ்வளவு சின்னத்தனம்!' என்று வருத்தப்பட்டாராம்.

'ஐயோ! எதுக்கு அவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிகிட்டு... சின்னத்தை ஒண்ணும் சொல்லலையா?' என்றாள்.

'ஒரே அழுகைதான். அவங்களுக்கு வேற என்ன பேசத் தெரியும்?' என்றாள் கீதா.

வசுமதி நெகிழ்ந்து போனாள்.

அன்று அலுவலகத்தில் இருந்து காலை பத்தரை மணிக்கு ஃபோனில் அழைத்தான் கந்தகுரு.

'ஹேய்.... வசுமதி. சாப்பிட்டியா.... எப்படி இருக்கே?'

'ம்... இட்லி சாப்பிட்டேன். கொஞ்சம் டயர்டா இருக்கு. மற்றப்படி காய்ச்சல் இல்லே....' என்றாள்.

'சரி.... நல்லாத் தூங்கு. ம்.... அப்புறம் உங்க அம்மா அப்பாவுக்குத் தகவல் குடுக்கவா? பாக்கணும் போல இருக்கா?'



'அப்பாவுக்கு மட்டும் சொல்லுங்க. சரியாப் போச்சு. ஐம் ஆல் ரைட்ன்னு சொல்லுங்க. வந்தனாவைத்தான் பாக்கணும் போல இருக்கு....' என்றாள்.

'சரி..... சொல்றேன். அப்புறம் வசு....' என்றான் இறங்கிய குரலில்.

அவன் அந்த மாதிரி முதல் முறையாய் அழைப்பதைக் கேட்டவுடன் அவள் முகம் சிவந்தது.

'ம்...?' என்றாள்.

'ரொம்பக் கஷ்டப்படுத்திட்டமோ?'

'இல்லல்லே. இங்க எல்லாம் நார்மலாத்தான் இருக்கு. நாந்தான் கொஞ்சம் அப்நார்மல் சிச்சுவேஷன்ல வளர்ந்திருக்கேன். எனக்குத்தான் தெம்பு பத்தலே!' என்று சொல்லவும், அவன் அந்தப்புறம் மெல்லச் சிரித்தான்.

'யு ஆர்.... வெரி ஸ்வீட் வசு. நீ ஃபைட் பண்ணாத்தான் நல்லா இருக்கு. துவண்டு கிடந்தப்ப என்னாலயே பாக்க முடியல. இங்க பார். ஒரு வாரம் நல்லா ரெஸ்ட் எடு... இந்த வைரஸ் ஃபீவர் இருக்கே, அப்புறம்தான் வீக்னஸ் தெரியும்.... நல்லானதுக்கு அப்புறம் என்ன முடியுமோ.... லைட்டா செஞ்சாப் போதும். கஷ்டமா இருந்தா சொல்லு. என்ன?' என்றான்.

'ம்...' என்றாள். உடம்பெல்லாம் சந்தோஷம் நிறைவதை உணர்ந்தாள்.

'இது இன்னையோட முடியற விஷயம் இல்லே. வாழ்க்கை. ஓவர்ஸ்ட்ரெயின் செய்யாதே, என்ன?' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

'ஹே.... என்ன பேச்சைக் காணோம்?' என்றான் குழைந்த குரலில்.

'ரெண்டுல எது நிஜம்னு யோசிக்கறேன்.'

'எந்த ரெண்டுல?' என்று அவன் ஆச்சரியமாகக் கேட்க.

'ஒண்ணு, எனக்கு இன்னும் ஜுரம் தெளியலயாயிருக்கும். இல்லே, உங்களுக்கு ஜுரம் வந்து உளர்றீங்களாயிருக்கும்!' என்றாள்.

'ஹேய்...' என்று சிரித்தான். பிறகு 'வசு.... நீ ரொம்ப சாதுன்னு அம்மாகிட்டே சொல்லியிருக்கேன். ஃபைட் எல்லாம் நம்மளோட வச்சுக்க..... அங்க வாயடிச்சுராதே!' என்றான்.

அவள் சிரித்தாள். அவன், 'பரவால்லே.... அண்ணன் தங்கச்சி ரெண்டு பேருக்கும் நல்ல சென்ஸ் ஆஃப் ஹியூமர் தான்!' என்றான்.

அதைக் கேட்டு 'ம்....' என்று ஒரு சோகப் பெருமூச்சு விட்டாற்போல் வசுமதி நடிக்கவும் 'ஹேய்.... இதுக்கு என்ன அர்த்தம்?' என்றான்.

'இல்லே..... சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் பத்தி யாரு பேசறதுன்னு இல்லாமப் போச்சு!' என்று அவள் சிரித்தாள்.

அவனும் சிரித்துவிட்டு, 'மிஸ்டர் கந்தகுருன்னு மிரட்டுவியே! அது இல்லையா? வந்து பேசிக்கறேன்!' என்று சிரித்தபடி ஆஃப் செய்தான்.

வசுமதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

கீதா அப்போது சூடாக ஹார்லிக்ஸ் எடுத்து வந்தவள், 'அண்ணி, என்ன இப்படிச் சிரிப்பு?' என்றாள்.

'இல்லே..... உங்க அண்ணன் இப்படி ஜோக்கடிச்சு நான் கேட்டதேயில்லை...'

'அண்ணி, அண்ணன் முந்தியெல்லாம் எப்பவுமே இப்படித்தான் இருப்பாரு. ஆனா, அப்பாவுக்கு ஸ்ட்ரோக் வந்த சமயத்திலிருந்து கொஞ்சம் மாறிப் போயிட்டாரு!' என்றாள் கீதா, சிந்தனையுடன்.



'அப்பா என்னவோ அதிர்ச்சிகரமாச் சொல்லி யிருக்காருன்னு என் மனசுக்குப் பட்டுது. ஆனா, அதைப் பத்திக் கேக்கற தைரியம் எனக்கு வல்லே!' என்று கீதா சொன்னவுடன் வசுமதி,

'அதுவும் சரிதான். அவராச் சொல்லலேன்னா, நாம அவர்கிட்டே எதையும் வாங்க முடியாது. சரி, இப்போதைக்கு சந்தோஷமாயிருக்காரு. அதுவே போதும்...' என்றாள்.

- - - - - - -

கார் போய்க் கொண்டிருந்தது. சென்ற முறை அம்மா வீட்டுக்கு அவனுடன் காரில் போனது நினைவுக்கு வந்தது. வழி நெடுகப் பேசாமலே வந்தான். அளவாய் ஓரிரு வார்த்தைகள். அன்றைக்கு இப்படி அவனோடு கலகலப்பாகப் பேசிக் கொண்டு ஒரு நாள் போகக்கூடும் என்று யாராவது சொல்லியிருந்தால் சத்தியமாக நம்பியிருக்க மாட்டாள்.

காய்ச்சலில் படுத்து முடிந்து ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது. வீடே அவளைக் கவனித்துக் கொண்டது கண்டு அவளுக்குக் கூச்சமாகிப் போனது. துவைப்பதற்குக் கூட ஆள் போட்டு விட்டார்கள். அவர்கள் உறவுக்காரப் பெண்ணொருத்தி வந்து துவைத்துக் கொடுத்து விட்டுப் போனாள்.

சமையல் மட்டும் தங்கள் வீட்டிலேயே அவள் ஆர்வத்தின் காரணமாகக் கற்று வைத்திருந்தாள். அதனால் முடிந்தவரை செய்தாள். மற்றவர்களும் பங்கிட்டுக் கொண்டு கூடச் செய்தார்கள்.

அவள் செய்கிற ஐட்டங்களைப் பார்த்து வழக்கம் போலப் பெரியாத்தா கலாட்டா செய்தாள். ஆனால், அது இப்போதெல்லாம் வசுமதிக்கு உறைப்பதில்லை. கூடச் சேர்ந்து கொண்டு அவளும் கலாட்டா செய்தாள். சிரித்தாள்.

சில சமயங்களில் கமலம்மா சமையலுக்குப் புகுந்து விடுவார். வெள்ளிக் கிழமைகளில் வீட்டு வாசலில் அவள் போடுகிற பெரிய கோலங்களைப் பார்த்து எல்லாரும் பாராட்டுவார்கள்.

மேலே ஹாலிலும், தங்கள் அறையிலும் அலங்காரத்தை மாற்றினாள். அதைப் பார்த்து விட்டுக் கீதா தன்னறையிலும் மாற்றங்கள் செய்து கொடுக்கச் சொன்னாள். மாற்றிக் கொடுத்தாள். 'அவர்கள் எல்லைக்குள் சிறுசுகள் பிடித்த மாதிரி இருக்கட்டும்!' என்று விட்டு விட்டார்கள் பெரியவர்கள்.

இதற்கு நடுவில் ஒரு நாள் குமார் அழைத்திருந்தான். எதற்கும் குமாரிடம் இன்னொரு முறை நேரடியாகக் கேட்டுக் கன்ஃபார்ம் செய்த பிறகே குருவிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

பேச்சுக்கு நடுவே, 'ஏங்குமாரண்ணா, அன்னைக்கு ரசஞ்சோறுன்னு ஏதோ சொன்னீங்களே, என்ன அர்த்தத்தில்?' என்றாள்.

'நீ என்ன அர்த்தத்திலே எடுத்துகிட்டே?'

'நீங்க சொல்லுங்க.'

'ஏம்மா, இதென்ன புதுசா வாங்க, போங்கங்கறே. வழக்கம்போல வா, போன்னே பேசு.'

'புது இடத்திலே.... உங்களுக்கு மரியாதை குறையக் கூடாதில்லே...'

'அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே.... எப்பவும் போலப் பேசு.'

'சரி.... சரி.... பேச்சை மாத்தாம நா கேட்டதுக்குப் பதில் சொல்லு.'



'இல்லம்மா.... குரு ரொம்ப நாளா எனக்கு ஃபிரண்டு. வீட்டுப் பக்கம் அதிகமாப் போனதில்லே. இந்த மாதிரி எண்ணமெல்லாம் இருந்ததில்லே. ஆனா நீ அவளைப் பற்றிச் சொன்னதையெல்லாம் கேட்டப்புறம் இவள் நான் எதிர்பார்க்கிற பெண்ணாக இருக்கலாம்னு....'

'கீதாகிட்ட கேட்டயா?'

'ம்.... ஒரு நாள் ஃபோன்ல கேட்டேன். அண்ணன் எப்படிச் சொன்னாலும் சரிங்கறா.... அதுமட்டுமில்ல.... பெரியவங்க ஜாதகம் பாக்கணும்பாங்களே. அதையும் பாத்து வச்சுட்டேன்.... எட்டுப் பொருத்தமாம்...' என்று வெட்கத்துடன் சிரித்தான்.

'அண்ணா!' என்று வசுமதி இடிஇடியென்று சிரித்தாள். பிறகு, 'சரி.... சரி... கொஞ்சம் டைம் குடு. நேரம் பாத்து ஆரம்பிக்கறேன்!' என்று சொல்லியிருந்தாள்.

இப்போது கணவன் தன்னோடு கலகலப்பாய்ப் பேசிக் கொண்டு வருகிறபோது ஆரம்பித்தால் என்ன தோன்றியது.....

பண்ணை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். அவள் காய்ச்சலில் படுத்து ஒரு மாதம் ஆகியிருந்தது. அவளை அணுகவில்லை. ஒரு வாரம் முந்தி அவள் உறக்கக் கலக்கத்தில் மார்பில் ஒண்டிக் கொண்டபோது தட்டிக் கொடுத்துத் தூங்க வைத்தான். தூக்கக் கலக்கத்தில் அவள், 'என்னங்க.... விரதமா?' என்றாள்.

'இல்லம்மா.... உடம்பு தேறட்டும். இன்னும் உனக்குப் பழைய களை வரலை!' என்று சொல்லி விட்டான்.

இன்றைக்குக் காலையிலிருந்தே ஏதோ அவன் ஜாலியான மூடில் இருக்கிற மாதிரி இருந்தது.

'இன்னைக்கு நான் ஃபாக்டரிக்குப் போகலை. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. அதனால இன்னைக்கு நம்ம பண்ணை

வீட்டுக்குப் போறோம்!' என்றான். நிலங்களையெல்லாம் சுற்றிக் காண்பித்தான்.

ஊரோரத்தில் இருந்த ஒரு நிலத்தைக் காண்பித்தான்.

'ஏங்க.... இங்க கூட நீங்க ஒரு புராஜக்ட் போடலாம்!' என்றாள்.

புஞ்சை நிலம் சும்மா வைத்திருக்கிறது என்றான்.

ஊரில் விழுகிற குப்பைகளை யெல்லாம் திரட்டி ஆர்கானிக், இனார்கானிக் என்று பிரித்துப் பெரிய குழிகள் வெட்டி மண் புழுக்களை வளர்த்து இயற்கையா உரங்கள் தயாரிக்கலாம்னு அவர்கள் குடும்ப நண்பர் அக்ரி புரொஃபசர் சொன்ன திட்டம் பற்றிச் சொன்னாள். அவன் விவரமாகக் கேட்டுக் கொண்டான். யோசிக்கலாம் என்று சொன்னான்.

அவனுக்கு ஊரில் இருக்கிற மரியாதை, கோயிலில் கொடுக்கப்படுகிற மரியாதை எல்லாம் பார்த்து அவள் அதிசயித்துக் கொண்டாள். பண்ணை வீட்டுக்குப் பிற்பகலில் வந்து ஓய்வு எடுத்தார்கள்.

மாலையில் ஊர்க்காரர்கள் நிறையப் பேர் வந்து பார்த்துப் போனார்கள். பண்ணை வேலையாட்கள் அவர்களையெல்லாம் நன்கு உபசரித்தார்கள்.

இரவில் தனிமையின் போது, 'இன்னைக்கு என்ன விசேஷம்?' என்று அவள் சிரித்தாள்.

'தெரியலே? இன்னைக்குப் பௌர்ணமி.... நம்ம வீட்டுப் பின்கட்டுக்கு வந்து பார்....' என்று அழைத்துப் போனான். பச்சை நிலங்களில் விளைந்திருந்த கதிர்கள் நிலவொளியில் நடனம் ஆடுவதைக் கண்டு அவள் கிறங்கி நின்றாள்.

அவன் மார்பில் சாய்ந்து கொண்டு, 'இதெல்லாம் பெரிசா உங்களுக்குப் பிடிக்காதே..... இன்னைக்கு என்ன?' என்றாள்.



'இன்னைக்கும் பிடிக்குதுன்னு எவன் சொன்னான்? உனக்குப் பிடிக்குது. கொஞ்சம் முன்னாடி மயங்கிட்டு நின்னயே, அதைப் பாக்கறதுக்குப் பிடிக்குது!' என்றான்.

அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். 'ஹேய்...மதி....சுமதி.... வசுமதி....' என்று அவள் கழுத்தில் முகம் புதைத்துக் கொஞ்சவும், அவள் கலகலவெனச் சிரித்தாள்.

'இதென்ன? மணிரத்னம் படத்து வசனம் மாதிரி கொஞ்சம் கொஞ்சமாய் டெவலப் செய்கிறீர்கள்?'

அவன் சிரித்துக் கொண்டான். குனிந்து முத்தமாரி பொழிகிற அவனிடமிருந்து விலகிக் கொண்டே, 'ஐயோ! என்னது இப்படி ஓப்பன் ப்ளேஸ்ல!' என்றாள் கலவரமாக.

'இங்க எவனும் வரமாட்டான்!' என்று மறுபடியும் இழுக்க.

'கீதா சொன்னது சரிதான்!' என்றாள் இழைந்தபடி.

'என்ன சொன்னா?' என்றான் அவனும் குழைந்தபடி.

'அண்ணி! அண்ணன் உற்சாகத்தைப் பார்த்தா இது அண்ணனோட வழக்கமான விசிட் மாதிரி தெரியல.... தேனிலவு மாதிரித் தெரியுதுங்கறா....'

'நீ என்ன சொன்னே?' என்று கேட்டுக் கொண்டே சட்டென்று அவளை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு அறைக்குப் போய்விட்டான்.

அறையில் அவள் வெட்கச் சிரிப்புடன், 'இரு, இரு.... உனக்கும் ஏற்பாடு செய்யறேன்னேன்!' என்றாள்.

'செய்வோம்.... செய்வோம்.... முதல்ல நீ நம்மளைக் கவனி... அப்புறம்தான்.... மத்ததெல்லாம்!' என்ற அவன் அவளைப் பேசவிடவில்லை.

- - - - - -

அவள் கண் விழித்தபோது அவன் அருகில் இல்லை. காலையிலேயே ஒரு வாக் போய் விட்டு வந்தான்.

வந்தவுடன் அவன் குளித்து விட்டு வருவதற்குள்ளாக அவள் தேநீர் தயாரித்து எடுத்து வந்தாள். தனக்குள் சிரித்துக் கொள்கிற அவளைப் பார்த்துக் குறும்பாகப் புன்னகைத்தபடி, 'என்ன?' என்று அருகில் இழுத்தான்.

'ம்.... இல்லே.... நீங்க எல்லாத்திலயும்.... கோபம்... நிர்வாகம்.... அழுத்தம்.... அப்புறம்....' என்று இடைவெளி கொடுத்துவிட்டு, 'எல்லாத்திலயும் கெட்டிக்காரர்தான்....' என்று வெட்கத்துடன் சிரித்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

'ரொம்ப மோசம்!' என்றாள்.

'தேங்க்ஸ் ஃபார் த காம்ப்ளிமென்ட்!' என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான். தன் காதல் பார்வையைச் செலுத்தினான்.

'சே... நீங்க....' என்று அவள் சிணுங்கினாள். விலகிப் போக முயற்சித்தாள்.

சரி... சரி... இங்க வா.... அதென்ன கீதா பத்தி ஏதோ சொன்னியே. மாப்பிள்ளை ஏதாவது பாத்திருக்கியா?' என்று கேட்டான்.

'நான் பாக்கலே. மாப்பிளையே அவராப் பாத்துக்கிட்டார்!' என்றாள்.

'என்ன உளர்றே?'

'உளறலே... பக்கத்துலேயே வெண்ணெயை வச்சுகிட்டு நெய்க்கு அலைஞ்சிருக்கோம்...'

'புரியலே...?'எனவும் விவரமாகச் சொன்னாள். முழுவதும் கேட்டுக் கொண்டான். பிறகு, 'அடப்பாவி....! பிரண்டுன்னு வீட்டுக்குள்ள விட்டேன். கன்னம் வச்சுட்டானே!' என்றான்.



'என்னங்க!' என்று அதிர்ச்சியாய்ப் பார்க்கவும், ரொம்ப நேரம் நடிக்க முடியாமல் சிரித்து விட்டான்.

'ரொம்ப நல்ல நியூஸ் வசும்மா. குமார் மாதிரி ஒருத்தன் கிடைக்கணுமே!' என்றான்.

'ஆமா... ரொப நல்லவருங்க. போன வாரம் பேசினப்ப, 'கீதாகிட்ட பேசறியா?' அப்படிங்கறேன். 'வேண்டாம்மா.... முடிவு தெரியாம மனசைச் சலனப்படுத்திக்கக் கூடாதுங்கறாரு!' என்றாள்.

உடனே டெல்லிக்குக் கூப்பிட்டான். 'ஏன்டா, பெரிய வேலையெல்லாம் நடந்திருக்கு!' என்று ஆரம்பித்து அவன் செய்த கலாட்டாவில் குமார் வாயடைத்துப் போனான்.

கணவனின் மகிழ்ச்சி அவளையும் தொற்றிக் கொண்டது. 'எவ்வளவு பெரிய விஷயம் சொல்லியிருக்கேன். ட்ரீட் கொடுங்க...' என்றாள்.

'மாப்பிளே அவரே பாத்துக்கிட்டார்னே.... அப்புறம் உனக்கெதுக்கு ட்ரீட்?' என்று அவன் கேட்கவும், அவள் வாயடைத்துப் போய்ப் பார்த்தாள். அதைப் பார்த்து அவன் சிரித்தான்.

பிறகு, 'சரி... சினிமாவுக்குப் போலாமா?'என்றான். பக்கத்து நகரத்தில் நண்பனுக்கு ஃபோன் செய்து டிக்கெட் புக் செய்தான்.

தியேட்டரில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடம் பார்த்து, 'ஒண்ணும் படம் பாக்க வந்த மாதிரி தெரியலே...' என்று முணுமுணுத்தாள்.

அவன் சிரித்தான். 'பண்ணை வீட்லயாவது நிம்மதியா இருக்கலாம்னு வந்தா அங்கயும் எவனாவது பாக்க வந்துகிட்டே இருக்கறான். கொஞ்ச நேரம் உன்கூட இப்படி ஃப்ரீயா உட்கார்ந்துக்கறனே!' என்று இழையவும், அவள் மௌனமாகி விட்டாள்.

படத்துக்கு நடுநடுவே அவன் அடித்த ஜோக்குகளுக்கு மனம் விட்டுச் சிரித்துக் கொண்டு அவன் அண்மையை மென்மையாய் உள்வாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

திரையில் பார்க்க நேர்ந்த காட்சிகளின் தாக்கத்தில் சற்று அதிகமாகவே இழைந்தபோது, 'ப்ளீஸ்... என்ன நீங்க... பப்ளிக் ப்ளேஸ்ல!' என்று தவிப்பதைப் பார்த்து ரசித்தபடி, 'சரி... சரி... அப்புறம்....' என்று விலகினான்.

பகலில் நல்ல ஓட்டல் ஒன்றில் சிறிய ஏ.சி. அறை புக் செய்திருந்தான்.

உணவு முடிந்த வுடனே பண்ணைக்கு வந்து, 'புறப்படலாம், வசு!' என்றான்.

'ஏன்?' என அவள் கேட்கவும், 'வா.... சொல்றேன்,' என்று கிளம்பினார்கள்.

ஒன்றரை மணி நேரப் பயணத்தில் தங்கள் ஊர் எல்லையைத் தொட்ட போது அங்கே அவள் அப்பாவும், அந்த வேளாண் பல்கலைக் கழகப் பேராசிரியரும் நின்றிருந்தார்கள்.

நேற்று அவள் சொன்ன திட்டத்தை மனதில் வாங்கிக் கொண்டு அவள் அப்பாவிடம் பேசியிருக்கிறான். திட்டம் செயலாக உருப்பெறுவதை அவள் ஆச்சரியமாகப் பார்த்தபடி இருந்தாள்.

பேச்சு முடிந்தபின், அப்பா, 'நா இப்படியே புறப்படறேம்மா. இன்னொரு நாளைக்கு வர்றேன்,' என்று புறப்பட்டு விட்டார்.

வீட்டுக்குப் புறப்பட்டார்கள். வழியில் அவர்கள் ஃபாக்டரி பக்கம் எட்டிப் பார்த்து விட்டுப் போகலாம் என்றான்.

திரும்ப வந்தபோது இருட்டி விட்டது. அவள் குபீரென்று சிரித்தாள்.

'என்ன?' என்றான்.



மீண்டும் அவள், 'நீங்க எல்லாத்திலயும் கெட்டிக்காரர் தான்.....' என்று சிரித்தாள்.

'சும்மாயிரு, வசு..... அப்புறம் இடம், காலம்னு பாக்க மாட்டேன்!' என்று மிரட்டினான்.

அவள் கலவரமாய் அமைதியாகி விட்டாள்.

வெகு சந்தோஷமாய் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

வீட்டில் அசாதாரண அமைதி நிலவியது. பெரியாத்தாவும், கமலம்மாவும் அடி வாங்கினாற்போல் சுரத்தே இல்லாமல் அமர்ந்திருந்தார்கள்.

ஹாலில் ஒரு ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின் என்று நிறைய சாமான்கள் நடுநாயகமாக நின்று கொண்டிருந்தன.

கீதா கூட ஒரு அமைதியில் இருந்தாள். அந்த அசாதாரண அமைதி அவளைப் பயமுறுத்தியது.

## 7

அறைக்குப் போய் உடை மாற்றிக் கொண்டு வந்தபோது தான் கணவன் மேலே வரவில்லை என்பதைக் கவனித்தாள்.

பெரியத்தையின் அந்தப் பெரிய அறைக்குப் போனால் அத்தை வழக்கம்போல் கட்டிலில் அமர்ந்திருந்தாள். சின்னத்தை வழக்கம் போல் பெரியத்தையின் வலப்புறம் கீழே அமர்ந் திருந்தாள்.

எதிர் சோஃபாவில் கந்தகுரு இறுக்கமான முகத்துடன் அமர்ந்திருந்தான். கீதா கூடக் கவலையான முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

இதை யெல்லாம் கவனிக்காத வசுமதி, 'கீதா! உங்களை யெல்லாம் பாத்தே ரெண்டு நாளாச்சு!' என்றபடி வந்தவள், அங்கே ஏதோ அசாதாரணம் தெரிவதை உணர்ந்து பேச்சை நிறுத்தினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள்.

'அம்மா.... அவகிட்ட நடந்ததைச் சொல்லு,' என்றான் கந்தகுரு, வறண்ட குரலில்.

'அவ என்னடா செய்வா? அவங்க அம்மா...' என்று சொல்லவும், மேலே பேசவிடாத கந்தகுரு,

'இல்ல, சொல்லு... அவளும் தெரிஞ்சுக்கட்டும்.'

'என்ன... என்ன நடந்தது?' என்றாள் வசுமதி அடங்கிய குரலில். உள்ளுக்குள் ஏதோ பிரச்சினை என்று குறளி சொன்னது.

'உங்க அம்மா வந்திருந்தா!' என்றாள் பெரியாத்தா.

'வந்து...?' என்றாள் வசுமதி.

'வந்து.... என்னத்தை... ஒரே சண்டைதான்!' என்றார் பெரியாத்தா.

பிறகு நடந்ததைக் கீதா சொன்னாள்.

'அடடே, சந்திரா வா... வா...' என்று பெரியாத்தா வரவேற்றார்.

'மகளும் மருமகனும் எங்கே?' என்றாள்.

'பண்ணைக்குப் போயிருக்காங்க.... நீ உட்காரு. சாயங்காலம் வந்துருவாங்க.... கீதா புள்ளே... ஜூஸ் கொண்டு வா!' என்றார்.

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சாமான்கள் கூடத்துக்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

'சந்திரா, இதெல்லாம் எதுக்கு? நாங்க ஒண்ணும் கேட்கலையே!' என்றார் பெரியாத்தா.



'உங்ககிட்ட பேசணும்,' என்றாள்.

'சரி... பேசலாம் வா...' என்று பெரியாத்தா சிரித்துக் கொண்டேதான் தன்னுடைய அறைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

'எம் மகளை என்னன்னு நெனச்சீங்க? துவைக்கச் சொல்றீங்களாம். வீட்டு வேலை செய்யச் சொல்றீங்களாம். ஏதோ எங்க அளவுக்கு வசதியிருக்கேன்னு பொண்ணைக் கொடுத்தேன். வேலைக்காரியாகவா அனுப்பி வச்சேன்? காய்ச்சல் வந்ததைக் கூட எனக்குச் சொல்லலே. வீட்டுக்கு வந்த மருமகளை இப்படி நடத்த வெட்கமா இல்லை? இனி, ஏதாவது கேள்விப் பட்டேன், சும்மா இருக்க மாட்டேன்!' என்று பத்து நிமிடம் ருத்ர தாண்டவம் ஆடி விட்டாள். இதை எதிர்பாராத எல்லாரும் திகைத்து நிற்க, அவள் நகர்ந்தாள்.

'அத்தே.. நீங்க புரிஞ்சுக்கலே. ப்ளீஸ் உட்காருங்க!' என்று கீதா சொன்னபோது, 'உன்னை ரொம்ப நல்லவன்னு சொன்னாளே என் மக... நீயும் கூட உடந்தையா இருந்திருக்கே!' என்று கேட்டு விட்டுக் கிளம்பிப் போய்விட்டாள்.

பெரியாத்தா முகத்தில் ஈயாடவில்லை. சற்றுக் கழித்து ஈனசுரத்தில், 'அந்தப் பச்சப் புள்ளைய, புதுசா வந்தவளை வேலை வாங்குனதுக்கு எனக்கு இது வேணும்தான்!' என்று சொல்லியபடி காலையில் உட்கார்ந்தவள்தானாம். ஒண்ணும் சாப்பிடாமல் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்காமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

வசுமதி முழுமையாகக் கேட்டுக் கொண்டாள்.

'இது எப்போ நடந்தது?' என்று கேட்டாள்.

'காலையில பத்து மணிக்கு!' என்றாள் கீதா.

கணவன் முகத்தைப் பார்த்தாள். அவன் இறுகிய முகத்தோடு அமர்ந்திருந்தான்.

'நான் எதுவும் அம்மாகிட்டே சொல்லலை!' என்றாள் தவிப்புடன். சற்றுக் கழித்து, 'நீங்க என்னை நம்பணும்!' என்றாள்.

அதற்குப் பிறகு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, அவன் அம்மாவைப் பார்த்தான். பெரியாத்தா, 'விடப்பா..... அவங்க அம்மா வந்து பேசினதுக்கு அவ என்ன செய்வா?'

'இல்லே.. சந்திரா அப்படித்தான். அது தெரிஞ்சதுதான். ஆனா இது எங்கெங்கே எப்படி இறக்கை கட்டிப் பறக்குமோ தெரியலே!' என்றாள் கமலம்மா கவலையுடன்.

ஆழ்ந்த யோசனையுடன் நின்று கொண்டிருந்த வசுமதி வெகு வேகமாக ஹாலுக்குப் போனாள். ஹாலில் இருந்த ஃபோன் செட்டைக் கொண்டு வந்து அங்கே பிளக்கில் மாட்டினாள்.

அது அடுத்த முனையில் பேசுபவர் குரல் எல்லாருக்கும் கேட்கும்படியான செட்.

அம்மா வீட்டுக்கு ஃபோன் அடித்தாள். வந்தனாதான் லைனில் வந்தாள்.

'ஹாய் அக்கா!' என்ன...... மாமா சிரிச்சுப் பழகிட்டாரா?' என்றாள் சிரித்தபடி.

வசுமதி அதைச் சட்டை செய்யாமல் ஒரு மாதிரிக் குரலில் 'வந்த்ஸ்! ஃபோனை அம்மாகிட்டே குடு!' என்றாள்.

அம்மா லைனில் வந்தாள். ஆர்ப்பாட்டமாக, 'என்னடி வசு, காலயிலே வந்து உங்க மாமியார்கிட்டே குடுகுடுன்னு குடுத்துட்டு வந்தேனே, சொன்னாங்களா?'

'அம்மா! நீ குடுக்க வர்லே. என் வாழ்க்கையைக் கெடுக்க வந்துருக்கே....' என்றாள், வசுமதி - காட்டமாக.

'வசு...' என்றாள் சந்திரவதனி, இறங்கிய குரலில்.

'நான் வந்து உங்கிட்டே எதும் சொன்னேனா?'



'இல்ல... ஆனா அந்தச் சோலையம்மா வந்து நீ துவைக்கிறே, பாத்திரம் கழுவறே.... களி கூடக் கிண்டறேன்னு பெருமையாத்தான் சொன்னா. ஆனா..... எனக்குப் பகீர்ன்னு ஆயிடுச்சு.'

'என்னத்துக்குப் பகீர்ன்னு ஆகுது? வந்த இடத்துல இந்த வீட்டு வழக்கப்படிதான வாழணும். அதுல என்ன தப்பு?'

'என்னடி வசு? உனக்குக் காய்ச்சல் கூட வந்திருக்கு. அதைக்கூடச் சொல்லலே. அவ்வளவுக்கு ஆகாதவளா நான்?'

'ஆகாதவ இல்லம்மா. ஆர்ப்பாட்டம்.... உன்னோட பந்தா.... எல்லாத்தயும் கேள்வி கேக்கறது பெருமைன்னு நினைக்கறயே... அதுதான் பிடிக்க மாட்டேங்குது.' என்றாள்.

சந்திரவதனிக்குக் கோபம் வந்தது..... 'என்னடி பெரிய தப்பு செஞ்சேன்? நியாயம் கேட்டேன்.'

'அம்மா நீ என்கிட்டயும் விசாரிச்சுட்டில்ல பேசியிருக் கணும். எனக்குக் கஷ்டம்மா. என்னாலே தீர்க்க முடியலே. நீ வந்து தீர்த்துக்குடுன்னு நான் கேட்டனா?'

'இல்லே!' என்றாள் சுரத்தே இல்லாமல்.

'உன்னோட சோலையம்மா, எங்க பெரியத்தை எனக்குக் காய்ச்சல் வந்து கிடந்தப்போ கால் அமுக்கி விட்டாங்களே, அதைச் சொல்லலையா? அம்மா.... முழுமையான தாயன்பு எனக்கு இப்பத்தான் கிடைக்குது. தெரிஞ்சுக்கோ... வெள்ளிக் கிழமையானா பெரியத்தை தலைக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிக்க வைக்கிறாங்க. சின்னத்தை சாம்பிராணி போட்டுத் தலைமுடியைக் காய வைக்கிறாங்க. பத்து நாள் ஒரு சின்ன வேலை கூடச் செய்ய விடாம பூ மாதிரித் தாங்கினாங்க. அவரோட சந்தோஷமாய்ப் பண்ணை வீட்டுக்குப் போயிட்டு வந்தேன். வந்தா இங்க இப்படி..... சே.....' என்றாள்.

அவள் பேசப்பேச இந்தப்புறம் எல்லாரும் இளகியது மட்டுமல்ல, அம்மாவும் திகைத்து விட்டாள்.

'சரிடி..... இப்ப என்ன செய்யணுங்கறே?'

'நீ முதல்ல உன்னோட அழகு சாமான்களையெல்லாம் டெம்போ அனுப்பி எடுத்துட்டுப் போ.... எங்க மாமியார்ட்டே மன்னிப்புக் கேளு.'

இதுவரை நடந்ததைத் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்த குரு... 'விடு....வசு, அதெல்லாம் வேண்டாம்!' என்றான்.

வசுமதி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்து, 'அம்மா, ஒண்ணு புரிஞ்சுக்கோ. எங்களுக்கெல்லாம் ஏதாவது பிரச்சினை வருதுன்னா உன்னாலதான் வருது. வசந்தி வீட்டிலயும் இப்படித்தான் நடந்தது. எல்லாரும் சந்திராவோட பொண்ணுங்க அவளை மாதிரியே அடக்கி ஆளப் பாப்பாங்கன்னுதான் எங்க மேலே சந்தேகப் படறாங்க. தெரிஞ்சுக்கோ.... அம்மா! இன்னொண்ணும் புரிஞ்சுக்க. இனிமேலாவது அப்பாவைப் புரிஞ்சுக்க. அவரோட ஜிம் பாடிக்கு ஓங்கி ஒரு அறை விட்டா நீ தாங்க மாட்டே. உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்னு சகிச்சுக்கிட்டுப் போறாரு. அன்டர்ஸ்டாண்ட் பண்ணிக்க. இப்ப ஃபோனை எங்கத்தை கிட்டே குடுக்கறேன். மன்னிப்புக் கேளு...' என்றபடி போனைக் கொண்டு வந்து நீட்டினாள்.

'கேக்கலைன்னா?' என்றாள் சந்திரவதனி.

'நாளைக்கு உன் மகளைப் பத்தி ஏதோ ஒரு நியூஸ் வரும். அப்புறம் வருத்தப்படுவே.'

'ஐயோ.... வசுமதி.... இதெல்லாம் எதுக்கு....?' என்றபடி அவர் ரிசீவரை வாங்க,



'அண்ணி, ரொம்ப சாரிங்க..... அந்த வேலை யெல்லாம் அவளுக்குப் பழக்கமில்லே, அதுதான்...'

'சரி... விடு. அவளுக்கு அதெலலாம் பழக்கமில்லேன்னு எங்களுக்குத் தெரியல.... நாங்களாவது விசாரிச்சிருக்கலாம். நீ கேட்டதும் கரெக்ட்டுதான். நான் பெரியவ புரிஞ்சிருக்கணு மில்லே. சந்திரா! மனசுல வச்சுக்காதே. உன்ற புள்ள வேற என்ற புள்ள வேற இல்ல... உன்ற மகளை எல்லாருக்கும் புடிச்சுப் போச்சு. நாந்தான் புத்தி கெட்டுப் போய்....' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், வந்தனா ஃபோனை வாங்கி, 'எல்லாருக்கும் புத்தி கெட்டுப் போனதையே எத்தனை நேரம் சொல்லிகிட்டிருப்பீங்க.... மாமாகிட்டே ஃபோனைக் குடுங்க....' என்று சூழ்நிலையை இதமாக்க முயன்றாள்.

'மாமா.... நா கேட்டதுக்குப் பதிலே வர்லை.... சிரிச்சுப் பழகிட்டீங்களா?' என்றாள். அவன் சிரித்து விட்டான். பிறகு, 'ஏய் வாயாடி, இப்ப அது ரொம்ப முக்கியமாக்கும் ஃபோனை உங்கம்மாகிட்டே கொடு....' என்றான்.

'அத்தை.... நீங்க கேட்டது நியாயம்தான். தாய் மனது பதைக்கறது இயற்கைதான். பொண்ணைப் பெத்து அருமையா வளர்த்து எங்கிட்ட கொடுத்திருக்கீங்க. எப்படி நடத்தணும்னு நினைக்கிறீங்களோ.... அப்படி வச்சுக்கறேன்.... நீங்க மன்னிப்பெல்லாம் கேட்டிருக்க வேண்டியதில்லை.'

'இல்ல... மாப்பிள! உங்களுக்கு வசுவைப் பத்தித் தெரியாது. பொறுக்கறவரை பொறுப்பா. அப்புறம் வீம்பு பிடிச்சுடுவா. சொன்னா சொன்னதுதான்....' என்றாள் சந்திரவதனி.

'ஓ....!' என்றான் திகைப்புடன். பிறகு, 'சரியத்தை.... இப்படி ஒண்ணு நடந்ததுங்கறதையே நாம மறந்துடுவோம். ம்...பாருங்க..... அம்மா கூட சந்திராவும் நம்ம புள்ளைதானே. பேசினா என்னங்கறாங்க! ஓ..கே...வா...?' என்றான்.

'சரிங்க, மாப்பிளே!' என்றாள். அவன் திரும்பிப் பார்த்தான். வசுமதி பேசாமல் நின்று கொண்டிருந்தாள். ஃபோனை வைத்தான். தன் அம்மாவின் கௌரவத்தையும் அவன் காப்பாற்றுவது அவளுக்குப் புரிந்தது.

பெரியாத்தா சூழ்நிலையைக் கையில் எடுத்துக் கொண்டார். 'சரி... சரி.... அவியளுக்குப் பசிக்கும். கீதா! டிபன் எடுத்துக் குடு!' என்றார்.

கணவனும், மனைவியும் நகர்ந்தார்கள். வசுமதி கூடத்தில் இருந்த அந்தப் பொருட்களைத் திரும்பியும் பார்க்கவில்லை.

'பொறுக்கிற வரை பொறுப்பாள். பிறகு வீம்பு பிடிச்சிருவா...' என்ற வார்த்தைகள் அவனுக்குள் திரும்பத் திரும்ப எதிரொலித்தன.

அவன் சிந்தனையிலாழ்ந்தான்.

- - - - - -

அறைக்குப் போனதும் அவன் ஒரு மாதிரிச் சிரித்தான்.

'அடடடா! இந்த லேடீஸ் இருக்கீங்களே!' என்றான்.

அவளுக்குச் சுர்ரென்று கோபம் வந்தது.... 'என்ன, லேடீஸ் இருக்கீங்களே.... வந்தப்பவே எனக்கு வேலை கொஞ்சம் கஷ்டமா இருக்குன்னு சொன்னேன்தானே. அப்பவே நீங்க அத்தைகிட்ட சொல்லியிருந்தா இத்தனைக்கு வந்திருக்காது!' என்றாள் எரிச்சலாக.

'இப்ப கடைசியில எல்லாப் பழியும் எம் மேலதானா? இதுக்குத்தான்டி உங்களை யெல்லாம் வைக்கிற இடத்தில வைக்கணுங்கறது!' என்றான் அவனும் எரிச்சலாக.

அவள் அடிபட்டாற்போல் பார்த்தாள். போய்த் திரும்பிக் கொண்டு படுத்தாள்.



'அதென்ன? பெண்கள் எல்லாத்துக்கும் வேணும். ஆனா, அவங்க உங்களுக்குக் கீழே.... அவங்களும் அப்படித்தானே செய்யறாங்க. போட்டி, பொறாமை, ஊர்வம்பு; என்னைக்கு இவங்க திருந்தறாங்களோ அன்னைக்குத்தான் உங்க கொட்டமெல்லாம் அடங்கும்!' என்று பொரிகிற அவளைப் பார்த்தவுடன் அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

'ஏய்.... வசு...' என்று தன் பக்கம் திருப்பினான். 'சரி! சரி... நீ எல்லாப் பெண்களையும் விட உசத்தி.... எனக்கு உசத்தி... போதுமா?' என்றான். அவள் அவன் கண்களைப் பார்த்தாள். அதில் குறும்பும் கிண்டலும் கூத்தாடின.

தன்னைச் சமாதானப்படுத்த முயல்கிறான் என்பது தெரிந்தது. 'என் வேதனை உனக்குப் புரியவில்லையா?' என்பது போல் பார்த்தாள். அடுத்த கணம் அவன் மனம் உருகிவிட்டது. சட்டென்று முகம் சீரியஸானது.

'பாரு... வசு.... எனக்கென்று சில கருத்துக்கள் இருக்கு. அதுக்குக் காரணங்கள் இருக்கு. உனக்குக் கவிதை பிடிக்குது. எனக்குப் பிடிக்கிறது இல்லே. உனக்கு அழகுணர்வு அதிகம். நான் வியாபாரி. நாம வேணா காம்ப்ரமைஸ் பண்ணிக்குவோம். உன்னோட ஒபினியன்ஸை நீ எங்கிட்டயும், என்னோட ஒபினியன்ஸை நான் உங்கிட்டயும் திணிக்கக் கூடாது. ஓ.கே.?' என்றான்.

அவள் சிந்தனையிலாழ்ந்தாள். அவன் இந்த அளவுக்கு இறங்கி வருவதே பெரிய விஷயம் என்று தோன்றியது. ஏதோ தன் பயணத்தில் சற்று முன்னேறிய மாதிரித் தோன்றியது. பிறகு மெதுவாகச் 'சரி' என்று தலையாட்டினாள். அவன் சிரித்தான்.

'இன்னைக்கு நா ரொம்பச் சந்தோஷத்தில் இருந்தேன். கீதா கல்யாணம் முடிவாயிருக்கு. ஒரு புது ப்ராஜக்ட் ஆரம்பிச்சிருக்கோம். மேடம் வேற நேத்து ரொம்ப ஒத்துழைப்பு கொடுத்தீங்க!' என்று சிரித்தான்.

'ஓ! அதுக்குத்தான் இப்பக் காம்ப்ரமைஸாக்கும்!' என்றாள் அவள் பொய்க் கோபத்துடன்.

'ஆமாங்க.... மேடம்...' என்று அவன் சிரித்தபடி குறும்புகள் செய்ய, 'லொள்ளுதான் மிஸ்டர் கந்தகுரு!' என்று ஒரு செல்லக் குட்டு வைத்தாள்.

'வுட்டா டீச்சரம்மா.... பெஞ்ச் மேல் நிக்க வைப்பீங்களாட்டம் இருக்கு!' என்று அவனும் சிரித்தான்.

## 8

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

இரவு பத்து மணியாகியும் அவன் அறைக்கு வரவில்லை. ஹாலில் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தான்.

பிறகு செல்ஃபோனில் பேசினான். அறைக்கு வந்தான். சற்று நேரம் சிந்தனையில் இருந்தான். பிறகு மீண்டும் ஃபோன் செய்தான்.

'பார்றா, ராஜேஷ், எல்லாருமாய்ப் போனோம். என்ஜாய் பண்ணினோம். நீங்கள்ளாம் குடுத்திருவீங்கங்கற நம்பிக்கை யிலதான செலவு செஞ்சேன். இரண்டு வருஷமா ஏழெட்டுப் பத்து தடவை போனதுல ரெண்டு லட்ச ரூபா ஆயிருக்குடா.'

'அவ்வளவா?' என்றது குரல் மறுபுறம்.

'என்னடா, அவ்வளவா? ஒவ்வொரு தரமும் எட்டுப் பத்துப் பேர் போனோம். ஒவ்வொருத்தனும் சிங்கிள் ரூம் இல்ல போட்டீங்க. நானும் குமாரும்தான் ரூம் ஷேர் பண்ணினோம். குடுக்கறேன்னு சொன்னதால செஞ்சேன். ஊரு பாக்கறேன், பாக்கறேன்னு ஒவ்வொரு தரமும் இருபதாயிரம், பதினெட்டாயிரம்னுல்ல செலவு செய்தோம்...'



'சரிடா, குடுத்தர்றோம். கொஞ்சம் டைம் குடு உங்க வீட்டில நீதான்டா ராஜா.... உன்னை யாரும் கேக்க மாட்டாங்க.'

'அதனாலதான்டா எனக்குப் பொறுப்பு ஜாஸ்தி. அத்தனையும் எங்க பெரியம்மா சொத்து. குடும்பக் கணக்கு. நானே கேர் டேக்கர் மாதிரி, ஒரு சம்பளம்தான எடுத்துக்கறேன் தெரியுமா? லேடீஸ்கிட்டே போய் நான் ரெண்டு லட்ச ரூபா ஃபாக்டரியிலருந்து எடுத்திருக்கேன்னு எப்படிச் சொல்றது? எதுக்கு நான் தலை குனியணும்?' என்றபோது அவன் குரல் உயர்ந்தது.

'ஏண்டா, உங்கப்பா சொத்து என்ன ஆச்சு? வைஃப் வேற வசதியான இடம்!' என்றான் ராஜேஷ்.

'எங்கப்பா சொத்தும் அப்படித்தான்டா.... சிஸ்டர் இருக்காள்ல. அவ ஷேர் பிரிக்கறவரைக்கும் நான் கணக்கு கரெக்டா வக்கணுமில்ல... ஃவைஃப் விவகாரமெல்லாம் நான் கேட்டுக்கறதில்லே.... அவளைத்தான் கட்டிக்கிட்டேன். அவ சொத்தையா?' என்றான்.

வசுமதி சீராக மூச்சு விட்டுக் கொண்டு தூங்குவதுபோல படுத்துக் கொண்டிருந்தாலும், இந்த வார்த்தைகள் அவளுக்குள்ளே ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தின. நேர்மை யானவன்தான் தனது கணவன் என்று பெருமிதம் ஏற்பட்டது. மீண்டும் கவனித்தபோது....

சுயமரியாதை வேணும்டா.... என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

'இத பாரு, குரு! நீ சன்னஞ் சன்னமா செலவு செஞ்ச தொகை பெருசாப் போச்சு.... வாங்கறதும் இனி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வாங்கணும்.... வேற வழியில்லே!' என்றான் ராஜேஷ்.

'டேய்.... என்னா நீங்க.... என் சிஸ்டர்க்கு கல்யாணம் பேசலாம்னு பாக்கறேன். அதுக்குள்ள நான் எங்கம்மாவுக்குக் கணக்கு குடுக்கணும்டா!' என்றான் எரிச்சலாக.

'டேய், நா வேணும்னா ஒண்ணு பண்றேன். எல்லாத்து கிட்டயும் மாசம் ஒரு தொகை கறந்து உனக்கு ஒரு மொத்தத் தொகையாக் குடுக்கப் பாக்கறேன்.'

'அப்ப இப்ப நான் என்ன செய்றது?'

'எப்படியோ சமாளி!' என்று அவன் சிரித்து விட்டுக் கட் செய்தான்.

ஒரு கட்டத்துக்கு மேல் நடிக்க முடியாமல் கண் திறந்த வசுமதி, அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சிந்தனையோடு நடை போட்டுக் கொண்டிருந்தவன், அவளை அப்போதுதான் பார்த்தான். அவள் எழுந்து அமர்ந்தாள்.

'ஏன் தூங்கலையா?' என்றான் கடுப்பாக.

அதை அவள் சட்டை செய்யாமல், 'என்ன பிரச்சினை?' என்று கேட்டாள்.

'உனக்கெதுக்கு அதெல்லாம்? நீ தூங்கு.'

'உங்களுக்குப் பிரச்சினைங்கறப்ப நான் எப்படித் தூங்கறது?' என்று அவள் கோபமாகக் கேட்கவும், அவன் அவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.

'எல்லாத்திலயும் சிஸ்டமாடிக்ஙிங்க. அப்ப உங்க வொய்ப்புக்குச் சொல்ல வேண்டிய கடமையும் இருக்கு. தெரிஞ்சுக்குங்க...' என்றாள்.

அவன் கோபப்படுவான் என்று எதிர்பார்த்தாள். மாறாக, அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். தன் பிரச்சினையைச் சொன்னான்.



எப்போதும் பெண்களுக்கு நடுவே இருக்கிறோம், உழைக்கிறோம் என்று நண்பர்களோடு அடிக்கடி டூர் போவானாம். ஏழெட்டுப் பத்துப் பேர் போவார்களாம். இவனிடம், 'செலவு செய்டா, கொடுத்தர்றோம்!' என்றே சொல்லிச் செலவு செய்ய வைப்பார்களாம்.

திடீரென்று போன மாதம் கணக்குப் பார்த்தால் இரண்டு லட்ச ரூபாய் ஆகியிருந்ததாம். 'எப்படி அம்மாகிட்டே சொல்றது?' என்று மறுகினான்.

'ஓ...' என்றாள் வசுமதி.

'எப்ப இருந்தாலும் வாங்கிடுவேன். ஆனா இப்ப என்ன செய்யறது?' என்றான்.

'ஏங்க...!'

'என்ன...'

'எங்கிட்டே பணம் இருக்கு. தந்தா வாங்கிப்பீங்களா?' என்றாள்.

'உங்கிட்டே ஏது பணம்?'

'நான் மூணு வருஷமா வேலைக்குப் போனேனே. மாசம் ஆறாயிரம் சம்பளம். அப்படியே ஆர்.டில போட்டுருவேன். வருஷத்துக்கு ஒரு தடவை எடுத்து ஃபிக்ஸடில் போட்டுருவேன். ரெண்டு லட்சம் தேறும். எடுத்தர்லாம்!' என்றாள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு பிடிவாதமாய், 'வேண்டாம் வசுமதி....' என்றான்.

'ப்ளீஸ்... கௌரவம் பாக்காதீங்க. ரெண்டு லட்சம்ங்கறது சாதாரணத் தொகையில்லை. அத்தை வேற ரொம்ப ஸ்ட்ரிக்ட். எனக்கே செலவுக்குக் குடுக்கறாங்க. ஆனா.... என்ன செலவு செஞ்சேன்னு கணக்குக் கேக்கறாங்க. ஏன் செஞ்சேன்னு

கேக்கறதில்லே.... எவ்வளவு வேணா வாங்கிக்கங்றாங்க.. ஆனா. கணக்குக் கேக்கறாங்க...' என்றாள்.

'ஆமா.... அப்பா இங்க ஃபாக்டரியைப் பாத்துட்டிருந்தப்ப அவங்கதான் நிலபுலங்களையும் பாத்துக்கிட்டிருந்தாங்க. கரெக்டா இருப்பாங்க...'

'அப்ப என்ன செய்வீங்க?'

'அதுதான் புரியலே...' என்றான்.

'இங்க பாருங்க.... இவ்வளவு சொத்தை வச்சுகிட்டு வெளியே போய்க் கடன் கேட்டா நல்லாவா இருக்கும்? உங்களுக்குப் பிரியமில்லேன்னா கடனா வாங்கிக்குங்க....'

அவன் சற்றே சமாதானமானான். மேலும் இரண்டு நடை நடந்தான். பிறகு நின்றான். அவள் முகம் பார்த்தான்.

'உறவு வேற, குடுக்கல் வாங்கல் வேற...' என்றான்.

'அது சரி.... எங்கிட்டே பணம் வாங்கிட்டீங்களேன்னு நீங்க கஷ்டப்பட்டு எப்பவும் சிரிச்சுகிட்டு இருக்க வேண்டியதில்லை. எப்பவும் போல சீரியஸாய் இருக்கலாம்....' என்று தன்னையுமறியாமல் ஜோக்கடித்தவள், அடுத்த நிமிடம் அவன் கோபித்துக் கொள்வானோ என்று பயந்து போனாள்.

ஆனால் அவன் சட்டென்று சிரிக்கவும் நிம்மதியானாள். கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்தாள்.

அவன் முகம் சற்றே சிவக்கவும் இன்னமும் ஆச்சரியமானாள். ஆனால் எதையும் சொல்லாமல் கவனமாகத் தவிர்த்து விட்டாள்.

அவன் மீண்டும் நடந்தான். பிறகு அவள் முகம் பார்த்தான். 'வட்டி வாங்கிப்பியா?' என்றான்.

தன்னிடம் பணம் வாங்கிக் கொள்வதை அவன் தன்மானம் தடுப்பதை அவள் உணர்ந்தாள். அதனால் சரி என்றாள்.



'ஒரு வருஷத்துல குடுத்துருவேன். எவ்வளவு பர்செண்ட் வட்டி?' என்றான் மீண்டும் சீரியசாய்.

அவளுக்குச் சிரிப்பாய் வந்தது. உங்க விளையாட்டுக்கே நானும் வரேன் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

'பன்னிரண்டு பர்சன்ட்?' என்றாள்.

பிறகுதான் அவன் சமாதானமானான்.

'அப்ப நாளைக்கு வெள்ளிக்கிழமை. அம்மா வீட்டுக்குப் போயிட்டு சண்டே வர்லாமா? எல்லா எப்டியையும் க்ளோஸ் பண்ணீறலாம்!' என்றாள்.

'உங்க அப்பா, அம்மா.... கேட்டா?' என்று அவன் குழந்தை போல் கவலைப்பட்டான்.

'அப்பாவெல்லாம் கேட்க மாட்டாரு. எனக்குத் தேவையிருக்குப்பான்னு சொல்லீட்டாப் போதும். அம்மாவுக்கு எப்.டியைப் பத்தித் தெரியாது.'

'ஏன்?' என்றான் ஆச்சரியமாய்.

'ஏனா? அந்த நகை வாங்கிக்க, இதை வாங்கிக்கன்னு கரைச்சிருப்பாங்க!' என்றாள்.

'நகை பிடிக்காதா?'

அவ்வளவாப் பிடிக்கறதில்லே. டெட் காப்பிட்டல்!' என்றாள்.

'அம்மா வேற உனக்குன்னு நெறைய வச்சிருக்காங்க.'

'காமிச்சாங்க. அப்பாவும் வாங்கிக் குடுத்தார். அம்மாவும் வாங்கிக் குடுத்தாங்க. அது போகச் சின்னதிலருந்து வாங்கினது வேற நிறைய இருக்கு.'

'எவ்வளவு தேறும்?' என்றான்.

'அது தேறும் நூத்தம்பது பவுனுக்கு மேல.... இங்க அத்தை வேற நிறையக் காட்றாங்க. எவ்வளவு வேஸ்ட்! இல்ல? எத்தனை

லட்சம் முடங்கியிருக்கு. இல்ல.... கிட்டத்தட்ட இருநூத்தம்பது பவுன்...' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

'அப்புறம் எதுலதான் ஆசை?' என்று கேட்டான் ஆர்வமாக.

'இப்போதைக்கு இந்த ரூம் கடைசில அந்தப் பக்கம் சின்னக் கிச்சன் ரூம் மாதிரி இருக்கே. அது மேல ஆசை!' என்றாள்.

'எதுக்கு?' என்றான் ஆச்சரியமாய்.

'எனக்கென்று ஒரு சின்ன உலகம் இருக்கு. படிப்பேன். கவிதை எழுதுவேன். உங்களைப் பத்திக் கூட எழுதினேன்!' என்று சொன்னாள்.

அவன் இகழ்ச்சியாய்ச் சிரித்தான். 'இந்தக் கவிதை, வருணனை இதெல்லாம் எனக்குப் பிடிக்கறதில்லை.... வெறும் பொய்கள்....' என்றான்.

பேச்சு ஆபத்தான பாதைக்குப் போவதை உணர்ந்த அவள், 'உங்களுக்கு என்ன ஆசை லட்சியம்னு ஏதாவது உண்டா?' என்று திசை மாற்றினாள்.

'ம்.... ஒரு பெரிய ஆசை. எங்கப்பா சொத்து, அம்மா சொத்து இதையெல்லாம் நம்பியிருக்காம நானே ஒரு ஃபாக்டரி ஆரம்பிக்கணும். பெரிசாக் கொண்டு வரணும். விவசாயத்துக்கு உதவற சின்னச் சின்ன ஐடியாக்கள் வச்சிருக்கேன்!' என்றான்.

'ஃபார் எக்ஸாம்பிள்?'

'ஓ....டீச்சரம்மா.... உதாரணம் கேக்கறாங்கப்பா!' என்று கிண்டல் செய்தான்.

அவள் சந்தோஷமாய்ச் சிரித்தாள்.



'இப்ப இங்க இந்த டிராக்டர் உழறதுக்கு யூஸ் பண்றமில்ல. ரொம்ப ஹெவி. ஆனா, சுவத்துல துளை போடறதுக்கு டிரில்லிங் மிஷின் யூஸ் பண்றமில்ல. அது மாதிரி ஒரு சின்ன மோட்டர் இணைச்சு, உழற கைக்கடக்கமான மிஷின் பிளான் பண்ணியிருக்கேன். போர்ட்டபிள். ஆனா தயாரிக்க இன்வெஸ்ட்மெண்ட் வேணும்.'

'அதுவும் அது உங்க பணமா இருக்கணும்!' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

'ஒண்ணு சொல்லட்டா?' என்றாள்.

'சொல்லு.'

'எங்கப்பாவுக்கு இந்த ஃபைனான்ஸ் ஃபீல்டுல பழக்கமிருக்கு. லோன் போடலாம்னா ஈஸியா மொபிலைஸ் பண்ணித் தருவார். ஷ்யூரிட்டி கூடப் போடுவார்.'

'சர்ட்டன்லி நாட்!' என்றான். முகம் இறுகியது.

'சரி... விட்றலாம்,' என்றாள் அவசரமாக.

'எவ்வளவு தேவை?' என்றாள்.

'ட்வென்ட்டி லாக்ஸ்...'

'சரி.... நான் டென் லாக்ஸ் மொபிலைஸ் பண்றேன். மீதிய பாங்க் லோனா வாங்கலாம்.'

'உனக்கு நகை பிடிக்காத மாதிரி எனக்குக் கடன் பிடிக்கறதில்லே.'

'ஒரு நல்ல நோக்கத்துக்காக காம்ப்ரமைஸ் செய்யலாம்!' என்று அவள் புன்னகைத்தாள்.

அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

'இப்ப உங்க ஃபாக்டரில எத்தனை பேருக்கு வேலை குடுப்பீங்க?'

'ஒரு இருநூறு பேருக்கு.'

'இருநூறு குடும்பங்கள் பிழைக்கும். என்னோட கல் அட்டிகைக்கும், வைர நெக்லஸுக்கும் என்ன பயன் இருக்கு? அப்ப ஏன் அதை இறக்கக் கூடாது? சரி.... இல்லேன்னா இப்படி வச்சுக்கலாமா?'

'எப்படி?'

'பார்ட்னர்ஸ் ஆக்கிக்கலாம்.' அவன் மௌனமாக அமர்ந்திருந்தான்.

'ஓ! நாங்கதான் உங்களுக்கு ஈக்வல்ஸ் இல்லையே!'

'இல்லல்ல.... அப்படியில்ல.... யோசிக்கலாம்....' என்றான்.

'யோசிங்க.... ஒரு ஃபாக்டரி வந்தா ஏரியா இம்ப்ரூவ் ஆகும். லேண்ட் வேல்யூ அதிகமாக ஆகும். சின்னதா ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம். நல்லாருக்குமில்ல....' என்றாள்.

சற்றுக் கழித்து. 'அப்புறம்.... நம்ம வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்குமில்ல....' என்றாள்.

அவன் அவளை வியப்பாய்ப் பார்த்தான். 'சரி... யோசிக்கலாம்!' என்றான்.

அவன் அவ்வளவு ஏற்றுக் கொண்டதே பெரிய விஷயம் என்று எண்ணிக் கொண்டாள். பிறகு தீவிரமாய் ஒரு திட்டம் போட்டார்கள். தொழில், உற்பத்தி, வியாபாரம் என்று அவள் நுணுக்கமாகப் பேசுவதை அவன் மனதுக்குள் பாராட்டிக் கொண்டான்.

'பரவால்லே... நீ சாதாரணமான லேடீஸ் மாதிரி இல்லே....' என்றான். அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

'ஆனால் ஒரு பக்கம் வலிக்குதுங்க!' என்றாள்.

'ஏனாம்?'



'கவிதை பிடிக்காதுன்னு சொல்லீட்டீங்களே!' என்று சிரித்தாள்.

அவன் குறும்பாய்ப் பார்த்தான். 'எந்தப் பக்கம் வலிக்குது? வசுமதி? கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்!' என்றான். நெருங்கி அமர்ந்தான்

அவள் மீண்டும் சிரித்தாள்.

## 9

கந்தகுருவின் பைக் சத்தம் கேட்டது.

வசுமதி வாசலுக்கே வந்து விட்டாள். பரபரப்பாக இருந்தாள்.

'என்ன வசு?' என்றான்.

குமாரண்ணா பேசினார். காலையிலிருந்து உங்களைப் பிடிக்க டிரை செய்தாராம். செல்ஃபோன் பிராப்ளமா?' என்றாள்.

'இல்லே. ஆஃப் செய்திருந்தேன். ஒரு மெஷின்ல பிராப்ளம். அதை நானே பாக்க வேண்டியதாப் போச்சு. என்னவாம்?' என்று பேசிக்கொண்டே அறைக்குப் போனார்கள்.

'ஏங்க! அண்ணனை இன்னும் இரண்டே மாசத்தில அமெரிக்கா அனுப்பறாங்களாம். போனா ஒரு வருஷம் வர முடியாதாம். அதுக்குள்ள கல்யாணம் முடிச்சுட்டு கீதாவையும் கூட்டிட்டுப் போறேன்கறாரு.'

'ஓ!' என்றான். 'இரு. கொஞ்சம் ஃப்ரெஷ்ஷாயிருக்கறேன். நீ ஏதாவது சாப்பிடக் குடு!' என்றான்.

அவன் குளித்து விட்டு வருவதற்குள், அவள் லைட் டிஃபன் கொண்டு வந்தாள். கந்தகுரு திடீரென்று, 'வசு, இப்பப் பாரு, வேடிக்கையை! நீ கீதாவைக் கூப்பிடேன்,' என்றான்.

அவள் அவனை விசித்திரமாகப் பார்த்தபடி கீதாவை அழைத்தாள்.

கீதாவும் வந்தாள். கந்தகுரு அவளைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டான்.

'கீத்தும்மா... உனக்குக் கல்யாணம் பேசலாம்னு இருக்கேன். குமார் கேட்டப்ப நீ அண்ணனுக்குப் பிடிச்சாச் சரின்னு சொன்னியாம்...'

'ஆமாண்ணா...' என்றாள்.

கந்தகுரு வசுமதியைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியபடியே, 'இல்ல... கீதா! நான் ரெண்டு யோசனையா இருந்தேன். அந்த ராஜேஷோட தம்பி ராகவனா, இல்ல குமாரான்னு... ஃபிரெண்டுன்னு பாத்தா குமார்தான் பெட்டர். ஆனா, ஏத்த மாப்பிளைன்னு பாத்தா அந்த ராகவ்தான் பரவால்லேன்னு தோணுது...'

கீதாவின் முகம் இருண்டு போனது. திடுக்கிட்டவளாய் வசுமதியைப் பார்த்தாள்.

வசுமதி ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும், அவன், 'நீ பேசாதே! அவ சொல்லட்டும்!' என்றான்.

அவள் சற்றுத் தயங்கிவிட்டு, 'அண்ணா! குமார் மாமா வீட்டை நம்ம எல்லாத்துக்கும் தெரியும். அண்ணிக்கும் ரொம்ப சொந்தம்!' என்றாள்.

'அதுதாம்மா யோசனையா இருக்கு. நாளைக்கு ஏதாவது பிரச்சினை வந்தா மெல்லவும் முடியாம, முழுங்கவும் முடியாமத் திணறக் கூடாதில்லே...'



'ஆனா குமார் மாமா.. அப்படியெல்லாம் பிரச்சினை கிளப்புவாரா என்ன.. ரொம்ப அட்ஜஸ்டபிள்னு எல்லாரும் சொல்றாங்க...' என்றாள்.

'ம்..' என்று சற்று யோசிப்பவன் போல் இழுத்தான். வசுமதி கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'நோன் டெவில் இஸ் பெட்டர் தேன் அன்நோன் டெவில்ங்கறே?'

கீதா இதை எதிர்பார்க்காமல் திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

'ஏன் கீதா.. இத்தனை காரணம்லாம் சொல்றதுக்கு, உனக்கு இவனைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லேன்!' என்றான் கந்தகுரு.

மீண்டும் திகைத்துப் போய் அவன் முகம் பார்த்தவள், அவன் குறும்பாகப் பார்த்து விட்டு வெடிச் சிரிப்புச் சிரிக்கவும் தலை குனிந்து கொண்டாள்.

வசுமதியும் சிரித்து விட்டாள். 'ஏங்க அவளைப் பயமுறுத்தறீங்க?' என்று கீதாவின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

கீதா மெதுவாக அண்ணனைப் பார்த்தாள். 'அண்ணா! எனக்கு மாமாவைப் பிடிக்குதுதான். பட், இன்னும் நா அந்த மாதிரி எதுவும் கற்பனை யெல்லாம் பண்ணிக்கலே. நீ எனக்கு அந்த ராகவனைத்தான் பண்ணி வைப்பேன்னு சொன்னா ஒத்துக்குவேன். எனக்கு எது நல்லதுன்னு உனக்குத் தெரியாதா?" என்றாள்.

கந்தகுரு ஒரு நிமிடம் நெகிழ்ந்தான். பிறகு சிரித்தபடி, 'அப்படிப் பண்றதுக்கு வழியில்லயேம்மா!' என்றான்.

'ஏன்?' என்றாள் வசுமதி.

'ராஜேஷுக்கு ராகவன்னு ஒரு தம்பியே கிடையாது. முதல்ல அவனுக்குத் தம்பியே கிடையாதே!' என்று அவன் மீண்டும் சிரிக்கவும்தான் கீதாவின் முகம் தெளிவடைந்தது.

'போண்ணா!' என்று ஓடி விட்டாள்.

சிரித்துக் கொண்டே அவள் போவதைப் பார்த்தவன், திரும்பினால் வசுமதி அவனை விழுங்குவது போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இப்படித் தமாஷெல்லாம் உங்களுக்குத் தெரியுமாக்கும்!' என்றாள்.

'எனக்கு என்னென்ன தெரியும்னு இனிமேத்தானே தெரிஞ்சுக்கப் போறே!' என்று ஒரு விதமான குரலில் சொன்னான். திடீரென்று சீரியஸாகி, 'வசு.. அந்த ஃபாக்டரி விவரம் உங்க அப்பாகிட்டே பேசினேன். நகையெல்லாம் விக்கவும் வேண்டாம். வைக்கவும் வேண்டாம். எல்லாத்தையும் என் பொறுப்பிலே குடுத்திருங்க. நான் எவ்வளவு தேவையோ தரேன். பாங்க் வட்டி போட்டுக் கொடுத்திருங்க. அப்படீங்கறாரு! வசு... நாளைக்கு எதுவும் பிரச்சினை வராதே...' என்றான்.

'ஒண்ணும் வராது. அப்பா ரொம்ப ரிலையபிள். அப்புறம் ரீஸனபிள்.'

அவன் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு, 'வசு... ஆனா ஒரு கண்டிஷன்...' என்றான்.

'சொல்லுங்க.'

'இந்த விவகாரம் நம்ம மூணு பேரைத் தவிர வேற யாருக்கும் தெரியறதை நான் விரும்பலை!' என்றான்.

'சரீங்க... நிச்சயமாய் நான் யாருக்கும் சொல்லமாட்டேன்!' என்று உறுதியளித்தாள்.



'அப்புறம் கல்யாணத்துக்கு ரெண்டு மாசம்தான்னா ரொம்ப ஷார்ட் டைம் இல்லே. அதுவும் இப்பவே எல்லா ஏற்பாடுகளும் ஆரம்பிக்கணும். இப்ப வைகாசி வளர்பிறை. இடையிலே ஆனி, ஆடி வேற. ஆவணியில கல்யாணம் வச்சிரணும்!' என்று அவன் திட்டம் போட ஆரம்பித்தான்.

- - - - - - - -

குமார் குடும்பத்தவர்கள் முறையாகப் பெண் பார்க்க வந்தார்கள்.

'ஏண்டா ஏதாவது பேசறதுன்னா பேசிக்கோ!' என்று கந்தகுரு கலாட்டா செய்தான்.

'கிடைச்ச சான்ஸை விடுவேனா..' என்று அவன் உடனேயே. எழவும் எல்லாரும் சிரித்தார்கள்.

உள்ளறையில் கீதா முகம் சிவக்க நின்றிருந்தாள். 'ஹேய்... கீதா!' என்று கிறங்கி நின்றான். பிறகு தலையைக் கோதிக் கொண்டவன், 'பேசு பேசுங்கறாங்க... என்னத்தைப் பேசறது? உங்கண்ணன்கிட்டயிருந்து சம்மதம் கிடைச்ச நாள்லயிருந்து உன் நினைப்பாவே இருக்குன்னு சொல்லமுடியுமா? இல்ல.. ஒரு வேலையும் ஓட மாட்டேங்குதுன்னு சொல்ல முடியுமா? ம்..' என்று அவன் கேட்கவும் அவள் சற்றே திரும்பினாற் போல் நின்று கொண்டாள்.

'வேண்டாம்.. எதையாவது பேசி.. நீ பாட்டுக்கு நிம்மதியாயிருக்கே. உன் நிம்மதியையும் கெடுக்கக் கூடாதில்லே.. வேண்டாம். இங்க இனிமே நின்னா வம்புதான்!' என்று அவன் வெளியே போகவும், கீதா வெளியே வரவேயில்லை.

படபடத்துப் போனாள். படபடப்பு அடங்கச் சற்று நேரமாயிற்று. பிறகுதான் இயல்புக்கு வந்தாள்.

வசுமதி வந்தவள் அவள் படபடப்பு பார்த்து சற்று நேரம் கூட இருந்து பேசி விட்டுப் போனாள்.

ஏற்பாடுகள் வெகு வேகமாக நடந்தாற்போலவே திருமணமும் சிறப்பாக நடந்து முடிந்தது. இதற்கு இடையிலே இயற்கை உரத்துக்கான யூனிட் உருப் பெற்றது. அப்பாவிடம் சொல்லித் தன் பர்ஸனல் கம்ப்யூட்டரை வரவழைத்துக் கொண்டு கணக்கு வழக்குகளிலும் கணவனுக்கு வெகுவாக உதவ ஆரம்பித்தாள் வசுமதி.

திருமண ஏற்பாடுகளின் போது அம்மாவும், கமலம்மாவும் அவளையும் கலந்தாலோசிக்கிற மாதிரி அவன் பார்த்துக் கொண்டான். வசுமதியும் நிறைவோடு அலைந்தாள். உழைத்தாள்.

கீதா புகுந்த வீட்டுக்குப் போனதற்குப் பிறகு பத்து நாள் கழித்துக் கந்தகுருவும், வசுமதியும் அவர்கள் வீட்டுக்குப் போனார்கள். கீதாவுக்குச் சமையலில் உதவிக் கொண்டிருந்த வசுமதி ஸ்டோர் ரூமிலிருந்து ஏதோ எடுக்கப் போயிருந்தாள். தேநீர் அருந்திவிட்டு வாஷ்பேசினில் கைகழுவப் போனான் கந்தகுரு. சமையலறையில் ஒரு தடுப்பு இருந்தது. அவர்கள் அந்தப்புறம் இருப்பதைக் கவனியாத குமார் சமையலறையில் நுழைந்து, 'ஹேய்... கீதா!' என்று அவள் பக்கத்தில் நெருங்கி நின்று இழைந்தான். கழுத்தில் முகம் பதித்தான்.

கீதாவுக்கு அவன் கலாட்டாக்கள் இப்போது பழகி யிருந்தது. சில நேரங்களில் அவளும் சரியாகப் பதில் கொடுத்தாள்.

'என்ன காலங்காத்தாலே வழிசல்?' என்றாள்.

'ஏன் காலங்காத்தாலே கூடாதுன்னு எதிலே சொல்லியிருக்கு?' என்றான் அவன்.

'மாமா.. அண்ணா..' என்று அவள் ஆரம்பிக்கவும்,



'அவன் கெடக்கறான் கிறுக்கன். அனுபவிக்கத் தெரியாதவன். தங்கம் போல் வசுமதி. எப்பவாவது இப்படிச் சிரிச்சுப் பேசித் தொலைக்கறானா?' நீ நம்மளைக் கவனி...' என்று அணைத்தான்.

'மாமா.. அண்ணன் பாக்கப் போறாங்க!' என்று அவள் தவிக்கவும்,

'பாத்தா... என்ன? நீ என் வைஃப். வாழ்க்கைன்னா என்னன்னு நம்மளைப் பாத்தாவது தெரிஞ்சுக்கட்டும்!' என்று கேஸ் ஸ்டவ்வை ஆஃப் செய்தான்.

வா நீ என்று இழுத்துக் கொண்டு போனான். 'உட்காரு, நான் டீ குடிக்கறவரை!' என்று எதிரில் உட்கார வைத்தான்.

ஒரு கணம் திகைத்து நின்றிருந்த வசுமதியும், கந்தகுருவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வசுமதி சிரிப்பை அடக்கிக் கொண்டு அந்தப் பக்கம் போனாள்.

அந்த நேரத்தில் குமாரின் பாட்டி அங்கே வந்தார். 'அப்பத்தா..' என்று அவனால் அன்பாக அழைக்கப்படுகிற பாட்டி இந்த வயதில் கூட மிடுக்கும், அழகுமாக இருப்பார்

'ஏண்டா, பேராண்டி! விட்டா பொண்டாட்டிய ஊறுகாய் மாதிரி தொட்டுகிட்டு, டீ குடிப்பியாட்டருக்கு!' என்றார்.

சிரிக்காமல் கலாட்டா செய்வார். 'உனக்கேன் கெழவி... பொறாமை. அப்பாரு என்னமோ அந்தக் காலத்துல உன்ற பின்னாலேயே திரிவாராமா? நீ சோறு கொண்டு போறேன்னு களத்து மேட்டுக்குப் போயிருவியாமா? இப்பவும் சொல்றாங்க!' என்று எழுந்து பாட்டியைக் கட்டிக் கொண்டு சிரித்தான்.

'அப்பத்தா.. உன்ற கன்னத்துக் குழி இப்பவே இப்படி இழுக்குது. அப்பாருக்கு எப்படியிருந்திருக்கும்? என்று முத்தம் வைத்தான். பாட்டி அழகாகச் சிரித்தார்.

கந்தகுரு கூடத் தன்னை மறந்து விரல்களையும் நெற்றிக்கு முட்டுக் கொடுத்தபடி, 'வசு.. இவன் பண்ற லொள்ளு பாரு. தாங்க முடியல!' என்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

வசுமதியும் அதைச் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் கழித்துவிட்டுப் புறப்பட்டார்கள். வழியில் வசுமதி, 'ஏங்க.. கீதா ரொம்ப லக்கி. மாமியாரும் ரொம்ப நல்ல மாதிரிதான்...' என்றாள்.

'ஏன் உனக்கு லக் இல்லேங்கறியா?' என்றான்.

வசுமதி சற்று நேரம் பேசாமல் இருந்தாள். பிறகு 'நா அப்படி நெனக்கலே? நீங்க வேற மேக்!' என்றாள்.

'ஓஹோ! அப்படியா? என்ன மேக்?'

'நேரம் வரும்போது சொல்றேன்.'

அவன் தொடர்ந்து எதுவும் பேசவில்லை. சற்றுத் தூரம் போன பிறகு,

'வசு.. எனக்கு என்னவோ இப்பவே ஒரு பெரிய வலையில விழுந்துட்டு இருக்க மாதிரி இருக்கு..' என்றான்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க?'

'இல்லே.. நான் கூட நீ இல்லாம முடியாதுன்னு ஒரு நெலமைக்கு வந்துருவேன் போல இருக்கு...' என்றான்.

குப்பென்று மலர்க்குவியல் ஒன்று தன் மேல் வீசப்பட்டது போல் உணர்ந்த வசுமதி அமைதியாக அமர்ந்திருந்தாள். பிறகு உள்ளடங்கிய குரலில்,

'பிடிக்கலயாக்கும்?' என்றாள்.

'ஆமா.. ஆனா.. ஒண்ணும் பண்ண முடியலே...'

அவள் தலை குனிந்து கொண்டாள்.



'வசு...'

'ம்...'

'ஆனா.. என் கருத்துக்கள் அப்படியேதான் இருக்கு. அதில மாற்றம் எதுவும் இல்லே'.

அவள் பெருமூச்சு விட்டாள்.

- - - - - -

அன்றிரவு...

அவள் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். பிறகு அவனைப் பார்த்துக் கேட்டாள். 'இத்தனை பழகியும் பெண்கள் மேலே மதிப்பில்லேங்கறிங்களே... நியாயமா?' என்று.

'உன் மேல மதிப்பு இல்லேன்னு சொல்லலியே!' என்றபடி நெருங்கியபோது அவள் வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் பார்வை தவிர்த்து விட்டேற்றியாக அமர்ந்திருந்தாள்.

'ஹேய்..' என்று மீண்டும் நெருங்கிய போது, அவள் 'ஓய்' என்று குமட்டும் உணர்வைக் காட்டவும், அவன் அடி வாங்கியவன் போல் விலகினான்.

'சரி.. வசு! பிடிக்கலேன்னா வேண்டாம்...' என்று நகர்ந்தான்.

அவன் பேசுவது எதுவும் காதில் விழாமல் ஓங்கரித்தபடி வாஷ்பேசினை நோக்கி ஓடினாள். அவள் வாந்தி யெடுக்கிற விதம் பார்த்து அரண்டு போனான்.

தண்ணீர் கொடுத்து அமர வைத்தான். அம்மாவை அழைத்தான். இரண்டு அம்மாக்களும் ஓடி வந்தார்கள்.

தளர்ந்து போய் அவள் அமர்ந்திருந்த விதம் பார்த்து டாக்டருக்கு ஃபோன் செய்ய அவன் போக –

'வேண்டாம்டா, கந்தசாமி. இது வேறடா. நீ அப்பாவாகப் போறடா...!' என்றார் பெரியாத்தா.

அவன் நின்றான். 'அம்மா!' என்றான். சற்று நேரம் மகிழ்ச்சி அந்த வீட்டுக் காற்றில் கலந்தது.

'அவளுக்குத் தூக்கம்டா.. இதைக் குடிச்சிட்டுத் தூங்கட்டும்!' என்று ஹார்லிக்ஸ் கொண்டு வந்தார் கமலம்மா..

குடித்துவிட்டுப் படுத்துக் கொண்டாள். அவர்கள் அந்தப் பக்கம் போன பிறகு, 'வசு.. வசும்மா.. ரொம்பத் தாங்ஸ்ம்மா..' என்று மார்பில் சாய்த்துக் கொண்டான்.

அவள் அரைத் தூக்கத்தில் தன் ஒரு கையால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

'இந்த ஒண்ணு மட்டும் உங்களாலே முடிஞ்சுதுன்னா எங்களை ரொம்பவே தூக்கி யெறிஞ்சுடுவீங்க, இல்லே?' என்றாள்.

'ஏய்.. வசு.. அப்படியெல்லாம் இல்லே. இப்ப நான் ரொம்ப சந்தோஷத்துல இருக்கேன். வம்பிழுக்காதே.. தூங்கு!' என்று தட்டிக் கொடுத்தான்.

'இருக்கலாம், குரு. ஆனா, நீங்க ஏற்கெனவே ஏதோ வலையில் சிக்கியிருக்கீங்க. அந்த வலைக்கும்.. உங்க இயல்புக்கும் ஒரு போராட்டம் நடந்துகிட்டிருக்கு!' என்றாள் உளறலாக.

'அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ தூங்கு!' என்று மீண்டும் தட்டிக் கொடுத்தான்.

அவள் உறங்கி விட்டாள்.

ஆனால் அவன் வெகு நேரம் தூங்காமல் அமர்ந்திருந் தான். தன் மனைவி தன் பிரச்சினையைத் துல்லியமாக உணர்ந்து கொண்டது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'அப்பா மட்டும்.. அப்படி ஒரு கருத்தைத் தன் மனதுக்குள் விதைக்காமல் இருந்திருந்தால்.....!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.



அதை மீறிக் கொண்டு தன் வாரிசு வரப்போகிற சந்தோஷம் அவனை ஆட்கொண்டது. வசுமதியின் தலையைக் கோதிக் கொடுத்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான், வெகு நேரம் உறக்கம் வரும் வரை..

## 10

வசுமதியின் வயிற்றில் கரு வளர வளர, அதே நேரத்தில் அவனது வடிவமைப்பிலான அந்த இயந்திரத்தையும் வல்லுநர்களின் ஆலோசனைகளோடு செம்மைப் படுத் தினார்கள்.

வெளிநாடு செல்வதற்கு முன்பாகக் குமார் கூட இருந்து எல்லா உதவிகளையும் செய்து விட்டுக் கிளம்பினான்.

மாமனாரிடம் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு நகைகளைக் கொடுத்துப் பணம் பெற்றுக் கொண்டான். தன் தந்தை தனக்கென்று எழுதி வைத்திருந்த 10 ஏக்கர் இடத்தை ஈடாகக் கொடுத்து வங்கிக் கடன் குறைந்த வட்டியில் பெற்றார்கள்.

அதற்கு முன்பு அவனுக்கும் வசுமதிக்கும் வெகுவாக விவாதம் நடந்தது.

'வசு... நான் அப்பாவோட பணமோ.. உங்க பணமோ வேண்டாம்னு நெனக்கிறேன். நீ அப்பாவோட நிலத்தையே ஈடாக வைக்கலாம்கறே... எனக்குப் பிடிக்கலே...'

'அப்படியில்லீங்க... முதல்படியில காலூனிக்கிட்டுதானே அடுத்தது வைக்கணும். பாங்க் கடன் கிடைச்சவுடனே நகையைத் திரும்ப வாங்கிரலாம். அப்புறம் ஓரளவுக்கு ஃபாக்டரி வளர்ந்ததுக்கு அப்புறம் நிலத்துக்கு உண்டான விலையைக் குடும்பத்துக்குக் கொடுத்தரலாம்,' என்றாள்.

சரியென்று ஏற்றுக் கொண்டான்.

'ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சிக்கோ. வேற யாருக்கும் தெரியக் கூடாது. இது என் கௌரவப் பிரச்சினை... கொள்கை...' என்றான்.

'சரிங்க...!' என்றாள்.

ஐந்து மாதம் ஆனதும் வசுமதி இப்போது வெகுவாக உழைத்தாள். அவனுக்கும் கடிதப் போக்குவரத்துகளில், கணக்கு வழக்குகளில் நன்றாக உதவி செய்தாள்.

ஒரு நாள் தங்கள் பண்ணை வீட்டில் அவளை வாக்கிங் அழைத்துப் போய்க் கொண்டிருந்தான்.

'உங்க கனவுத் தொழிற்சாலை மாதிரி எனக்கும் ஒரு கனவுத் திட்டம் இருக்கு!' என்றாள்.

'சொல்லு... முடியும்னா... பார்க்கலாம்..'

'ஒரு சின்னக் கிரெச் ஆரம்பிக்கலாம். நம்ம கிராமத்துல இருக்கிற குழந்தைகளுக்கெல்லாம் நிறைய நல்ல விஷயங்கள் சொல்லித் தரணும்...' என்றாள்.

'வசு...' என்று சிந்தனையுடன் அவளைப் பார்த்தான்.

'இது... நகரம் மாதிரி இல்லே. பெரிய வீடுன்னு நம்ம வீட்டுக்குப் பேரு. நீ போய் இறங்கி டீச்சராவெல்லாம் பாடம் சொல்லிக் கொடுக்க ஒத்துக்க மாட்டாங்க!' என்றான்.

'சரி... அப்ப அந்தக் 'கவியருவி' இருக்காளே.. நம்ம சொந்தக்காரப் பொண்ணு. வசதியில்லாதவ. ஆனா, பிளஸ் டூ முடிச்சிருக்கா... அவளைப் போடலாமா?' என்றாள்.

'சரி...' என்றான்.

'பெரியாத்தாள் மழலையர் பள்ளி' எனத் தொடங்கி, கவியருவியை ஆசிரியையாகப் போட்டார்கள். அவளைத் தபாலில் மேல்படிப்புப் படிக்கச் செய்தார்கள். ஓய்வு பெற்ற ஒரு



ஆசிரியையை பிரின்சிபால் ஆக்கினார்கள். 'வசுமதி! நீதான் கரஸ்பாண்டெண்ட்!' என்றான்.

தினமும் ஒரு மணி நேரம் போய்க் குழந்தைகளோடு இருந்து விட்டு வருவாள். பள்ளியின் தரம் பார்த்து அக்கம் பக்கத்தவர்கள் எல்லாம் படையெடுத்ததில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. கூடத் தொடங்கினார்கள்.

கந்தகுரு தன் அம்பாசிடர் காரை அவர்களுக்குக் கொடுத்து விட்டுக் கம்பெனிக்கென்று ஒரு மாருதி வாங்கிக் கொண்டான். பெரியாத்தா நிலபுலன்கள் பார்க்கப் போய்விடுவார். பதினோரு மணி வாக்கில் அவள் பள்ளிக்குச் செல்வாள். உணவு நேரத்தில் கணவன், மனைவி இருவருமாக வீட்டுக்கு வருவார்கள். பிறகு அவன் கிளம்பிப் போனபின், படிப்பது, எழுதுவது அவனுக்குக் கணக்கு வழக்குப் பார்ப்பது என்று செய்வாள்.

மாலை நேரங்களில் கோவிலுக்கு அழைத்துப் போவான். தங்கள் வயல் பகுதிகளில் வாக்கிங் அழைத்துப் போவான். இப்போது அவள் ஏழாவது மாதத்தில் இருந்தாள்.

அன்றைக்கும் அப்படித்தான், அவர்கள் காலார நடந்து கொண்டிருந்தார்கள். நடக்க நடக்க நின்று சிரித்தாள்.

'என்ன வசு..?' என்று கேட்டான்.

'உதைக்கறான்.. உங்க மகன்...' என்று சிரித்தாள்.

அவன் முகம் மலர்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்து விட்டுத் தொட்டுப் பார்த்தான்.

'வசு... இது எவ்வளவு அற்புதமான விஷயம் இல்லே...' என்று சிரித்தவன், தயங்கியபடி, 'வசு...!' என்று மறுபடியும் அழைத்தான்.

'ம்...?'

'நா ஒண்ணு சொல்வேன். ஒத்துக்குவியா?' என்றான்.

'என்னங்க...?'

'பிரசவம் இங்கேயே பாத்துக்கலாமா...?'

அவள் நின்று அவனைப் பார்த்தாள். 'ஏன்...?' என்பது போல்.

அவன், 'வசு.. இங்கே இயற்கையான காத்து... நல்ல பால்... தயிர்... காய்கறிகள்... அப்புறம் ஆரோக்கியமான சூழ்நிலை...' என்றான்.

வசுவால் மறுக்க முடியவில்லை. ஏழாம் மாதம் ஆரம்பித்ததில் இருந்தே பெரியாத்தா மாலை நேரம் வாக்கிங் போய் வந்த பின்பு அவளுக்கு இடுப்பில் அயுர்வேதத் தைலம் போட்டு நீவி விட்டுப் பின் வெந்நீரில் குளிக்கச் செய்வார்.

சீரகக் கஷாயம், அது இது என்று நன்றாக மாற்றி மாற்றிக் கவனித்தார்கள். இரவு நேரங்களில் நன்றாக உறங்கினாள். ஆரோக்கியமாக இருந்தாள். கிராமத்துச் சூழ்நிலை அவளுக்குப் பிடித்து விட்டது. அவனும் அவளைப் பூப்போல் தாங்கினான்.

'ஆனால்... அம்மா... என்ன நினைப்பார்களோ?' என்றாள்.

'வசு... சொல்றேன்னு தப்பா நினைக்காதே. உங்க அம்மா அங்க வேலைக்காரங்களை வச்சுத்தான் பாத்துக்கப் போறாங்க. ஆனா... இங்க...'

வசுமதி ஒன்றும் பேசவில்லை.

'வசு... வளைகாப்பு முடிந்ததும் போய்ப் பத்துநாள் இருந்துட்டு வா. இங்கே பக்கத்துலயே டாக்டர்.. உன் ஃபிரண்டு வேற இருக்காங்க!' என்றான்.

வசுமதி அப்பாவிடம் பேசினாள். அப்பா சற்று யோசனைக்குப் பின் ஏற்றுக் கொண்டார். சந்திரவதனி மட்டும் அதைப் பெரிய அவமானமாக எடுத்துக் கொண்டாள்.



ஆனால், காட்டிக் கொள்ளவில்லை.

வந்தனாவிடம் மட்டும், 'டீ... வந்தனா.. நான் முதல்லயே சொன்னனே, கா்வம் பிடிச்சவன்டி அவன், எப்படி சாப்ட்டா அவமானப் படுத்தறான் பாரு!' என்றாள்.

'அம்மா... அப்படியொண்ணும் இல்லே.. அங்க இயற்கையான ஆரோக்கியமான சூழ்நிலை. தப்பா எடுத்துக்காதே...!' என்றாள்.

வசுமதி வளைகாப்பு முடிந்தவுடன் அம்மா வீட்டில் பத்து நாள் இருந்தாள். ஒரு வாரத்திற்குள் அவளுக்கே தன் ஊருக்குப் போக வேண்டும் போல் இருந்தது.

பெரியாத்தாவும், கமலம்மாவும் அவளை அழைக்க வந்தார்கள். அவனும் வந்தான். எதையும் காட்டிக் கொள்ளாமல் உபசரித்தாள் சந்திரவதனி.

- - - - - - - -

அன்றிரவு.

மாமனாரும், மருமகனும் அவர்கள் வீட்டுப் புல்வெளியில் சேர் போட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

'மாமா... ஃபேக்டரிக்கான எல்லா ஏற்பாடுகளும் ஆயிருச்சு. குழந்தை பிறந்தவுடனே கட்டிடம் ஆரம்பிச்சுர வேண்டியது தான்...' என்றான்.

அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

'ரொம்ப டைம்லி ஹெல்ப் உங்களோடது. லோன் சாங்ஷனானதும் முதல் வேலையா உங்ககிட்ட இருந்து ஜுவல்ஸ் மீட்ரணும்னு முடிவு பண்ணியிருக்கேன்.'

'அது ஒண்ணும் பிரச்சினையே யில்லை. இப்பவே வேணும்னாலும் எல்லாத்தையும் எடுத்துட்டுப் போங்க. நீங்கதான் பிடிவாதம் பண்றீங்க!'

'இல்ல.. இருக்கட்டும்.. மாமா.. எனக்குன்னு சில கருத்துக்கள் இருக்கு. சில கொள்கைகள் இருக்கு. அதை யெல்லாம் மாத்திக்க முடியறதில்லே!' என்றான் சிரித்தபடி.

'வசு சொன்னா, மாப்பிளே. 'அப்பா, அவரு ரொம்ப நேர்மையானவர்ப்பா. உழைப்பாளி... குடும்பச் சொத்துக்குக் கூடத் தன்னை கார்டியன்னுதான் சொல்லிக்கறாரு. 'என்னோட கருத்து இதுதான், ஏத்துக்கிட்டா ஏத்துக்க... விட்டா விடு!'ன்னு சொல்லீருவாரு!'ன்னு உங்களைப் பத்தி ஒரே பெருமைதான் போங்க... என்று பெருமையாகச் சிரித்தார்.

அவனுக்குக் கூட வசுமதி தன்னைப் பற்றி இப்படி யெல்லாம் சொல்லியிருப்பது ஆச்சரியம் தந்தது. புன்னகைத்துக் கொண்டான். பேச்சு மும்முரத்தில் அந்தப் பக்கத்தில் சந்திரவதனி மெதுவாகக் கடந்து சென்றதை அவர்கள் கவனிக்க வில்லை.

'அவளுக்கும் கருத்துக்கள் வச்சிருப்பா, மாப்பிளே, ரொம்ப விட்டுக் குடுப்பா. அன்புக்குக் கட்டுப்படுவா.. ஆனா, தன்னோடு கருத்திலே உறுதியாய் இருப்பா...' என்றார்.

'தெரியும்... என்று சிரித்தான்.

'நாங்க கருத்து மோதல் வச்சுக்கறதில்லேன்னு ஒரு அக்ரீமெண்ட்!' என்று மீண்டும் சிரித்தான்.

'அது உத்தமம், மாப்பிளே!' என்று அவரும் சிரித்தார்.

\- - - - - -

உத்தேசமான பிரசவ நேரத்தில் முத்துவேல் தன் மனைவியோடும், மகளோடும் அவர்கள் ஊருக்கே போனார்.

அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்துச் சிறப்பாகக் கவனித்தான் கந்தகுரு. சந்திரவதனி சற்றே சமாதானம் ஆனாள்.



பக்கத்திலே இருந்த டவுனில் நல்ல ஆஸ்பத்திரியில் கந்தகுருவுக்கு மகன் பிறந்தான். கொழு கொழுவென்று அவனுடைய சிரிப்புடனும்... வசுமதியின் சாயலுடனும் சிரித்த குழந்தை எல்லோர் மனசையும் கொள்ளையடித்தான்.

கந்தகுரு மேஸ்திரியை செல்ஃபோனில் அழைத்து ஃபாக்டரிக்கு அன்றைக்கே அடிக்கல் நாட்டச் சொன்னான்.

வசந்தியும், தன் கணவரோடு வந்து ஒரு வாரம் தங்கியிருந்து சென்றாள். மூன்றாம் நாளே வீட்டுக்கு வந்து விட்டார்கள். சந்திரவதனி ஒரே வாரத்தில் கிளம்பி விட்டாள்.

'அத்தை... நாலைஞ்சு மாதத்தில் அனுப்பி வைக்கிறேன். அங்க உங்க ஆசை தீர வைத்திருந்து அனுப்புங்க...' என்றான்.

'எல்லாம் உங்க எணணப்படிதான் நடக்கப் போகுது. உங்க வசதி போலச் செய்ங்க...' என்று விட்டேற்றியாகச் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

அவர்கள் போன பிறகு அன்றிரவு தனிமை கிடைத்த போது, 'வசு... உங்கம்மா என்னைத் தப்பாப் புரிஞ்சுட்டாங்க போலிருக்கு...' என்றான்.

'அவங்க எப்ப யாரைச் சரியாகப் புரிஞ்சுக்கறாங்க... பெரிசா எடுத்துக்காதீங்க...' என்றாள் வசுமதி. அவள் கூடத் தன் அம்மாவை இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பது அன்றைக்கு அவர்களுக்குத் தெரியவில்லை.

## 11

குழந்தைக்கு நாற்பத்தைந்தாவது நாள் கமலம்மாவின் பிறந்த ஊரில் இருந்த கோவிலுக்கு அழைத்துப் போனார்கள். குல தெய்வமாம்.

பொங்கல் வைத்துப் படையல் செய்தார்கள். உறவினர்களான சுமங்கலிப் பெண்களை அழைத்துப் போயிருந்தார்கள். குமாரின் அம்மா கூட வந்திருந்தார்.

கந்தகுரு பிற்பகல் உணவு வரை இருந்து விட்டு வேலையிருக்கிறது என்று புறப்பட்டுப் போனான். கமலம்மா தான் பிறந்து வளர்ந்த வீட்டுக்கு அழைத்துப் போனார்.

மிகச் சிறிய ஓட்டு வீடு. 'என்ன பாக்கறே? வசுமதி.. எல்லாம் அக்கா கொடுத்த வாழ்வு!' என்றார், அந்தப்புறம் நின்று பேசிக் கொண்டிருந்த பெரியாத்தாவைப் பார்த்தபடி.

குமாரின் அம்மா எல்லாம் விவரமாகச் சொன்னார்.

செந்தில் நாயகம் – அதுதான் கந்தகுருவின் அப்பா பெயர், பெரியாத்தாவை விருப்பப்பட்டுக் கல்யாணம் செய்தாராம்.

மிக வசதியான குடும்பத்துப் பெண்ணாம்.

மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்களாம். ஆனால், பன்னிரண்டு வருஷமாகியும் குழந்தை பிறக்கவில்லை.

செந்தில் நாயகம் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

'சும்மாயிரு புள்ளே. இப்ப என்ன வயசா ஆயிப் போச்சு...? பாக்கலாம், பொறு...!' என்றாராம்.

ஆனால், பெரியாத்தாதான், 'ஒரு வருஷம்.. ரெண்டு வருஷம்.. அட அஞ்சு வருஷம் சரி.. இத்தனை வருஷமாகியும் பொறக்கலேன்னா.. நான்தான் மலட்டுக் கிறுக்கி...' என்று அழுது கரைவாராம்.

ஒரு நாள் சலித்துப் போய்த் 'தத்தெடுத்துக்கலாம்.. புள்ளே...' என்றார்.

'அதெல்லாம் வேண்டாம். உங்க ரத்தம் மாதிரி ஆகுமா...?' என்றாள்.



'இப்ப என்ன செய்யணுங்கறே...?' என்றார்.

'என்ற சின்னம்மா புள்ளே... கமலா இருக்கா இல்ல. பெத்த அப்பனும் இல்லே. அம்மாவும் போயிட்டா. ரொம்பக் கஷ்டப்படறா. அவளைக் கல்யாணம் பண்ணி வக்கிறேன். செஞ்சுக்கங்க...' என்றாள்.

'த்தேய்... என்ன விளையாடறயா...? செருப்புக் கட்டை பிஞ்சிடும்... போடி...' என்று கோபமாக எழுந்து போனார்.

சற்று நேரம் கழித்துத் திரும்ப வந்த போது பெரியாத்தாளைக் காணவில்லை. தேடினால்... பின்கட்டில் அமர்ந்திருந்தாள்.

தன் கம்பீரமான மீசையை நீவியபடி அவளைக் கூடத்தில் உள்ள ஊஞ்சலில் மடியில் சாய்த்துக் கொண்டார். ராசாத்தி என்றுதான் அழைப்பார்.

'பாரு.. ராசாத்தி.. மனசு கூறு போட்டுக்கற சமாச்சாரமில்லே... உன்ற உசுரு இருக்கற வரைக்கும்... என்ற உசுரு இருக்கற வரைக்கும்... இதெல்லாம் நடக்காது!' என்றார்.

ராசாத்தி முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

அடுத்த நாள் பதினோரு மணிக்கு மில்லுக்கு ஆள் வந்தது. பெரியாத்தா அரளி விதையை அரைத்துக் குடிக்க முயன்றாள். கடைசி நேரத்தில் தடுத்து விட்டார்கள்... என்ற செய்தியுடன். செந்தில் நாயகம் அதிர்ந்து போனார். அவர் வந்தவுடன் எல்லாரும் விலகிப் போனார்கள்.

'ஐயோ.. என்ன ராசாத்தி.. இப்படி மனுஷனைச் சோதிக்கறே?' என்றார் ஆழ்ந்த வருத்தத்துடன்.

'நீங்கதானே சொன்னீங்க... என்ற உசுரு இருக்கற வரைக்கும் நடக்காதுன்னு... நான் போயிட்டாலாவது அந்தக் கமலாவைக் கட்டிப்பீங்கன்னுதான்...' என்றாள் ஈன சுரத்தில்.

அவர் செய்வதறியாது அவளைப் பார்த்தார். பின்னர் ஒரு பெருமூச்சு விட்டு...

'சரி... புள்ளே!.. உன்ற விருப்பம் போலச் செய்...' என்றார்.

கமலம்மாவைத் தானே முன் நின்று திருமணம் செய்து வைத்தாள்.

தானும் அதே வீட்டில் இருந்தால் கணவர் இயல்பாய் இருக்க மாட்டார் என்று பண்ணை வீட்டுக்குப் போய் விட்டாள். சனி, ஞாயிறுகளில் அவர் அங்கே போய்விடுவார்.

கமலம்மா பெரியாத்தாவைத் தெய்வமாக மதித்தாள். அவள் வார்த்தைக்கு மறு பேச்சுப் பேச மாட்டாள்.

வந்த முதல் ஆண்டிலேயே கந்தகுரு பிறந்தான்.

அதற்குப் பிறகுதான் அந்தத் திருப்பம் நேர்ந்தது. கந்தகுருவுக்கு இரண்டு வயது இருக்கும் போது ராசாத்தியும் உண்டானாள். பண்ணை வீட்டில் வைத்து ஒரு நாள்...

'அவசரப்பட்டுட்டியே... ராசாத்தி... இதுக்குத்தான் கொஞ்ச நாள் பாக்கலாம்னு சொன்னேன்...!' என்றார் செந்தில் நாயகம்.

அவள் அச்சத்துடன் அவரைப் பார்த்தாள்.

'அப்படியெல்லாம் பார்க்காதே... ராசாத்தி! ஏத்துகிட்டது ஏத்துகிட்டதுதான். உன்ற தங்கச்சிக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டேன்...' என்றார்.

ராசாத்தி நிம்மதியானாள். ஆனால் தன் பேரில் இருந்த சொத்துக்களை யெல்லாம் முதலில் தன் கணவன் பேருக்கு மாற்றி உயிலெழுதினாள்.

அதே மாதத்தில் கமலம்மாவும் உண்டாயிருப்பதாக மருத்துவச்சி சொன்னாள். தங்கள் பண்ணை வீட்டிலேயே இரண்டு பிரசவங்களும் நிகழ்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டாள் ராசாத்தி.





ஆனால், அவளது துரதிர்ஷ்டம் அவள் குழந்தை இறந்தே பிறந்தது.

'என்ன ராசாத்தி... இப்படி!' என்று செந்தில்நாயகம் வருந்தியபோது,

'போனாப் போகுது, விடுங்க. எப்படியோ நான் மலடியில்லேன்னு ஆச்சு. அது போதும்...' என்றாள்.

கமலம்மாவுக்குத் தாய்ப்பால் இருக்கவில்லை. கீதாவுக்குத் தன் தாய்ப்பாலை ஊட்டிப் பிரியமாய் வளர்த்தாள்.

வசுமதி இதையெல்லாம் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனாள்.

'சினிமாக் கதை மாதிரி இருக்கு, சின்னம்மா...' என்றாள்.

'அது மட்டுமில்லே. சின்னதிலிருந்து பெரியாத்தாதான் தெய்வம்னு சொல்லிச் சொல்லிக் குழந்தைகளை வளர்த்திருக்கா, கமலாம்மா.'

'எங்கயோ நாலு வீட்ல பாத்திரம் கழுவற நெலமையில இருந்தவடா, எங்கப்பன் குடிச்சே எல்லாச் சொத்தையும் தொலைச்சான். அவன்கிட்டே அடிபட்டே அம்மா செத்தாள், நடுத் தெருவில நின்னவளை எசமானியாக்கினவ, அக்கா. தொட்டுக் கும்புடோணுமடா அவளை!' என்பாளாம்.

வசுமதி வழியெல்லாம் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

'இந்தச் சொத்துக்குத் தான் கார்டியன் மட்டுமே என்றும், தன் சொந்த உழைப்பால் முன்னேற வேண்டும் என்றும் கணவன் நினைப்பது இதனால்தானோ...' என்று எண்ணிக் கொண்டாள்.

தன் கணவனுக்கு எல்லார் மாதிரியும் குடும்பம் அமைய வில்லை என்றும், கமலம்மா தன் தாழ்வு மனப்பான்மையை அவனுக்குள்ளும் ஊட்டி வளர்த்து விட்டாள் என்றும் தோன்றியது.

அதனால்தான் 'வலை.. வலை..' என்று அடிக்கடி சொல்கிறானோ. பெற்றது யாராக இருந்தால் என்ன, அவன் செந்தில் நாயகத்தின் உரிமையுள்ள மகன்தான் என்பது மட்டுமே அவனை நிமிர்ந்து நடக்கச் செய்கிறது என்றும் எண்ணிக் கொண்டாள்.

'என்ன சின்னம்மா.. எல்லா ரெண்டு பொண்டாட்டிக்காரர்களுக்கும் ஒரு பிரச்சினைன்னா எங்க மாமாவுக்கு வேறு மாதிரிப் பிரச்சினை இருந்துருக்குமாட்ட இருக்கு!' என்றாள்.

'ஏன் அப்படிச் சொல்றே?'

'இல்லே, ரெண்டு அத்தைகளும் விட்டுக் கொடுக்கிறதுக்கில்ல போட்டி போட்டுருப்பாங்களாட்ட இருக்கு... விசித்திரமான போட்டியாயிருக்கே.

'அதையேன் கேக்கறே.. சட்டப்படியும் பிரச்சினை வரக் கூடாதுன்னு வக்கீலை வச்சு உன்ற வீட்டுக்காரன் மேஜர் ஆனதும் எல்லாச் சொத்தையும் அவன் பேருக்கு எழுதி வச்சிட்டா இல்ல... ராசாத்தி...' என்றதும் இன்னும் ஆச்சரியமானாள்.

அன்றிரவும் ஆழ்ந்த யோசனையிலேயே இருந்தாள்.

'என்ன... வசுமதி, ரொம்ப யோசனை? என்று கேட்டான் கந்தகுரு.

'ஒண்ணுமில்லே. ஃபாக்டரி நல்லபடியா வரணும். உங்க கனவெல்லாம் நிறைவேறணும். சொந்தக் கால்ல நின்னு உங்க ஆசைப்படி சாதிக்கணும்னு வேண்டிக்கிட்டேன்!' என்று அவள் சொன்னதும் அவன் வியப்பாகப் பார்த்தான்.

'எங்கே?' என்றான்.

'ம்.. குலதெய்வத்துக் கோயில்ல..' என்றாள்.

அவன் நெகிழ்ந்து போனான்.



'ஆமாங்க.. வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது சாதிக்கணும். அப்பத்தான் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கும். 'பெரிய வீடுங்கற பேரு மாறி கந்தகுரு வீடுங்கற பேர் வரணுங்க..' என்றாள் ஆத்மார்த்தமாய்.

'தேங்க்ஸ்... வசுமதி. கண்டிப்பா உன் வேண்டுதல் பலிக்கும். பயலுக்கு ஐந்தாவது மாசத்தில ஃபாக்டரி முழுசா உருவாயிடும் பாரு... அடுத்த மாசம் நகையெல்லாம் மீட்டுருவேன்!' என்றான்.

சொல்லியபடியே செய்தான்.

ஃபாக்டரியின் திறப்பு விழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக அவளை அணைத்துக் கொண்டு மகிழ்ச்சியாகச் சிரித்தான்.

பல நாட்களுக்குப் பிறகு தன்னை அணுகிய கணவனின் மகிழ்ச்சி புரிந்து அவளும் அதைப் பங்கிட்டுக் கொண்டாள். வெகு நேரம் பேசிச் சிரித்து மகிழ்ந்து உறங்கினார்கள்.

அந்த மகிழ்ச்சிதான் வரப்போகிற பிரிவுக்கு முந்தைய கடைசி சந்தோஷமாக இருக்குமென்று அன்றைக்கு வசுமதிக்குத் தெரியவில்லை.

## 12

**ஃபா**க்டரி திறப்பு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. ஏழாவது மாதத்தில் இருந்த மகன் கையால் ரிப்பன் வெட்டித் திறக்கச் செய்தான். முத்துவேல் பேரனைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார்.

செந்தில்வேல் என்று மகனுக்குப் பெயர் வைத்திருந்தான். செந்திலின் பெயரிலேயே ஃபாக்டரி நிறுவியிருந்தான்.

கோயமுத்தூர் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் இருந்த பல பெரிய வியாபாரப் புள்ளிகள் வந்திருந்தார்கள். குமார் ஃபோன் செய்து பாராட்டினான். வருவதற்கு இன்னும் ஆறு மாதம் ஆகும் என்றும், இந்தச் சமயத்தில் இல்லாமல் போனோமே என்றும் வருத்தப்பட்டான். வீடியோ எடுத்து அனுப்பச் சொல்லிக் கேட்டுக் கொண்டான்.

முத்துவேலின் வீட்டிலிருந்து எல்லாரும் வந்திருந்தார்கள். அங்கேயே தங்கினார்கள். ஃபாக்டரி திறப்பு விழா அன்றைக்கு மாலையில் எல்லாரும் களைப்பாகி விட்டார்கள். சந்திரவதனி அன்றைக்கே புறப்படலாம் என்றாள்.

கந்தகுரு, 'அத்தை, இரண்டு நாள் இருந்து விட்டுப் போங்க!' என்று வற்புறுத்தவும் தங்கினார்கள்.

மறுநாள் அவர்களுக்குத் தன் வீட்டில் தடபுடல் விருந்தளிக்கச் செய்தான். அன்று இரவு தோட்டத்துப் பக்கம் எல்லாரும் சேர்களில் அமர்ந்தபடி நடந்த ஃபங்ஷனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பெரியாத்தாள், கமலம்மா, கந்தகுரு, சந்திரவதனி, முத்துவேல் எல்லாரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சற்று வேலைகள் முடிந்த பின், அந்தப் பக்கம் வந்த வசுமதியை, 'வசு! அதெல்லாம் அப்புறம் பாக்கலாம். கொஞ்சம் இங்கே எங்களோட உட்காரு!' என்று கந்தகுரு சொல்லவும், அவளும் வந்து அமர்ந்தாள்.

செந்தில் ஆள் மாற்றி ஆள் தாவிக் கொண்டிருந்தான். கொழுகொழுவென்றிருந்தான். பேசிக் கொண்டிருந்த போது நடுவில் கமலம்மா யதார்த்தமாக, 'என்ன இருந்தாலும் கிராமத்து ஆரோக்கியம் மாதிரி வருமா. உன்ற பேரனைப் பாரு சந்திரா...' என்றார்.



சந்திரவதனியின் முகம் சுருங்கி விட்டது. 'அதென்னமோ நிசந்தான். குழந்தைக்கு நல்லதுன்னுதான் மாப்பிளை இங்கேயே பிரசவம் பாக்கணும்னு சொல்லியிருக்காரு. அப்ப நாங்கூட அவரைத் தப்பா நெனச்சேன். ஆனா, ஒரு தேவைன்னு வந்தப்ப எங்ககிட்டதான வந்தாரு!' என்றாள்.

மகனைக் கொஞ்சிக் கொண்டிருந்த கந்தகுரு சட்டென்று நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான்.

'நீ என்ன சொல்றே?' என்று கேட்டார் பெரியாத்தா.

'இல்லே... லோன் போடறதுக்கு முன்னாடி 25 பர்சண்டு நம்ம முதலீடு போடணுமில்லே. அந்த முதலீட்டுக்கு நகையெல்லாம் எங்ககிட்டதான அடகு வெச்சாரு!' என்றாள்.

எல்லாரும் ஒரு நிமிடம் திகைத்துப் போனார்கள்.

'என்ன உளர்றே?' என்று சீறினார் முத்துவேல்.

'பின்னே நகையெல்லாம் உங்ககிட்ட அடகு வைக்கலே...?'

'உளறாதே... அவங்க நகையெல்லாம் அவங்க கிட்டதான் இருக்கு. நீ போட்டது மட்டும்தான் நம்ம வீட்டுல இருக்கு. அம்மா... வசுமதி.. நீ போய்க் கொண்டு வந்து காட்டும்மா...' என்றார் முத்துவேல்.

வசுமதி தன் கணவனை ஏறிட்டும் பாராமல் போய் நகைகளை எடுத்து வந்தாள். நகைப் பெட்டியைத் திறக்க முயற்சித்தபோது, 'அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நாங்க எதுவும் கேக்கலயே. அப்படித்தான் அவன் வாங்கினா, அது அவன் இஷ்டம்தானே!' என்றார் பெரியாத்தா.

நகைப் பெட்டி திறந்து கிடந்தது. கந்தகுரு இறுகிய முகத்தோடு அமர்ந்திருந்தான்.

'ஏம்பா.. அப்படிச் செஞ்சே?'

அவன் குரலே எழும்பாமல், 'அப்பா பணமும் இல்லாம, மாமனார் பணமும் இல்லாம, சொந்தக் கால்ல சாதிக்கணும்னு நெனச்சேன்...' என்றான்.

'ஓ... என்னையெல்லாம் இன்னும் அம்மாவா ஏத்துக்கல... இல்லே...'

அவன் இறுகிய முகத்துடன் ஆழ்ந்த குரலில் சொன்னான். 'கமலம்மா பட்டிருக்கிற நன்றிக் கடன் பத்தாதா? நா யாருக்கும் நன்றிக் கடன் பட விரும்பலே...' என்றான்.

எழுந்து போய் விட்டான்.

தேம்பியழுத பெரியாத்தாவை வசுமதி தாங்கிக் கொண்டாள். தன்னை மறந்து ஆத்திரத்தில் வசுமதி,

'அவர் அப்படி நினைக்கறதுக்குக் காரணம் சின்னத்தை தான். எப்பப் பாரு, அக்கா தெய்வமடா, நன்றி செலுத்த ணும்டான்னு சொல்லிச் சொல்லி இயல்பா இருக்க முடியாம பண்ணிட்டாங்க!' என்றாள்.

'ஏங் கமலா... அப்படிச் சொல்லுவியா என்ன?' என்றார் கண்ணைத் துடைத்தபடி.

'நா ஏதோ யதார்த்தமாச் சொன்னேன். மனசுல பட்டதைச் சொன்னேன். இவன் இப்படி நினைப்பான்னு நான் கண்டனா? என்று அவள் ஒரு பக்கம் அழுதாள்.

வசுமதி, 'அத்தை, ஆம்பளைங்களுக்குக் கொஞ்சம் சுயமரியாதை ஜாஸ்தியிருக்கும். ஆனா, அவரு உங்க மேல உசுரையே வச்சிருக்காரு, எல்லாம் சரியாயிரும். வாங்க...' என்று உள்ளே அழைத்துப் போனாள்.

கமலம்மா அழுதுகொண்டே நகைப் பெட்டியைக் கொண்டு போய்ப் பீரோவில் வைத்துப் பூட்டினாள்.



சட்டென்று பெரியாத்தா சுதாரித்துக் கொண்டார். 'சரி, வசுமதி, நம்ப பிரச்சினையை அப்புறம் பாக்கலாம். நீ போய் உங்கப்பாவையும், உங்கூட்டுக்காரனையும் சமாதானப்படுத்து!' என்று அனுப்பி வைத்தார்.

வசுமதி அப்பா தங்கியிருக்கும் அறைக்குப் போனாள். சந்திரவதனி அழுதபடி கட்டிலில் திரும்பிப் படுத்துக் கொண் டிருந்தாள். அப்பா அவளிடம், 'நீ உங்கம்மாகிட்ட சொன்னி யாம்மா?' என்றார்.

'இல்லப்பா.. நா எங்க சொன்னேன்?' என்றாள்.

சந்திரவதனி, 'நானே கேட்டேன்.. மாமனாரும், மருமகனும் பேசிக் கொண்டிருந்தப்ப நம்ம வீட்டுல...' என்று எழுந்து விரைப்பாகச் சொல்லவும், இன்னொரு அறை விழுந்தது.

'அப்பா, ப்ளீஸ்...' என்றாள் வசுமதி.

'சும்மாயிரம்மா.. நா இதை எப்பவோ செஞ்சிருக்கணும். இதுவரைக்கும் என் வாழ்க்கைல விளையாடினது பத்தாதா? உங்க வாழ்க்கையில வேற விளையாடணுமா?' என்றவர், திரும்பி.. 'பத்து நிமிஷத்துலே முகம் கழுவிட்டுக் கிளம்பு. கலகம் பண்றதே வேலையாப் போச்சு... வாம்மா.. நான் மாப்பிளகிட்ட பேசறேன்...' என்று எழவும்,

'வேண்டாப்பா.. நா அவரைக் கீழே கூப்பிடறேன். நீங்க எதுவும் பேச வேண்டாம். புறப்படறோம்னு மட்டும் சொல்லிட்டுக் கிளம்புங்க!' என்றாள்.

கீழிருந்தபடியே... 'ஏங்க, அம்மாவும் அப்பாவும் கிளம்பறாங்களாம்...' என்று குரல் கொடுத்தாள். ஒரு நிமிடம் பதில் வரவில்லை. பிறகு, 'இதோ வரேன்!' என்று குரல் கொடுத்தபடி மகனை ஏந்தியபடி கீழே வந்தான்.

'புறப்படறோம், மாப்பிளே. எல்லாம் அப்புறம் பேசிக்கலாம்...' என்று புறப்பட்டார்.

'சாரி, மாமா...' என்றான்.

'பரவால்லே... பரவால்லே...' என்று கிளம்பினார். அனுப்பிக் கொடுத்து விட்டு வசுமதி வந்து பார்த்த போது பெரியாத்தாவும் கமலம்மாவும் அவரவர் படுக்கையில் தூங்குவது போல் படுத்துக் கிடந்தார்கள்.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மேலே வந்தாள். அங்கே கணவன் இறுகிய முகத்தோடு அமர்ந்திருந்தான்.

அவள் கட்டிலில் அமரவும், 'உங்கம்மாகிட்டே சொல்லியிருக்கே...?' என்றான் இறுக்கமான குரலில்.

'இல்லைங்க... நான் சொல்லலைங்க...' என்றாள், கெஞ்சுவது போல்.

'இதுக்குதான்டி. இது எதுவும் வேண்டாம்னு சொன்னேன். ஆலோசனை தர்ரேன் தர்ரேன்னு என் சுயமரியாதையைக் குழி தோண்டிப் புதைச்சுட்டே...' என்று கத்தினான்.

'நா சொல்லலே... சொல்லலே... சொல்லலே!' என்று அவளும் அவனை நேருக்கு நேராகப் பார்த்தபடி கத்தினாள்.

அவன் அவளை முறைத்தான். 'எங்கப்பன் சொன்னது சரியாப் போச்சுடி...' என்றான் மீண்டும்.

அவள் விரைப்பானாள்.

'உங்கப்பா என்ன சொன்னாரு?' என்றாள் உள்ளடங்கிய குரலில்.

'ம்... சொன்னாரு... கரெக்டாதான் சொன்னாரு. பொம்பளைங்களை நம்பாதடா. அவளுக நம்மளுக்கு வேணும். ஆனா... நம்பாதே... நிறைய விஷயங்களை மறைச்சுடுவாளுக டான்னு சொன்னாரு.'

ஓ...!' என்றாள் திகைத்துப் போய், அப்படியே அமைதியாகி விட்டாள். அதற்குப் பிறகு வாய் திறந்து எதுவும் பேசவில்லை.



மகனை எடுத்துக் கொண்டு கீழே போய்விட்டாள். முகம் இறுகி விட்டது. மகனுக்கு அமைதியாக உணவூட்டினாள். மேலே கொண்டு வந்து தூளியில் படுக்க வைத்துத் தூங்கச் செய்தாள்.

கந்தகுரு கூட அவளுடைய அமைதியைப் பார்த்து அரண்டு போனான். வெளியே காலார நடந்து வருகிறேன் என்று போய்விட்டான்.

இதற்கிடையிலே சண்டை போடுகிற சத்தம் கேட்கிறதே என்று மேலே வந்த பெரியாத்தா தன் தந்தை சொன்னதாக அவன் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு விட்டார் என்பதை அவளும் அறியவில்லை. அவனும் அறியவில்லை.

சற்று நேரம் கழித்து அவன் திரும்ப வந்தான். அவள் சோஃபாவில் அமர்ந்திருந்தாள். இலக்கில்லாமல் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

இதுநாள்வரை கணவன் பெண்களைக் கீழ்மையாய்ப் பேசும் போதெல்லாம், பெண்கள் ஆண்களுக்குக் கீழே என்று நினைக்கிறான் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்ற நினைப்பில் இருந்திருக்கிறான் என்பதை அவளால் ஜீரணிக்கமுடியவில்லை.

'என் பிறவியும், வாழ்வும் இப்படி வீணாகிப் போனதே!' என்று கண்ணீர் விட்டபடி அமர்ந்திருந்த நேரத்தில், அவன் திரும்பி வந்து, 'வசு...' என்று அவளருகில் அமர்ந்தான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அமைதியாகச் சொன்னாள்.

'நமக்குள் எல்லாம் முடிந்தது. மிஸ்டர் கந்தகுரு...' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்தான். பிறகு, 'என்னடி மிரட்டறியா? எல்லாத்துலயும் இறக்கிவிட்டதுமில்லாம... எப்படி

உங்க அம்மாவுக்குத் தெரிஞ்சுது. முதல்ல அதைச் சொல்லு...' என்றான்.

'நான் சொல்லலேன்னு சொன்னா நீங்க நம்பப் போறதில்லே. நீங்களும், எங்கப்பாவும் பேசிட்டிருந்ததைக் கேட்டிருக்காங்கன்னு சொன்னா நம்பவா போறீங்க? இனிமே நீங்க நம்பினா என்ன? நம்பாட்டி என்ன?'

'ஏன்... என்ன பண்ணப் போறே? டைவர்ஸாக்கும்!'

'நீங்க விருப்பப்பட்டா டைவர்ஸ் தர்றேன். இல்லே... ஊருக்காக ஒரே இடத்துல சேர்ந்து இருக்கறதுன்னாலும் இருக்கலாம். ஐ டோன்ட் மைண்ட்...' என்றாள், ஏதோ வியாபாரம் பேசுவது போல்.

'என் மகனை என்ன பண்ணுவே?' என்றான்.

'அதுக்காகா... அதுக்காகத்தான் சேர்ந்து இருக்கறது. பெரிய வீடுன்னு பேரு வேற. உங்க கௌரவத்துக்காகத்தான்...' என்றாள்.

அவன் அவளை வெகு கோபமாகப் பார்த்தான். சோஃபாவை எட்டி உதைத்து விட்டு உள்ளே கட்டிலில் போய்ப் படுத்துவிட்டான். சற்று நேரத்தில் உறங்கி விட்டான்.

மறுநாள் காலை அவன் எழுந்தபோது அவள் வழக்கம் போல் சமையலுக்குப் போயிருந்தாள். எதையும் காட்டிக் கொள்ளாமல் எல்லாப் பெண்களும் நடந்து கொள்வதைப் பார்த்து, அவனும் எதையும் காட்டிக் கொள்ளாமல் ஃபாக்டரிக்குப் புறப்பட்டான்.

அவன் புறப்படுகிற நேரம் மேல வந்தவள், 'உடனே கிளம்பினா நல்லா இருக்காது. அதனால அடுத்த வாரம் அம்மா வீட்டுக்குப் பேறேன். அஞ்சாறு மாசம் இருந்துட்டு வரேன்!' என்றாள்.



'வசுமதி..' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும், அவள் கையை உயர்த்தி நிறுத்துமாறு சைகை காட்டினாள்.

அவனுக்கும் கோபம் வந்தது. 'சரி... போ!' என்றான். புறப்பட்டுப் போய்விட்டான்.

மற்றவர்கள் முன்னிலையில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், தனிமையில் தேவையான பேச்சு மட்டும் பேசினாள். அவனுடைய தேவைகளுக்கு எதுவும் குறை வைக்கவில்லை. ஆனால், அவன் நெருங்க முடியாத கம்பீரம் தெரிந்தது.

அவனும் நெருங்கவில்லை. மகனோடு மட்டும் சற்று நேரம் விளையாடுவான். மற்ற நேரங்களில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தினமும் காலையில் நேரத்தில் கிளம்பி இரவும் நேரம் கழித்து வந்தான். களைத்து உறங்கினான்.

அவள் தன் வேதனை மறக்க வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாள். வீட்டை யெல்லாம் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். தங்கள் அறையின் லாஃப்டில் ஒரு சூட்கேஸை எடுத்துத் தட்டினாள். பட்க்கென்று திறந்து கொண்டது.

உள்ளே...

ஒரு கத்தையாகக் கவிதைகள் இருந்தன. இரண்டு மூன்று இளைஞர்களின் ஃபோட்டோக்கள் இருந்தன. ஒரு பெண்ணின் பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ இருந்தது.

அப்போது அவளது கைகளில் ஒரு கனமான கவர் தட்டுப்பட்டது. அவனது பெயருக்கு மேல்விலாசமிட்டு ஒட்டியிருந்தது. திறக்கலாமா.. என்று நினைத்தாள். பிறகு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

தனது திருமணத்துக்கு முந்தைய வாழ்க்கையைப் பற்றித் தன் கணவன் இன்னும் மனம் திறந்து எதுவும் சொல்லவில்லை என்பது நினைவுக்கு வந்தது.

அவளும் சிந்தனையிலாழ்ந்தாள். அந்தக் காதல் கவிதைகள் அவள் உள்ளத்தில் வந்து வந்து போயின. கவிதை பிடிக்காது என்றான். பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான். ஏதோ ஒரு பெண்ணின் படம் வேறு வைத்திருக்கிறான்.

அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அடுத்த நாள் சனிக்கிழமை.

'நான் அம்மா வீட்டுக்குப் புறப்படுகிறேன். கொண்டுபோய் விடுங்க...' என்றாள்.

'கார் அனுப்பறேன். நீயே போய்க்கோ!' என்றான்.

அவள், 'ஊருக்காகன்னு போட்ட ஒப்பந்தம் மறந்து போச்சா?' என்றாள்.

அவன் எதுவும் பேசவில்லை. ஆனால் புறப்பட்டான்.

மீண்டும் முன்பு போலவே அளவாய்ப் பேசி, பயணம் முழுதும் அமைதி காத்து, அவளைக் கொண்டு போய் விட்டான். ஆனால் அங்கே போனதும் எதுவுமே நடக்காதது போல் சந்திரவதனியிடம் கூட இயல்பாய் இருந்தான்.

புறப்படும்போது மட்டும் மாமனாரிடம், 'என்ன மாமா, அவளையும் விட்டுட்டுப் பையனையும் விட்டுட்டு எப்படி இருக்கப் போறேனோ தெரியலை...' என்று அவன் நடித்த நடிப்புக்கு அசந்து போனாள்.

'அதுக்கென்ன, மாப்பிளே. எப்ப நினைச்சாலும் வந்துற வேண்டியதுதான்!' என்றார் அவர்.

'ம்... வந்துற வேண்டியதுதான்!' என்று சிரித்து விட்டுப் புறப்பட்டான்.



# 13

இரவு நேரங்களில் தாமதமாக வந்த மகனைப் பெரியாத்தா தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். ஏதோ வேதனை அவனைத் தின்று கொண்டிருப்பதை உணர்ந்தார்.

வசுமதி ஊருக்குப் போய் இரண்டு மாதமாகியிருந்தது. தினமும் ஃபோனில் பேசினாள். பள்ளியைப் பற்றி, ஃபாக்டரி கணக்கு வழக்குகளைப் பற்றிப் பேசியாக வேண்டியிருந்தது. மற்றப்படி நல்லாயிருக்கீங்களா - நல்லாயிருக்கியா என்று ஃபார்மலாகக் கேட்டுக் கொள்வார்கள்.

இடையில் பத்து நாட்களுக்கொரு முறை போய்விட்டு வந்தான். ஆனால், இரவில் தங்கவில்லை.

வீட்டுக்கு வந்தால் தனிமை அவனைக் கொன்றது. மகனையும், மனைவியையும் நினைத்து ஏக்கம் பொங்கியது.

அன்றைக்கு அவன் மாடியில் சோஃபாவில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். மனது அதில் லயிக்கவில்லை. முகத்தில் ஏக்கம் படிய அமர்ந்திருந்த அவனை மேலே வந்து பெரியாத்தா சற்று நேரம் அவனறியாமல் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். மனம் இளகிப் போனது.

பிறகு, 'கந்தசாமி... டி.வி. பாக்கறியாக்கும்...' என்றபடி அருகில் அமர்ந்தார்.

அவன் அவரை வெறுமையாகப் பார்த்தான்.

'ம்...' என்று புன்னகைத்தான்.

'கந்தசாமி.. வசுமதி.. சும்மாதானே போயிருக்கா? உனக்கும், அவளுக்கும் சண்டை ஒண்ணும் இல்லையே?' என்றார்.

அவன் அவரை நேராகப் பார்க்கவில்லை. 'இல்லியேம்மா... அப்படி ஒண்ணும் இல்லியே..' என்றான்.

அவர் ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்: 'கந்தசாமி, நாங்க பொம்பளைங்க... எங்களுக்கு உலகம் தெரியாது. எங்க உலகம் புருஷன்... மகன்.. இவங்களைச் சுத்தித்தான்...' என்றார்.

அவன் டி.வி.யை ஆஃப் செய்து விட்டு அவரைத் திகைத்துப் போய்ப் பார்த்தான்.

'நீங்களே எங்களை நம்பலைன்னா, நாங்க எங்க போறது?'

தான் பேசியதைக் கேட்டிருப்பாரோ என்று சந்தேகத்துடன் பார்த்தான். அவர் தொடர்ந்து, 'மாமனார்கிட்டே நகையை அடகு வச்சுப் பணம் வாங்கியிருக்கே. எங்கிட்டக் கேட்டிருக்கலாம். இது உன்ற சொத்து... உன்ற வூடுன்னு நீ நெனைக்கோணுமின்னுதான் நீ மேஜரானவுடனே எல்லாத்தையும் உன்ற பேருக்கு எழுதினேன். கீதாப் புள்ளைக்குக் கூட நீ பாத்து என்ன குடுக்கறியோ அதுதான்னு சொல்லிப் போட்டேன்.. அப்படியிருந்தும்... என்று நிறுத்தினார்.

அவன் வேதனையுடன் அவரைப் பார்த்தான். பிறகு, 'சாரிம்மா.. நீ இப்படி வேதனைப் படுவேன்னு நெனைக்கலே... சுயமாப் பண்ணணும்னு...'

'சேரியெடு. அதைய விடு. போனாப் போகுது. இனிமேலாவது எங்களை நம்பு. எனக்கு அவரு இருக்கற வரைக்கும் உங்கப்பன்தான் உலகம். நீ பொறந்ததுக்கு அப்புறம் நீதான உலகம்னு கெடக்கறேன் தம்பி. அந்த வசுமதிப் புள்ளையும் அப்படித்தான்!' என்றார்.

'அம்மா... வசுமதி ஏதாவது சொன்னாளா?' என்றான்.

'இல்லப்பா. அந்தப் புள்ள அப்படியெல்லாம் எதுவும் சொல்றவ இல்ல. உங்களுக்குள்ளே என்னமோன்னு எம் மனசுக்குப் படுது, சாமி...'



அவர் சட்டென்று அவன் தலையைத் தடவிக் கொடுத்தார். அவரே எதிர்பாராத விதமாக அவன் அவர் மடியில் படுத்துக் கொண்டான்.

'அம்மா... என்னை எதுவும் கேக்காதே. நா ஏதோ குழப்பத்துல இருக்கேன். நானே விடை கண்டுபிடிக்கறேன். அதுவரைக்கும் என்னை விட்டுரு!' என்றான் தழுதழுத்தபடி.

அவர் அவன் நெற்றியில் முத்தமிட்டார். 'எஞ்சாமி...' என்று தட்டிக் கொடுத்தார்.

'சேரியப்பா.. அது எதுவோ கிடக்கட்டும் நீ நிம்மதியாயிரு. யாரு எது சொல்லியிருந்தாலும் சரி. நீ உன்ற அனுபவத்தை வச்சு ஒரு முடிவுக்கு வா. உன்ற பொண்டாட்டி எல்லாத்தையும் உனக்குன்னு குடுத்தவ. அவகிட்ட போய் 'நான் பெரிசு'ன்னு நிக்காதே. அந்தச் சின்னப் பய சிரிக்கறப்ப உன்னை மாதிரியே இருக்கு. மூணு வயசு வரைக்கும் நாந்தான் உன்னை வளர்த்தேன். அப்படியே அப்பப் பார்த்த மாதிரி இருக்கு. அப்படி ஒரு பரிசு உனக்கு அவ குடுத்திருக்கா. அவகிட்டே எதுக்கு வீம்பு...?' என்றார்.

அவன் மௌனமாக இருந்தான். பிறகு, 'அம்மா.. அவதான் ஏதோ கோபத்துல இருக்கா!' என்றான்.

'வசுமதிக்குக் கோபம் வரோணுமின்னா நீ ஏதோ பெரிய தப்புப் பண்ணியிருக்கேன்னு அர்த்தம்...'

'தெரியல.. எனக்கே.. தெரியல..'

'போனாப் போகுது போ.. நாளைக்கு நாம எல்லாரும் போய் அவளைப் பார்த்துப் போட்டு ரெண்டு நாள் இருந்துட்டு வரலாம். என்னோ? நம்பர் போட்டுக் குடு... என்றார். ஃபோனில் போட்டுக் கொடுத்தான்.

வசுமதி லைனில் வந்தவுடன், 'அத்தே..' என்று ஆசையாய் அழைப்பது கேட்டது.

'என்னடி மருமகளே! நீபாட்டுக்கு அங்க போய் உக்காந்துகிட்டே. வீடே வெறிச்சுன்னு கெடக்கு. மகன் முகத்துல ஈயாட மாட்டேங்குது. நாங்க எல்லாம் நாளைக்குக் காலையிலே நேரத்துல புறப்பட்டு வாரோம். தினம் வீட்டுக்கு லேட்டா... லேட்டா வரான். ஏண்டான்னு கேட்டா இங்க என்ன இருக்குங்கறான். எங்களையெல்லாம் மனுசங்களாத் தெரியலே... இந்தா.. பேசு!' என்று கொடுத்தார்.

அந்தப்புறம் போனார்.

அவன் தன்னையுமறியாமல் தழுதழுத்த குரலில், 'வசு...' என்றான். அவளும் சற்று நெகிழ்ந்து போனாள்.

'சொல்லுங்க...' என்றாள் கரகரத்த குரலில்.

'வசு... இன்னும் கோபம் தீரலையா?'

'கோபமா இருந்தா எப்பவோ தீந்திருக்கும்... இது காயம்!' என்றாள்.

'ஓ..!' என்று திகைத்துப் போனான்.

பிறகு தேற்றிக் கொண்டு, 'சரி... நான் நாளைக்கு வரலாமா?' என்றான்.

'தாராளமா வர்லாம். மத்தவங்க முன்னாலே எப்பவும் போல இருக்கலாம். ஆனா...' என்று நிறுத்தி விட்டாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. 'ஆகட்டும்... வசு...' என்றான். ஃபோனை வைத்தான்.

அந்த நேரம் பாலை எடுத்துக் கொண்டு அம்மா மேலே வந்தார். அவன் மௌனமாகப் பாலை அருந்தினான். பிறகு பால் டம்ளர் எடுத்துக் கொண்டு கிளம்பியவர் அவனைத் தோளில் சாய்த்துக் கொண்டார். நின்று சற்று நேரம் அவன் முகம் பார்த்தார்.

'சாமி... எதையோ மனசுல வச்சுக்கிட்டு ரொம்பக் கஷ்டப் படறயாட்டருக்கு, சாமி...' என்றார்.





கந்தகுரு அந்த நிமிடம் தன் கட்டுப்பாட்டையெல்லாம் இழந்தான். தன் வளர்ப்புத் தாயின் வயிற்றில் முகம் பதித்துக் கேவிக் கேவி அழுதான்.

பெரியாத்தா பெரிதும் திகைத்துப் போனார். 'அழுகாதிடா, சாமி. அழுகாதே.. நீ ஆம்பள.. தைரியமாயிரு. வாழ்க்கையைச் சந்திக்கோணுமடா... என்னையப் பாரு... எத்தனை முழுங் கிட்டேன். ஆனா, கடவுள் எனக்கு உன்னையைக் குடுத்தாரு. சொந்தத் தங்கச்சிக்கு மேலே உன்ற அம்மாளைக் குடுத்தாரு. என்ற குறையவே நிறையா மாத்திக்கலியா...?' என்றார்.

அவன் மெது மெதுவாக அழுகையை நிறுத்துகிற வரைக்கும் அவன் தலையைத் தடவிக் கொடுத்தார். அவன் நிதானத்துக்கு வந்தான்.

'சில புள்ளைகளுக்குப் புரிய வக்க முடியலன்னு வச்சுக்க. நாலு கன்னத்துல குடுத்தாப் புரியும்!' எனவும், அவன் சட்டென்று சிரித்தான்.

'அன்னைக்கு எங்க மாமனார் குடுத்தாரே. அப்படியா?' என்றான்.

'ஆமாடா. எளவு சந்திரா அதிர்ந்து போய் நின்னா பாரு...' என்று சிரித்தார்.

'உன்ற மருமக அந்த மாதிரி ஆளு இல்ல!' என்றான்.

'அது நிசந்தான்!' என்றார் அவரும்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். குமாரைப் பற்றி, கீதாவைப் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருந்தார்.

'நீ இப்படியே தூங்கு. சாமி...' என்று தன் மடியில் படுக்க வைத்துத் தட்டிக் கொடுத்தார். அந்த அரவணைப்பில் பல நாட்களுக்குப் பின் அவன் நிம்மதியாக உறங்கினான்.

வெகு நேரம் கழித்து அக்காவைத் தேடிக் கொண்டு வந்த கமலம்மா அதைப் பார்த்துக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சிரித்தார்.

'ஷ்..' என்று பெரியாத்தா வெகு சீரியஸாக எச்சரித்தார்.

மாமனார் வீட்டிலும் பெரியாத்தா கலாட்டா பெரிய கலாட்டாவாக இருந்தது.

'ஏனம்மணி, உன்ற பண்ணாடியப் போயி கவனி... போ...' என்று அவன் பக்கம் அவளை அமரச் செய்தார். வேண்டு மென்றே சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அவனும், அவளும் அவருக்காகச் சற்று நடித்துக் கொண்டார்கள்.

செந்தில் அவனை விட்டு நகரவே இல்லை. வசுமதிக்கும் கூடத் தன் கணவன் முகமெல்லாம் மகிழ்ச்சியாக அவனைக் கொஞ்சுகிற காட்சி நெகிழ்ச்சியாய் இருந்தது. இரவு தனி யறைக்கு அவள் தயங்கியபடி வந்தபோது அவன் விழித் திருப்பான், ஏதாவது பேசுவான் என்று அச்சத்தோடு வந்தாள்.

ஆனால், மகனை மார்பின் மேல் படுக்க வைத்தபடி ஆழ்ந்து உறங்கி விட்டிருந்தான். அந்தக் காட்சியைச் சற்று நேரம் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு மகனைத் தொட்டிலில் படுக்க வைக்கலாம் என்று எடுத்தபோது, அவன் விழித்துக் கொண்டு வீலென்று அழுதான். கந்தகுருவும் விழித்தான்.

'விட்ரு, வசு. இப்படியே தூங்கட்டும்!' என்று தட்டிக் கொடுத்தான். தன்னருகில் படுக்க வைத்துக் கொண்டான். அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு உறங்குகிற மகனைப் பார்த்து அவளுக்குக் கோபம் வந்தது. தூங்காமல் உட்கார்ந் திருந்தாள்.

'என்ன, வசு...?' என்றான்.

'இத்தனை நாள் நேரங்காலம் பாக்காம பாத்துக்கறேன். அப்பாவைக் கண்டவுடன் எல்லாம் மறந்துட்டான்!' என்று பொரிந்தாள் வசுமதி.



கந்தகுரு 'பக்'கென்று சிரித்து விட்டான். மீண்டும் தூக்கத்தி லேயே மகன் அவன் மார்பிலேறிப் படுத்துக் கொள்வதையும், அவன் பெருமையுடன் தட்டிக் கொடுப்பதையும் பார்த்து அவளுக்குள் ஆற்றாமை பொங்கியது. திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

'வசு.. ஹேய்.. என்ன இது.. குழந்தை. அவன்கிட்ட போய்...' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. அவன் அவளைத் தொட முயற்சிக்கவில்லை. 'வசு.. நான் ஒண்ணு சொல்லட்டா...

ம்...!

'நீயும் நானும் ஒண்ணும் காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கலை. ரெண்டு பேருக்கும் ரெண்டு பேரைப் பத்தியும் முழுமையாகத் தெரியாது. அப்படியிருக்கிறப்ப... போன எதையும் கிளற வேண்டாம்.. சரியா?'

அவள் அவன் பக்கம் திரும்பிப் படுத்தாள்.

'அதெப்படி... கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனா நம்பிக்கையே இல்லேன்னா எப்படி?'

'உன் மேலே நம்பிக்கை இல்லைன்னு நான் சொல்லலியே?'

'பொய் சொல்லாதீங்க. எங்கப்பா சொன்னது சரிதான்னு சொல்லலே...?'

'ஆமா. அந்த நேரத்துல... நீ உங்கம்மாகிட்ட சொல்லி யிருப்பியோன்னு நெனச்சுட்டேன். ஐ ஃபீல் சாரி ஃபார் தட். ஐ அபாலஜைஸ். ஓகே!' என்றான்.

அவள் அதிர்ந்து போனாள். அவன் தன் உயரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்த மாதிரி உணர்ந்தாள்.

'பரவால்லே... பரவால்லே.. ஆனா, என்னைச் சொன்னா என்ன? பெண்கள் மேலே நம்பிக்கையில்லேன்னு சொன்னா என்ன? நீங்க உங்கப்பாவோட கருத்தைச் சுமக்கறீங்க.. பெரிய மூட்டையா...' என்றாள்.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். 'ஆமா.. வசுமதி.. அது எனக்கே தெரியுது. ஆனா... அப்பாவுக்கு ஸ்ட்ரோக் வர்ற அளவுக்கு ஏதோ நடந்திருக்கு. அதையும் என்னாலே ஒதுக்கிற முடியலை... என்ன செய்றதுன்னே எனக்குப் புரியலே...' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான்.

அவன் இவ்வளவு வெளிப்படையாகப் பேசியது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிரிவு அவனை யோசிக்க வைத்திருக்கும் என்று நினைத்தாள்.

'நீங்களே சொல்லுங்க. அத்தையாகட்டும். கமலாத்தையாகட்டும். கீதாவாகட்டும். எல்லோரும் உங்களைச் சுத்தித்தான் தங்களோட வாழ்க்கைன்னு வாழ்ந்திருக்காங்க. அதுவும் ஒவ்வொருத்தரும் சொல்றதைக் கேட்டா ரெண்டு அத்தைகளும் விட்டுக் கொடுக்கறதுலதான் போட்டி போட்டிருக்காங்க. அவங்க எப்படி உங்க அப்பாவுக்கு நம்பிக்கைக் குறைவா நடந்திருக்க முடியும்?' என்றாள்.

'நீ கேக்கறது கரெக்ட்தான். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் காலம்தான் பதில் சொல்லணும்!' என்றான். சற்று நேரம் கனமான அமைதி நிலவியது.

மார்பில் படுத்திருந்த மகனை எடுத்துத் தன் அருகில் படுக்க வைத்தான். அவன் மீண்டும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவன் திரும்பி அவளை நோக்கிப் படுத்தான்.

'சரி.. வசு... இப்படி வச்சுக்கலாம். உன்னைப் பொறுத்த வரைக்கும் எனக்கு எந்த அவநம்பிக்கையுமில்லை. சரியா...?' என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

'இல்லைங்க. இப்பக்கூட அவநம்பிக்கையில்லைன்னு தான் சொல்றீங்களே தவிர... முழு நம்பிக்கை இருக்குன்னு சொல்லலே...' என்றாள்.



'போச்சுரா.. டீச்சரம்மா... எப்படிப் பேசினாலும் மடக்கறே!' என்று சிரித்தான்.

அவள் இப்போது ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னாள். 'சரி.. இப்படி வேணா வச்சுக்கலாம். இப்ப மாதிரி நாம எல்லாத்தையும் வெளிப்படையாப் பேசிக்கலாம். லெட் அஸ் பீ ஃப்ரெண்ட்ஸ்!' என்றாள்.

கந்தகுரு கலகலவென்று சிரித்தான். 'ஐயோ, வசு... என்றான்.

'ஆமா.. பின்னே? பிரியறதில்லேன்னு முடிவு செய்தாச்சு. ஒருத்தருக்கொருத்தர் சுமுகமாவாவது இருப்போம்...' என்றாள்.

அவன் சற்று நேரம் வரை ஒன்றும் பேசவில்லை. பிறகு மெதுவாக, 'வசு... ' என்றான்.

'ம்...'

'இல்லே.. அந்த மாதிரி நெனப்பு வரும்போது...'

'எந்த மாதிரி...?' என்றவள் ஒரு கணம் நிறுத்தி, முகம் சிவந்தாள். சட்டென்று அந்தப் பக்கம் திரும்பிப் படுத்தாள்.

'இல்ல.. குரு, ஒண்ணு முழுமையா ஒப்புக் கொடுத்தல்... இல்லே... முழுமையா விலகியிருக்கிறது... இதுல ஒண்ணுதான் சாத்தியம்.

'இத பார் வசு, உனக்கும் எனக்கும் ஒரு ஃபிஸிகல் அட்ராக்ஷன் இருக்கக் கூடாதா?'

'டோன்ட் பி ஃஸில்லி, குரு!' என்றாள்.

'ஏய்.. நான் உன் ஹஸ்பண்ட்.'

'நீங்கதான் அதை ஜஸ்டிஃபை பண்ணலயே...' என்றாள்.

'சே.. என்னடா இவ.. புரிஞ்சுக்க மாட்டேங்கறா!' என்று சலித்துக் கொண்டான். அதற்குள் மகன் மீண்டும் அவன் மார்பில் ஏறிப் படுக்கவும், 'டே.. டேய்.. நீ வேற ஏண்டா.. சரி.. இப்போதைக்கு நீதான போல...' என்று வெடிச்சிரிப்புச் சிரித்துக் கொண்டான்.

அந்தப் பக்கம் அவள் விக்கித்துப் போய்ப் படுத்திருந்தாள்.

'ஆனா, ஒண்ணு வசு, மாமியாரும், மருமகளும் ஒருத்தருக்கொருத்தர் நல்லா சப்போர்ட் பண்றீங்க.. விட்டுக் கொடுக்காம பேசறீங்க...' என்றான்.

'அத்தை சொன்னாங்க.'

'சொல்லிட்டாங்களா?'

'அழுதீங்களாம்!'

'ஆமா... பின்னே... வீட்டுக்கு வந்தா வெறிச்சுன்னு இருக்கு. இவன் சிரிக்கிற மாதிரி. அன்னைக்கு ஒரு நாள் நீ..' என்று அந்தரங்கமாக ஏதோ சொன்ன போது அவள் கோபமானாள்.

'அதெல்லாம் பேசாதீங்க...' என்றாள்.

'நீதானே வெளிப்படையாப் பேசிக்கலாம்னே...'

'நா... இதைச் சொல்லலே...'

'ஏன்... உனக்குக் கட்டுப்பாடு இருந்தா.. சாதாரணமாக எடுத்துக்கோ..' என்றான்.

'மிஸ்டர் கந்தகுரு. ஐ ஆஃபர்ட் ஒன்லி ஃப்ரெண்ட்ஷிப்...' என்றாள்.

தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்திருக்கிற அவளை ஆழமாகப் பார்த்தான். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

'சரி.. விடு. அதுக்கு ஏன் கோப''படறே...?' என்றான். அலட்டிக் கொள்ளாமல் 'குட்நைட்' என்று உறங்கிப் போனான்.

அவன் உறங்கியபின்பு அவன் பக்கம் திரும்பிப்படுத்த வசுமதி அவன் முகம் பார்த்துப் படுத்திருந்தாள். தன்னையும் மீறித் தன் மனம் அவன் தொடுதலுக்கு ஏங்கியதை உணர்ந்த போது திடுக்கிட்டாள்.



இதுவரை தன் மனதில் தோன்றிய அச்சம் உள்ளத்து எதிர்பார்ப்பின் இன்னொரு வடிவம் என்று அவள் படித்திருந்த சைக்காலஜி அவளுக்குச் சொன்னபோது அதிர்ந்து போனாள்.

இன்னமும் ஒரு வகையில் தன் கணவன் நேர்மையானவன்தான் என்று உள்மனது சொல்லியது. தனது குழப்பங்களையும் கூட அவன் நேர்மையாக ஒத்துக் கொள்கிறான். ஆசைகளையும் கூட.

தன்னையும் மீறித் தான் அவன் மார்பில் ஒண்டிக் கொள்கிறோம் என்று உணர்ந்து விக்கித்த கணத்தில் அவன் கை அவளை அணைத்தது. லேசாக அவள் நெற்றியில் முத்தமிட்டான். உறக்கக் கலக்கத்திலேயே.

'வேண்டாம், வசு.. என்றைக்கு எந்தப் போராட்டமும் இல்லாமல் உன்னால் ஏற்றுக் கொள்ள முடியுதோ, அன்னைக்கு... சரியா?' என்றான். முதுகில் தட்டிக் கொடுத்து உறங்க வைத்தான். ஆனால், அணைத்துக் கொண்டு உறங்கினான்.

## 14

**க**ணவனின் ஃபோன் என்றவுடன் வசுமதி ஓடி வந்தாள்.

'என்னங்க!' என்றாள்.

'வசு.. பெரிய ஆர்டர் ஒண்ணு கெடச்சிருக்கு... யூ வோன்ட் பிலீவ் இட்!' என்று அவன் தொகையைச் சொன்னபோது அவள் மகிழ்ந்து போனாள்.

'மாமாதான்... சஜ்ஜஸ்ட் செய்தாராம். பார்ட்டிகிட்ட பேசக் கோயமுத்தூர் வரேன். அப்புறம் ரெண்டு நாள் அங்கேதான்...' என்றான்.

'சரி... வாங்க...' என்றாள். அப்பாவிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டாள். அப்பாவிடம் இன்னொரு ஆலோசனையும் சொன்னாள். 'பாக்கறேம்மா...' என்றார்.

பிற்பகலில் அவன் பேச்சு வார்த்தை முடிந்து ஆர்டர் வாங்கிய பின் வந்து சேர்ந்தான். தங்கள் அறைக்கு வந்தவுடன், 'வசு...' என்று அணைத்து முத்த மாரி பொழிந்தான்.

'ப்ளீஸ்... விடுங்க...' என்று அவள் விலகினாள். விடுவித்தான்.

'ஓ.கே... ஓ.கே... அவ்வளவுதான்!' என்று சிரித்தான்.

'இன்னைக்கு உனக்கும், மகனுக்கும் ட்ரீட்...' என்றான்.

மாலையில் அன்னபூர்ணா ஹோட்டலுக்கு அழைத்துப் போனான். ஏ.ஸி. அறையில் அமர்ந்தபடி அவளிடம் ஆஃபீஸ் கலாட்டாக்களை யெல்லாம் பேசிச் சிரித்தான்.

அவளும் வந்தனா செய்கிற கலாட்டாவையெல்லாம் சொல்லிச் சிரித்தாள். அப்போதுதான் அந்தப் பெண்ணைப் பார்த்தாள். அவள் பார்வை நிலை குத்தியது.

அந்தப் பெண்...

அன்றைக்கு ஒரு பழைய சூட்கேஸில் ஃபோட்டோ பார்த்தாளே.. அந்தப் பெண்.

தன் கணவன் கத்தையாய்க் கவிதை எழுதிக் காதலித்த அந்தப் பெண்...

அவள் பார்வை பார்த்து, அவன் சிரிப்பதை நிறுத்தி விட்டு..

'என்ன வசு?'.. என்றான்.

'அந்தப் பொண்ணு...' என்றாள்.

'எந்தப் பொண்ணு...?'

'அதான் நீங்க வரிஞ்சு வரிஞ்சு கவிதை எழுதிக் காதலிச்சீங்களே.... அந்தப் பொண்ணு...'



'என்னது...?' என்று அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். திரும்பிப் பார்த்தான்.

'அஞ்சலி...' என்று மெதுவாகவும், ஆச்சரியம், திகைப்பு எல்லாம் கலந்த மாதிரியும் பார்த்தபடி சொல்லிக் கொண்டான்.

அதற்குள் அவள் ஒரு ஆண் மகனுடன் பேசியபடியே எழுந்து போனாள். அவனைப் பார்க்கவில்லை.

'அவளை...' என்று பல்லைக் கடித்துக் கொண்ட கந்தகுரு ஒரு முடிவுக்கு வந்தவனாக எழுந்தான்.

'வசு.. நீ சாப்பிட்டுட்டு ஒரு ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போ... நான் கொஞ்ச நேரத்தில் வந்தர்றேன்!' என்று எழுந்து அவசரமாகப் போனான்.

வசுமதி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள். மகனுக்கு மட்டும் தோசையை ஊட்டி விட்டு, பில்லுக்குப் பணம் கொடுத்து வெளியே வந்தாள்.

தனியாக வந்த அவளைப் பார்த்து வீட்டினர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஒரு மாதிரிப் பதில் சொல்லி விட்டு, வந்தனா கையில் செந்திலைக் கொடுத்துப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, அறைக்குப் போனாள்.

கட்டிலின் மேல் அமர்ந்து முழங்காலுக்குள் முகம் புதைத்துக் கொண்டாள். கேவிக் கேவி அழுதாள்.

சுத்தமாகத் தனது கணவனின் கையெழுத்திலேயே எழுதப்பட்ட கவிதைகள்...

இடையிடையே 'அஞ்சலி...' என்று கூட வந்தது இப்போது நினைவுக்கு வந்தது. வெடித்து அழுதாள்.

அவளைப் பார்த்தவுடன் தன்னையும் மகனையும் விட்டு விட்டு ஓடுகிறான். அவள் இன்னொரு மனது கேட்டது. 'நீதான் பேருக்குச் சேர்ந்திருப்பது என்று சொல்லிட்டியே.. அப்புறம், அவன் யாரைத் தேடிப் போனால் என்ன?' என்று.

ஒன்றும் புரியாமல் அழுது கொண்டிருந்தாள்.

இருட்டாகி விட்டது கூடத் தெரியாமல் அமர்ந்திருந்தாள்.

கந்தகுரு உள்ளே நுழைந்து விளக்கு ஸ்விட்ச்சைப் போட்டான். கண்களில் கண்ணீருடன் தன்னை நிமிர்ந்து பார்க்கிற மனைவியைப் பார்த்தவுடன் திகைத்துப் போனான்.

'ஏய்... வசு...' என்று அவளை அணைத்துக் கொண்டு சிரித்தான்.

அவள் அழுகையுடன்... திகைப்புமாக அவனைப் பார்த்தாள்.

- - - - - - -

அவள் சிவந்த முகத்துடன் அமர்ந்திருக்க, அவன் இடிஇடியென்று சிரித்துக் கொண்டிருந்தான்.

'அஞ்சலியை நான் காதலித்தேனாம்... சூப்பர் ஜோக், வசு... அது... ஐயோ... வசு... அது....' என்று மீண்டும் சிரித்தான்.

நடந்தது முழுக்கச் சொல்லி முடித்திருந்ததால் அவள் சிவந்த முகத்துடன் வெட்கிப் போய் அமர்ந்திருந்தாள்.

கந்தகுரு, ரமேஷ், குமார், சசிகுமார் இவர்கள்தான் நெருங்கிய நண்பர்கள். கல்லூரியில் ஒன்றாகச் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

அஞ்சலியும் அவர்கள் கிளாஸ் மேட்தான். நன்றாகப் படிப்பாள். வாயடிப்பாள். கவிதை எழுதுவாள். ரமேஷும் நன்றாகக் கவிதை எழுதுவான். கவிதைகளைப் பற்றிப் பேசிப் பேசி இருவருக்கும் ஒரு நட்பு மலர்ந்து விட்டது. பின் காதலானது.

கந்தகுருவுக்கும் கவிதைகள் என்றால் ரொம்பப் பிடிக்குமாம். ரமேஷ் தான் எழுதுகிற கவிதைகளைப் படித்துக் காட்டுவானாம். கவிதைகள் நன்றாக இருக்கின்றன என்பதால், ஒரு ஆர்வத்துக்காக வாங்கி எழுதி வைத்துக் கொள்வானாம்.



பின்னால் ஒரு தொகுப்பாக வெளியிடலாம் என்று பேசிக் கொண்டார்கள்.

ரமேஷும், அஞ்சலியும் வரிந்து வரிந்து எழுதிக் கொண்டார்கள். மூன்றாவது வருடத்தில் கடைசியில் இருந்தார்கள்.

திடீரென்று ஒரு வாரம் அஞ்சலி ஊருக்குப் போனாள். அவளது தோழிகளில் ஒருத்தி ரமேஷிடம் வந்து, 'ரமேஷ், யாரோ அவ அத்தை மகனாம். வந்து கூட்டிட்டுப் போயிருக்கான். அவளுக்கும், அவனுக்கும் கல்யாணம் என்று பேசிக் கொள்கிறார்கள்!' என்றாள்.

ரமேஷ் அதிர்ந்து போனான். கந்தகுருவும், குமாரும், 'நாங்க அவங்க ஊருக்குப் போய்ப் பார்க்கட்டுமா?' என்றார்கள்.

பிறகு, 'வேண்டாம்டா... ஃபோன் போட்டுப் பேசலாம்!' என்றான் குமார்.

தாங்கள் பேசினால் வம்பாகுமோ என்னமோ என்று கருதி வகுப்புத் தோழியரை விட்டுப் பேசச் சொன்னார்கள்.

அவள் வெளியே போயிருப்பதாகவும், கல்யாண ஜவுளிக்காகப் போயிருப்பதாகவும் சொன்னார்கள்.

யாருக்குக் கல்யாணம் என்று விசாரித்தபோது அவளுக்குத்தான் என்றார்கள்.

கந்தகுரு கோபத்தின் உச்சிக்கே போனான். 'நான் அவங்க ஊருக்கே போய் உண்டு இல்லைன்னு ஆக்கிடறேன்!' என்று குதித்தான்.

குமார்தான், 'பொறுமையாக அணுகுவோம். அவங்க ஊருக்குப் போய்ப் பேசிப் பார்ப்போம்.' என்றான்.

கந்தகுருவும், குமாரும் கனகாரியமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கையில், அதற்கெல்லாம் வேலை வைக்காமல் ரமேஷ் அன்று மாலையே ஊரை விட்டு எங்கோ போய்

விட்டான். அதற்குப் பிறகு எங்கு தேடியும் கிடைக்கவில்லை. கந்தகுருவுக்கு அது வடுவாக மனதில் பதிந்து போனது. குமார் கூட 'அஞ்சலி ஊருக்குப் போய்ப் பார்க்கலாமா?' என்றபோது 'போடா. அவனே போன 'கப்புறம் அவளுக்குக் கல்யாணம் ஆனா என்னடா, ஆகாட்டி என்னடா!' என்றான் கந்தகுரு.

அதிலிருந்து கவிதை, காதல் இந்த மாதிரி விவகாரங்களில் கந்தகுருவுக்கு ஆர்வம் இல்லாமற் போய் விட்டது. ஏற்கெனவே 'நம்ம கிராமத்துச் சூழ்நிலைக்கு ஏத்த மாதிரி யோசிக்கணும்டா!' என்றுதான் குமாரிடம் சொல்வான்.

அந்த நிகழ்வுக்குப் பிறகு இன்றைக்குத்தான் அஞ்சலியைப் பார்த்தான்.

சாப்பிடச் சாப்பிட எழுந்து போனவன் அவளைத் தொடர்ந்தான்.

'அஞ்சலி...!' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

'குரு...! நீயா...!' என்றாள் மகிழ்ச்சியில்.

'இது ராஜாராம்... அத்தை பையன்!' என்று அந்த ஆண்மகனை அறிமுகப்படுத்தினாள்.

இதற்குள் குரு சற்று நிதானப்பட்டிருந்தான். ஒரு வேளை இதுதான் தனக்கு விதிக்கப்பட்டது என்று ஒரு மாதிரி அவள் செட்டிலாகி இருந்தால் தன்னால் ஏதும் இடைஞ்சல் ஆகிவிடக் கூடாது என்று எண்ணிக் கொண்டான்.

'இவரோடதானே.. உனக்குக் கல்யாணம்னு....' என்று இழுத்தான்.

'ஐயோ.. அது பெரிய... கதை.. நீ வா.. நான் சொல்றேன்...' என்று தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

தன் காரிலேயே அவர்களோடு போனான்.



உள்ளே நுழையும்போது...

'ஏங்க... யார் வந்திருக்காங்க பாருங்க...' என்று குரல் கொடுத்தபடி உள்ளே போனாள்.

'யார்...?' என்று வெளியே வந்தது அவன் நண்பன் ரமேஷ்தான்.

'டேய்... குரு...' என்று கட்டிக் கொண்டான்.

நடந்ததையெல்லாம் சொன்னாள்.

ராஜாராமுக்கும் அவளுக்கும் திருமணம் நிச்சயமானது நிஜம்தான். ஆனால், இருவரும் கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்தவர்களாதலால் அவர்களுக்கு அதில் பிடித்தம் இருக்கவில்லை.

'மாமாவை நான் சகோதரனா நினைக்கிறேன். இந்தக் கல்யாணம் வேண்டாம்!' என்று அவள் விஷம் குடிக்கப் போனது கண்டு வீட்டினர் அரண்டு போனார்கள். ராஜாராமுக்கு அதே முகூர்த்தத்தில் வேறு பெண்ணை முடித்து வைத்தார்கள்.

கல்லூரிக்கு ஃபோன் செய்து விசாரித்தபோது ரமேஷ் எங்கேயோ போய் விட்டான் என்ற செய்தி கேட்டுக் கலங்கிப் போனாள்.

மாதம் ஒரு முறை அவன் வீட்டுக்கு, 'நான் உனக்காகக் காத்திருக்கிறேன்!' என்று கடிதம் மட்டும் போடுவாள். ஓராண்டு கழித்து ஒரு நாள் வீட்டுக்கு வந்த ரமேஷ் அந்தக் கடிதங்களைப் பார்த்து உண்மை தெரிந்து அவளைத் தேடி வந்தான்.

இரண்டு பக்கமும் எதிர்ப்பு என்ற போதும் ராஜாராம் மட்டும் கூட இருந்து ரெஜிஸ்டர் மேரேஜ் செய்து வைத்தான்.

எல்லாக் கதையையும் கேட்டுவிட்டுக் கந்தகுரு. 'அப்படிப் போடு!' சந்தோஷமாகச் சிரித்தான்.

'சினிமா மாதிரியிருக்குடா... என்றான்.

'அதுசரி.. இப்ப என்ன பண்றே?' என்றபடி வீட்டைக் கண்ணால் அளந்தான். கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

ரமேஷ் ஒரு பெருமூச்சு விட்ட ர்.

'என்னத்தைப் பண்றது? ஒரு க பிலே அக்கவுண்ட் டண்டாப் போறேன். கொஞ்சம் சம்பளம். அவளுந்தான் வேலைக்குப் போறா. ரெண்டு குழந்தைங்க வேற...' என்றான்.

ரமேஷ் வீடு நடுத்தரக் குடும்பம்தான். ஆனா, அஞ்சலி வசதியானவள். இப்போது எந்தப் பக்கமும் உதவியில்லை என்றார்கள். இன்றைக்குக் கூட ராஜாராமோடு ஏதோ ஒரு நல்ல வேலைக்காக ஒருவரைப் போய்ப் பார்த்து விட்டு வந்தார்களாம்.

'என்னை வந்து பார்த்திருக்கலாமில்ல!' என்று கந்தகுரு கேட்டான்.

'எந்த மூஞ்சிய வச்சிட்டு வந்து பாக்கறது. ஏற்கெனவே நீ இதெல்லாம் பைத்தியக்காரத்தனம்டா அப்பபடிம்பே. அதனால..' என்று இழுத்தான் ரமேஷ்.

'சரி... விடு. நானே அடுத்த வாரம் வொய்ஃபோட வரேன்!' என்று சொல்லி விட்டு வந்தான்.

\- - - - - - - -

இத்தனையும் சொல்லிவிட்டு மனைவியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

'ஐயோ... வசு...!' என்றான் மீண்டும்.

'சிரிக்காதீங்க... கவிதையெல்லாம் உங்க கையெழுத்துல இருந்தது... ஃபோட்டோவெல்லாம் பத்திரப்படுத்தி வச்சிருந்தீங்க... கவிதை பிடிக்காதுன்னு வெறுப்பாப் பேசறீங்க... அதனால....' என்று அவள் தடுமாறினாள்.

அவளைத் தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டான். 'மக்கு... மக்கு...' என்றான்.



'கந்தகுருவைப் பத்தி உனக்குத் தெரியலே... ஒன்ஸ் கமிட் ஆனா ஆனதுதான். அப்படியெல்லாம் தோல்வியெல்லாம் கிடையாது, தெரியுதா?'

'ஆனா இதனாலதானே கவிதை பிடிக்காமப் போச்சு?' என்று கேட்டாள்.

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். 'ஆமா... வசு.. நிஜம்தான். வரிஞ்சு வரிஞ்சு கவிதை எழுதிட்டுக் கடைசிலே போராடாம திக்காலுக்கொருத்தராப் போனாங்களேன்னு கோபம்!' என்றான் கிராமத்துப் பாஷையில். பிறகு அவளை ஆழமாகப் பார்த்தான். 'வசு...' என்றான் கிறங்கிய குரலில். 'ஏய்... என்னமோ எதுவும் பிடிக்காத மாதிரி ஒதுங்கறே.. ஆனா, அப்படி அழுகறே... பொறாமையாக்கும்...!' என்று சிரித்தான்.

'தெரியல... எனக்கே தெரியல....!' என்று அன்றைக்குத் தன் தாயிடம் அவன் சொன்னதைப் போலவே சொன்னாள். அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் கிறங்கிப் போனான். அடிக் குரலில் சிரித்தான்.

'நீங்க அப்படி அந்தப் பொண்ணு பின்னாலே போனதை என்னால தாங்கவே முடியல... தெரியுமா?' என்று முனகினாள்.

'ம்... அப்படியா...?' என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான். கழுத்தில் முகம் பதித்துக் கொண்டான்.

'ஒரு விஷயம் புரிஞ்சு போச்சி... வி லைக் ஈச் அதர்... அப்ப கொஞ்ச நாளைக்கு எல்லாத்தையும் தள்ளி வச்சுட்டு சந்தோஷமாக இருப்போம், என்ன?'

'சுத்தி சுத்தி அந்த பாய்ண்டுக்கே வருவீங்க!' என்று முனகினாள். ஆனால் மறுக்கவில்லை. தடுக்கவும் இல்லை.

## 15

**கா**லையில் அவள் சமையல் கட்டில் வேலையாய் இருந்தபோது சுற்று முற்றும் பார்த்தபடி கணவன் வருவதைப் பார்த்து ஆச்சரியமானாள்.

'ஏய்.. வசு.. என்ன சமையல்?' என்று நெருங்கி நின்று இழைந்தான்.

'ஐயோ.. என்னங்க நீங்க.. யாராவது பாக்கப் போறாங்க!' என்றாள் குழைந்த குரலில்.

'பாத்துட்டுப் போறாங்க!' என்றான், அலட்டிக் கொள்ளாமல்.

அந்த நேரம் சந்திரவதனி படுவேகமாகச் சமையல் கட்டை நோக்கி வருவதை அவர்கள் கவனிக்க வில்லை. திடீரென்று எங்கிருந்தோ வந்த முத்துவேல், 'சந்திரா.. அங்க போகாதே..' என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்.

'ஏன்...?' என்று அவள் புதிராகப் பார்க்கவும், 'மாப்பிள.. அங்க வசுகிட்டே பேசிக்கிட்டிருக்காரு!' என்று சிரித்தார். 'ஓ!' என்று சந்திரவதனி திகைத்துப் போய்ப் பின் இருவரும் சிரித்துக் கொண்டு போனார்கள். வந்தனா சோஃபாவைப் பிடித்துக் கொண்டு ஹாலில் தத்தித் தத்தி நடந்து வந்த செந்திலை வாக்கரில் நிற்க வைத்து அந்தப் பக்கம் தள்ளிக் கொண்டு போவதை ஓரக் கண்ணால் பார்த்த குரு சிரித்துக் கொண்டான்.

'ஸ்வீட் செய்யறேன்!' என்றாள் வசு. ஒரு விள்ளல் மைசூர்ப்பாகை எடுத்துக் கொடுத்தாள். தானும் ஒரு துண்டை எடுத்துக் கடித்து டேஸ்ட் பார்த்தாள்.

'கொஞ்சம் இனிப்புப் பத்தலையே.. வசு!' என்றான்.



'ம்... அளவு கரெக்ட்டாதானே போட்டேன்!' என்று அவள் கவலையாகச் சொல்லவும்,

'எங்கே.... அந்தத் துண்டைக் குடு, பார்க்கலாம்!' என்று அவள் கையிலிருந்த துண்டை வாங்கி டேஸ்ட் செய்தான். 'ம்... இப்பச் சரியாய் இருக்கு!' என்று சிரித்தான். அவள் பொய்க் கோபத்துடன் முறைத்தாள்.

'ச்சே... பயமுறுத்தீட்டீங்க!' என்று மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

'ஹேய்.. நீ இந்தச் சமையலையெல்லாம் வந்தனா கிட்ட விட்டுட்டு வா.... நாம எங்கயாவது போகலாம்..' என்றான், கிறக்கக் குரலில்.

'ம்...' என்று ஒத்துக் கொண்டாள். அவ்வளவுதான். மாமனாரிடம் சொன்னான். அவர் உடனே தன் நண்பர் ஒருவரின் பழத் தோட்டத்துடன் கூடிய கெஸ்ட் ஹவுஸுக்கு அனுப்பி வைத்தார்.

பண்ணை வீட்டுக்குப் போய் வந்த பிறகு அன்றைக்குத் தான் அது மாதிரிச் சிரித்தார்கள்.

மனைவியைத் தன் கைப்பிடியில் வைத்தபடி, 'என்னமோ கவிதை யெல்லாம் எழுதி வச்சிருக்கேன்னு சொன்னியே, ஒண்ணு சொல்லு...' என்றான்.

'ம்ஹூம்... நீங்க கிண்டல் பண்ணுவீங்க!' என்று மறுத்தாள்.

'ஹேய்... வசு...' என்று கெஞ்சவும், சொன்னாள்.

அவள் கவிதை இப்படிப் போனது.

மழைத்துளிக்கு ஏங்கும்
சாதகப் பட்சியாய்
உன் மகிழ்ச்சிச் சிரிப்புக்கு
ஏங்கி நின்றேன்.
கழைக் கூத்தாடிக்குக் கம்பிமேல்
கவனம் போல்

தன்
கருத்து முழுவதையும்
உனக்கே வைத்தேன்
உழைத்து முடித்தவனுக்கு
உறக்கத்தில் கிடைக்கும்
அந்த
உள்ளத்து நிம்மதி
உன்னிடம் தானென்று
களைப்பில்லாமல்
காத்திருக்கிறேன்!
என் காதல் மணத்துடன்
பூத்திருக்கிறேன்!

'ஹேய்... வசு... வசும்மா!' என்று அரற்றியபடி அணைத்தான். அன்றைக்கு நிறையப் பாடங்கள் சொல்லிக் கொடுத்தான்.

நிறைவான அமைதியின்போது அவன் மார்பில் முகம் புதைத்துச் சிரித்தாள். 'என்ன வசும்மா?' என்றான்.

கல்யாணமான புதுசிலே சிரிக்கவே மாட்டீங்களே! அப்ப திட்டிக் கூட எழுதினேன்! என்றாள்.

'சொல்லு... வசு... கேட்போம்...' என்றான்.

சொன்னாள்
இரும்புத் திரையை
இதயத்துக்குப் போட்டாய்
கருப்புத் திரையைக்
கண்ணுக்குப் போட்டாய்
சின்னத் திரையைச்
சிரிப்புக்குப் போட்டாய்...
ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள்
மறை கழன்று போனதன் பின்
நிறுத்தவே முடியாமல்
சிரிக்கத்தான் போகிறாய்...!



அவன் பெருஞ்சிரிப்புச் சிரித்தான். 'லொள்ளுதான்டி உனக்கு...' என்று சிரித்தான். பிறகு, 'எழுது.. நிறைய எழுது.. ஒரு தொகுப்பாப் போடலாம். அப்புறம் வேறென்ன ஐடியா வெச்சிருக்கே?' என்றான்.

'குரு...' என்று ஏதோ சொன்னவள்... 'அதென்ன பேர் சொல்லிக் கூப்பிடாதேம்பீங்க.. இப்பல்லாம் ஒண்ணும் சொல்றதில்லே...' என்றாள்.

'நீ அப்படிக் கூப்பிட்டா சுகமாத்தான் இருக்கு..' என்றான் மெல்லிய குரலில்.

அவன் புன்னகைத்துக் கொண்டான். 'அம்மா முன்னாடி, பண்ணையத்து ஆளுங்க முன்னாடி கூப்பிடாதவரை சரி!' என்றவன், 'ஏதோ சொல்ல வந்தியே, அதைச் சொல்லு...' என்றான்.

அவள் உடனே ஒரு காசெட் கொண்டு வந்து காட்டினாள். 'இதுல நிறைய ரைம்ஸ் சொல்லியிருக்கேன். கவியருவிகிட்ட குடுத்து நம்ம ஸ்கூல்ல குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கச் சொல்லுங்க...' என்றாள்.

'உத்தரவுங்க, பண்ணாடிச்சி!' என்றான்.

\- - - - - - -

மறுநாள் அதிகாலை ஊருக்குத் திரும்ப வரும்போது அந்தக் காஸெட்டைப் போட்டுக் கேட்டான். அவள் நேற்று மார்பில் சாய்ந்தபடி, 'குரு.. நம்ம நாட்டுக்கு மழை வேணும். நாம ஏன் ரெயின், ரெயின் கோ அவேன்னு சொல்லணும். நம்ம பண்பாட்டுக்கு ஒத்து வராத 'ஹேவ்.. யூ எனி வுல்?' எதுக்கு என்றாள். அதன் படியே

மழையே மழையே வா! வா!
மகசூல் நிறையக் கொண்டு வா.
குளங்கள் நிறையத் தண்ணீர் தா.
கால்வாய் நதியில் கலந்து வா.

இலைகள் எல்லாம் நீ தொட்டால்
அசைந்து அசைந்து சிரிக்குது
குலையாய்க் கொத்தாய்க் காயும் கனியும்
குவியச் செய்ய மழையே வா!

என்று சொல்லியிருந்தாள். அவளது குரலிலேயே. கேட்கக் கேட்க இனிமையாக இருந்தது.

சின்னச் சின்னப் பேனாவாம்
அண்ணன் தந்த பேனாவாம்
வண்ண வண்ண நிறத்தினிலே
வாங்கித் தந்த பேனாவாம்.

எண்ணம் நல்லது வளர்ப்பாயாம்.
புத்தகம் நிறைப் படிப்பாயாம்.
எண்ணிப் படித்த கருத்தெல்லாம்
எழுத்தில் நீயும் வடிப்பாயாம்.

என்றாள்.

ஆனை ஆனையாம்
ஆடும் துதிக்கையாம்
பூனை பூனையாம்
தாவிக் குதிக்குமாம்.

மான்கள் மான்களாம் - - - - - -
மருண்டு ஓடுமாம்.
காணும் உயிரெல்லாம்
இறைவன் கவிதையாம்

என்றாள். அடுத்து.

மெது மெதுவாகப் பாடல்களின் ஊடே அவள் கருத்தை நுழைக்கிற விதத்தை ரசித்துக் கொண்டான்.

சுற்றுப்புறத்தைச்
சுத்தம் செய்...
சுற்றத்தாரைச்
சொந்தம் கொள்...



பென்னம் பெரிய
பூசணி போல்
பெரிய மனத்தை
வளர்த்துக் கொள்.

சின்னஞ் சிறிய
தேனீ போல்
சுறுசுறுப்பைத் தான்
கற்றுக் கொள்.

அன்னை நாளும்
உழைக்கின்றாள்
அவளிடம் அன்பைக்
கற்றுக் கொள்.

அப்பா வருவார்
மிட்டாயுடனே.
அவரிடம் அறிவைப்
பெற்றுக் கொள்.

அண்ணன் தங்கை
அக்காவோடு
கூடி வாழக்
கற்றுக் கொள்.

உழைப்பும் அன்பும்
உன்னிடம் இருந்தால்
கடவுள் தருவார்
பெற்றுக் கொள்.

என்ன தருவார்
என்றா கேட்டாய்?
எதிலும் வெற்றி
பெற்றுக் கொள்.

'சூப்பர்ப்... வசு! என்று ஏதோ அவள் எதிரில் இருப்பது போல் சொல்லிக் கொண்டான்.

திடீரென்று இடையிடையே கவியருவிக்கு இன்ஸ்ட்ரக்ஷன் வேறு கொடுத்தாள். 'கவி... இந்த இடத்தில ரெண்டு தடவை சொல்லு. புரியுதா?' என்று. 'இங்க பாரு.. அடுத்த பாட்டு. 'சாய்ந்தாடம்மா....' சொல்லுவமில்ல.. அது மாதிரிச் சொல்லணும்... என்ன?

'விளையாடம்மா
விளையாடு
களைப்பேயின்றி
விளையாடு

விளையாட்டில் நீ
வெற்றி பெற்றால்
கையும் காலும்
பலம் பெறுமாம்.

கையும் காலும்
பலம் பெற்றால்
காரியமெல்லாம்
ஜெயம் பெறுமாம்!'

என்று போனது கவிதை.

நேராக ஃபாக்டரி போய்விட்டான். இரண்டு நாட்கள் அவன் இல்லாததால் நிறைய வேலைகள் இருந்தன. முடித்து விட்டு வீட்டுக்கு வந்தான்.

அம்மாவிடம், கமலம்மாவிடமும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். அன்றைக்குக் குமாரும், கீதாவும் பேசினார்கள். இன்னும் இரண்டு மாதத்தில் வந்து விடுவதாகச் சொன்னார்கள். பிறகு கீதா... மெதுவாக, 'அண்ணா!' என்றாள்.

'சொல்லும்மா...'

'அண்ணா.. நீ மாமாவாகப் போறே!' என்றாள்.

'அட்றா.. சக்கை...!' என்று சிரித்தவன், குமாரிடம், 'டேய்... நல்லாப் பாத்துக்கடா. சீக்கிரம் கூட்டிட்டு வந்துரு...' என்றான்.



'வசுவும் அதேதான் சொன்னா!' என்றான்.

'ஓ.. அங்க.. சொல்லிட்டியா?' என்றவன், தன் மனைவியின் ரைம்ஸ் பத்தியெல்லாம் சொன்னான்.

'ஆமா... குரு.. எங்கிட்டயும் சொன்னா! இங்கிலீஷ்லயும் செய்யப் போறாளாம்...' என்றான்.

குருவுக்குப் பெருமையாக இருந்தது.

அன்றிரவு எட்டு மணிவாக்கில் -

ஃபோனில் அழைத்தான். உருகிப் பேசினான்.

'ஹேய்... இனித் தாங்காது... வசும்மா... எப்ப வீட்டுக்கு வரே! சொல்லு!' என்றான்.

'வந்தர்றேன்... குரு... மூணு மாதம் இருக்கறேன்னு அம்மாகிட்டே சொல்லிட்டேன். இன்னும் ஒரு மாசம்தானே. வந்தர்றேன்...'

திடீரென்று அவன் சிரித்தான்.

'என்ன சிரிப்பு?' என்றாள் குழைந்த குரலில்.

'மறை கழன்று போகும்னு எழுதியிருந்தியே... அதை நினைச்சுச் சிரித்தேன். மறை இப்பவா கழன்று போச்சு? எப்பவோ... அந்தக் கல்யாண வீட்டிலே பார்த்தனே... அன்னைக்கே கிறுக்குப் பிடிச்சாச்சு. வசு... இல்லாட்டி எங்கப்பன் போட்ட போட்டுக்கு... எனவும்

'ப்ளீஸ்... குரு... அதைப் பேச வேண்டாமே!'

'ஆமா... இல்லே.. அதுவும் சரிதான் அன்னைக்கு அம்மா கூட எதுக்குச் சொன்னாங்கன்னு தெரியலே. ஆனா, எதையும் நீயா உன்ற அனுபவத்தை வச்சு முடிவுக்கு வான்னு சொன்னாங்க. நானும் அதுதான் சரின்னு முடிவு பண்ணீட்டேன்!' என்றான்.

'எப்படியும் உங்க அடிப்படைக் குணம் மாறலே...'

'என்ன சொல்றே...?'

'இதுவரைக்கும் அப்பா சொன்னது. இனிமே அம்மா சொன்னதா?' என்று கிண்டல் செய்தாள்.

அவன் சிரித்தான். 'நீ சொல்லிக் கொடுத்தாலும் கேட்டுக்கறேன். இப்பத் தூக்கமே வர மாட்டேங்குது வசும்மா! என்னைக்குக் கல்யாணத்துல பார்த்தனோ அன்னையிலிருந்து நான் நானாய் இல்லாமப் போயிட்டேன்...'

'சார்... சார்... ஒரு குழந்தைக்கு அப்பா சார்... என்னமோ பீச்சில லவ்வர்ஸ் பேசற மாதிரி பேசறீங்க!' என்று கலகலவெனச் சிரித்தாள்.

'ஏன்? ஒரு குழந்தைக்கு அப்பாவா இருந்தா அடுத்ததுக்கு அடிப் போடக் கூடாதாக்கும்?'

'ஐய்யயோ... இப்பல்லாம் இல்ல, சாமி... செந்திலுக்கு ரெண்டு வயசாவது ஆகணும்...'

'அதுவும் சரிதான்...' என்றவன், ஒரு நிமிடம் மௌனமானான்.

'வசு...' என்றான் குழைந்த குரலில்.

'ம்...?'

'யு ஆர் டிஃபரண்ட் வசு. நகை, பணம்னு ஆசைப்படற தில்லே... கன்ஸ்ட்ரக்டிவ்வா யோசிக்கறே... அறிவு பூர்வமா சிந்திக்கிறே... 'அதான் அன்னைக்கே எனக்கு மனசுல பட்டுது. அறிவு அந்தக் கண்ணுல தெரிஞ்சது. கம்பீரம் அந்த நடையிலே தெரிஞ்சது. நீ ரொம்ப டிக்னிஃபைட், தெரியுமா?' என்று அவன் பேசப் பேச அந்தப் பக்கம் அவள் வெட்கத்துடன் அடிக்குரலில் சிரித்தாள்.

'ஹேய்..! என்ன பதிலைக் காணோம்..?'

'நீங்க கேள்வி ஒண்ணும் கேக்கலையே?' என்று முணுமுணுத்தாள்.

'வசு... அதென்ன.. ரைம்ஸ் சொல்றதுல கூட ஒரு இன்வால்வ்மென்ட்டோட செஞ்சிருக்கே..' என்றான்.



'குரு... நான் போன மாசம் இங்கே ஒரு யோகா கோர்ஸ் எடுத்தேன். ஊருக்கு வரும்போது ரொம்ப டிப்ரஸ் ஆகியிருந்தேன். ஆனா.. ஆர்ட் ஆஃப் லிவிங்னு அந்தக் கோர்ஸ் எடுத்தப்புறம் ரொம்ப ஃப்ரெஷ்ஷாயிட்டேன். தெரியுமா? குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ன்னு.. அவரு சொல்றாரு. லிவ் இன் த பிரசன்ட்ன்னு.. எதிலயும் ஈடுபாட்டோட இருங்க. மகிழ்ச்சியாய் இருங்க. குழந்தைங்களைப் போல இருங்கன்னு...'

'தெரிஞ்சுது.. தெரிஞ்சுது!' என்றான்.

'என்ன தெரிஞ்சுது?' என்றாள் குழப்பமாக..

'நேற்றுக் கிடைச்ச ஒத்துழைப்பிலேயே... எல்லாத்துலயும் ஒரு இன்வால்வ்மென்ட்ன்னு தெரிஞ்சுது!' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

'சே... எவ்வளவு சீரியஸா சொல்லீட்டிருக்கேன்... நீங்க...' என்று கடிந்து கொண்டாள், மேலுக்கு.

'சரி.. சரி.. சொல்லு.'

'அந்த கோர்ஸ் நீங்களும் எடுத்துக்குங்க.'

'சரீங்க... டீச்சரம்மா..' என்றவன், போனில் இந்தப்புறம் இருந்து முத்தம் கொடுத்தான்.

'என்ன... நீங்க..?' என்றாள் அவள் வெட்கத்துடன்.

'வைக்கட்டுமா... குட்நைட்...' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டாற் போல் நடித்தான். 'ம்... எங்க? ஒண்ணும் குட்நைட் மாதிரித் தெரியலே...!' என்று சிரித்தான். அவள் போனை வைத்தாள்.

தன் கணவனுக்கு இப்படி யெல்லாம் கூடப் பேசத் தெரியுமா என்று கிறங்கி நின்றாள். கலகலவென்று சிரித்தபடி கணவனிடம் பேசி விட்டுச் சிவந்த முகத்துடன் ஏதோ கனவில் போவது போல் நடந்து போகிற மகளைப் பார்த்த முத்துவேல் சிரித்துக் கொண்டார்.

அங்கே முகமெல்லாம் சிரிப்புடன். 'கொஞ்ச தூரம் நடந்துட்டு வரேம்மா!' என்று குரல் கொடுத்துவிட்டுப் போகிற மகனைப் பார்த்து விட்டுக் கமலம்மாவும், பெரியாத்தாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

சற்றுக் கழித்து அவன் திரும்ப வந்தபோது அவன் வருவதை அறியாமல்,

'என்ன சொல்லு... கமலா... இந்த குருப்பய சிரிச்சிக்கிட்டு இருந்தாத்தான் நமக்கு ஒரு நிம்மதியா இருக்கு... இல்லே!' என்று சொல்லிக் கொண்டிருந்தார் பெரியாத்தா.

அவன் சிரித்துக் கொண்டு அறைக்குப் போனான். சற்று நேரம் விட்டம் பார்த்துப் படுத்திருந்தான். பிறகு எழுந்து வசுமதியின் அந்தச் சின்ன அறைக்குள் நுழைந்து பார்த்தான்.

தன்னுடைய படத்தையும், செந்திலின் படத்தையும் அவள் லாமினேட் செய்து வைத்திருப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, அவளுடைய கவிதை டைரியை எடுத்துப் பார்த்தான். அதில் ஒரு கவிதை அவனைச் சிந்திக்க வைத்தது.

திரும்பத் திரும்பப் படித்தான்.

'எனக்கு ஒன்று புரிந்து விட்டது.
எப்போதும் நீ
நீயாக என்னை
அணுகுவதில்லை...
ஏதோ கவசப்
பூச்சுடனே வருகிறாய்...
எப்போதும் நீ..
என்னை நானாக
எண்ணி அணுகுவதும் இல்லை...
எனக்கும் ஏதோ
மேல்பூச்சு உள்ளதென்றே
கற்பனை செய்து கொள்கிறாய்
எப்போது உனக்கு
உள்ளம் புரியும்...?'

என்று எழுதியிருந்தாள்.



அவன் அந்த டைரியைக் கையில் எடுத்துக் கொண்டு மார்பில் சாய்த்தபடி விட்டம் பார்த்துப் படுத்தான்.

தன்னை விடச் சின்னப் பெண். எல்லாம் நானே என்று வந்தாள். ஆனால், தனது நேசக் கரம் கிடைக்காத போது கூட எப்படிப் பொறுத்துக் கொண்டாள். கவிதையை வடிகால் ஆக்கிக் கொண்டு... புத்தகங்களில் ஆறுதல் தேடிக் கொண்டு... தனக்கும் எதுவும் மறுக்காமல் என்று நினைத்தபோது தன்மீதே அவனுக்குக் கோபம் வந்தது. இனிமேல் அத்தனைக்கும் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அடுத்த கவிதையைப் படித்தான்.

உனது ஓட்டப் பந்தயத்தில்
நீ எவ்வளவு தூரம்தான்
ஓடினால் என்ன?
எத்தனை கோப்பைகளை
ஜெயித்தால் என்ன!

இளைப்பாற ஒரு நாள்
இந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு
வரத்தான் போகிறாய்...

அதுவரை நான்
குடிக்க நீரும்
குளிர்ந்த மோரும்
கோப்பையில் ஏந்தியபடி
காத்துக் கொண்டிருப்பேன்!
உன் தாகம் தீர்த்துப்
பார்த்துக் கொண்டிருப்பேன்!

என்று எழுதியிருந்தாள். அதற்கு மேல் அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

அவசரமாகப் புறப்பட்டான். 'அம்மா.. திடீர்னு ஒரு அவசர வேலை. கோயமுத்தூர் போறேன். நாளைக்கு மத்தியானத்துக்குள்ள வந்தர்றேன்!' என்று காரை எடுத்தான்.

போகிற அவன் காரைப் பார்த்தபடி, 'அடப் பயலே!' என்று பெரியாத்தா சிரித்தார் என்றால்.. நள்ளிரவில் வந்து நின்ற மருமகனைப் பார்த்து மாமனார் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

'கொஞ்சம் ஸ்பேர் பார்ட்ஸ் அவசரமாகத் தேவையிருந்தது... வந்தேன்!' என்றபடி அவர்கள் அறைக்குப் போகிற அவனிடம்...

'மாப்பிளே.. பால்.. ஏதாவது சாப்பிடறீங்களா?' என்றார்.

'இல்லே... இல்லே அதெல்லாம் தேவையில்லே. டோன்ட் டிரபிள் யுவர்செல்ஃப்!' என்றான். 'செந்தில் தூங்கிட்டானா என்ன?' என்று நிற்காமல் போய் விட்டான்.

அதுவரை மகிழ்ச்சியில் உறங்காமல் புரண்டு கொண்டிருந்த வசுமதி கணவன் குரல் கேட்டது போலிருக்கவும் கனவென்று நினைத்துக் கொண்டு திரும்பிய போது அவன் நிற்கக் கண்டாள்.

'குரு...!' என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

அவன் கவனமாகக் கதவைத் தாழிட்டுத் திரும்பியவன் அவள் வியப்பும், திகைப்புமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கையிலே, 'அசுர வேகத்திலே வந்தேன். ஒன்றரை மணி நேரத்துல...' என்று சிரிக்கவும்.

'குரு... இவ்வளவு அவசரமா?'

அவன் உடை மாற்றிக் கொண்டு வந்தவன் செந்திலைப் போய்த் தூளியில் படுக்க வைத்தான்.

வியப்பாய் விழிக்கிற மனைவியைப் பார்த்தவன் வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

'என்னத்துக்கு அப்படிப் பாக்கறே.. எக்கசக்கமாய்க் கவிதை எழுத வேண்டியது. அப்புறம் ஒண்ணும் தெரியாத மாதிரி இப்படி முழிக்க வேண்டியது...'



என்று வேகமாக இழுக்கவும்... அவள் திகைத்தபடி நெஞ்சில் பொங்கிய குதூகலத்துடன் அவன் கைச்சிறைக்குள் அடங்கினாள்.

'தண்ணீர்ப் பந்தல்ங்கறே... குளிர்ந்த நீர்ங்கறே... ஆளை வறுத்தெடுக்கிற... தாகம், வசும்மா..' என்று உளற ஆரம்பித்தான். அவளோ பேச்சற்றுப் போனாள்.

ஆனால், அன்றைக்கு அவளுக்கு மீண்டும் சில நாட்களில் நிலைமை தலைகீழாக மாறப் போகிறது என்பதும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறப் போகிறது என்பதும் தெரிந்திருக்கவில்லை.

## 16

பத்து நாள் சென்றிருக்கும். ஒரு நாள் இரவு பத்து மணிக்கு வந்தான்.

அவன் முகம் இருந்த நிலையைப் பார்த்தவுடன் வசுவுக்குத் திக்கென்றிருந்தது. கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே அவன் ஃபோன் செய்யவில்லை. அவள் ஃபோன் செய்தபோது.

'வசு... நான் அப்புறம் பேசறேன். இப்பக் கொஞ்சம் பிஸியாயிருக்கிறேன்..' என்று ஆஃப் செய்தான்.

அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. கடந்த வாரமெல்லாம் கலாட்டாவாகப் போன் செய்து கொண்டிருந்தானே என்றெல்லாம் யோசிக்கவில்லை.

ஆனால், இப்போது ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்பது புரிந்தது. ஏதோ பிரச்சினையில் சிக்கியிருக்கிறான் என்பது புரிந்தது.

'சாப்பிடுங்க...' என்று உபசரித்தாள். மாமனாரிடம் அளவாகப் பேசினான். வந்தனா, 'என்ன... மாமா... ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கணுமாக்கும்!' என்று கலாட்டா செய்த போது மட்டும் லேசாகப் புன்னகைத்தான்.

'ஏய்... வந்தனா.. நான் ஏதோ ஜாடை மாடையா சொன்னா வுட்டுட்டுப் போவியா...! மாமா.. இவளுக்குச் சீக்கிரம் ஒரு மாப்பிள்ளை பாருங்க...' என்று குரல் கொடுக்கவும், 'ஐயோ.. மாமா, உங்கிட்டே பேச முடியாது!' என்று ஓடிப் போனாள்.

'என்னங்க... நீங்க...' அவகிட்டப் போயி...' என்றாள் வசுமதி.

அவன் பதில் சொல்லாமல் அறைக்குப் போய்விட்டான். தலையைக் கோதியபடி அறைக்குள் நடந்து கொண்டிருந்தான். திருமணமான புதிதில் இறுக்கமாக இருப்பானே அப்படி இருந்தான்.

வசுமதி அறைக்கு வந்தவள், 'என்ன குரு...?' என்றாள்.

அவன் நின்றான். அவளைப் பார்த்தான்.

'வசுமதி... பெண்களை நம்புங்க நம்புங்கன்னு சொல்லியே! ஆனா, அப்பாவுக்கு ஏன் ஸ்ட்ரோக் வந்துதுன்னு தெரிஞ்சுடுச்சு!' என்றான்.

'ஏன்?' என்றாள், ஏதோ பெரிய வெடியை எதிர்பார்ப்பவள் போல்.

அவன் இடியைப் போல் அந்தச் செய்தியை இறக்கினான்.

வசுமதி திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

- - - - - - - -

இரண்டு நாட்களுக்கு முன்..

ஃபாக்டரியிலிருந்து ஏழு மணிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

வழியில் அந்த ஆள் நின்றிருந்தவன் கையைக் காட்டினான்.



'யார்?' என்றான்.

'ஐயா... நான் கன்னியாத்தாளோட மகனுங்க...!' என்றான்.

'கன்னியாத்தாவா...?'

'ஆமாங்க... மருத்துவச்சிங்க...' என்றான்.

'ஆ... மருத்துவச்சியா... என்ன வேணும்?'

'அம்மா... சாகக் கிடக்கிறாங்க. உங்களைப் பாக்கோணும் கிறாங்க...'

பலதையும் யோசித்தபடி போனான். மருத்துவச்சி படுக்கையிலிருந்து எழப் பார்த்தாள். கும்பிட்டாள்.

'பரவால்லே... பரவால்லே... படுத்துக்க!' என்றான். சிறு வயதிலிருந்தே தெரியும். அவள் சுற்று முற்றும் பார்க்கவும் எல்லாரும் வெளியே போனார்கள்.

'ஐயா... நீங்க என்னை மன்னிக்கோணுமுங்க... மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க...'

'ஏன் மன்னிக்கணும்?' என்று தெரியாமல் பார்த்தான்.

'அய்யா.. உங்களோட அப்பாரு சாவுக்கு நான் காரணமாப் போயிட்டேனுங்க!' என்று கண்ணீர் விட்டாள்.

அவன் உணர்ச்சி வசப்படாமல், 'எப்படி?' என்றான்.

பிறகு அவள் விவரமாகச் சொன்னாள்.

பெரியாத்தாவின் முதல் பிரசவத்தையும், கமலம்மாவின் இரண்டாவது பிரசவத்தையும் அவள்தான் பார்த்தாளாம். பண்ணை வீட்டில்தான் இருவருமே அந்த சமயம் இருந்தார்கள்.

எதிர்பார்த்ததற்கு முன்பாகவே கமலம்மாவுக்கு வலி கண்டது. ஆனால், குழந்தை இறந்தே பிறந்தது. மயக்கத்தில் இருந்தாள் கமலம்மா.

மருத்துவச்சி ஓடி வந்து பக்கத்து அறையில் இருந்த பெரியாத்தாவிடம் சொல்ல, 'ஐயய்யோ... கமலா தாங்க மாட்டாளே...' என்று வேதனைப்பட்டாராம். அந்த அதிர்ச்சியில் அவருக்கும் வலி வந்து கீதா பிறந்தாள்.

அப்போது பெரியாத்தா ஒரு காரியம் செய்தார். 'நான் இல்லாதவ. அப்படியே இருந்துட்டுப் போறேன். இந்தளவு போனதுக்கப்புறம் எனக்குக் குழந்தை பிறந்தா எங்கூட்டுக் காரரு அவகிட்டே எப்படி நடந்துக்குவாரோ. இப்பவே அப்பப்ப 'அவசரப் பட்டுட்டேன்!' அப்படீன்னே சொல்றாரு.' என்று புலம்பியவள் கன்னியாத்தாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு குழந்தைகளை மாத்திரு என்று கெஞ்சினாராம்.

கன்னியாத்தாளும் அப்படியே செய்தாளாம்.

'ஐயாவுக்கு உண்மையை மறைச்சமேன்னு உறுத்தல் இருந்து கொண்டே இருக்க ஒரு நாள் அவர் தனியாகக் கிடைத்த போது விவரமெல்லாம் சொன்னாளாம்.

'என்ற பெரியாத்தா.. என்னைய நம்பாமப் போனாளே.. நான் என்ன கமலாவைக் கைவிட்டுப் போடுவேன்னு நெனச்சாளோ.. சிங்கக்குட்டியா மகன் பெத்துக்கொடுத்தவளைத் துரத்திப் போடுவனாமா? இப்படி மறைச்சாளே...!' என்று வெகுவாகப் புலம்பினார்.

அன்றைக்குத்தான் ஸ்ட்ரோக் வந்தது. அதைக் கேட்டதிலிருந்து. 'ஏண்டா சொன்னோம்...!' என்று வருத்தப்பட்ட கன்னியாத்தா படுக்கையாகிப் போனாள். எல்லாம் சொல்லி முடித்த பின் வசுமதியின் முகம் பார்த்தான்.

அவள் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

'என்ன வசு, பேச மாட்டேங்கறே? எவ்வளவு பெரிய விஷயம்? அதை எப்படிப் பெரியம்மா செய்யலாம்? எப்படி மறைக்கலாம்?' என்றான்.

கனமான அமைதி சற்று நேரம் நிலவியது.

முதல் முறையாக அவன் பெரியாத்தாவை பெரியம்மா என்று குறிப்பிட்டதைக் கேட்டவுடன் அவள் முகம் வாடியது. பிறகு மெதுவாக,



'நீங்களும், கீதாவும் ஒரு வயிற்றுக் குழந்தைங்கன்னு இருந்தா பெட்டர்ன்னு நினைச்சிருக்கலாம். அல்லது மாமாவுக்குப் புதுசா எதுக்கு மனக் குழப்பம்னு நினைச்சிருக்கலாம்.'

அவன் கிண்டலாகச் சிரித்தான்.

'எல்லாம்கலாம்தான். எப்படியானாலும் அப்பா அதிர்ச்சிக்கு அர்த்தம் இருக்கில்ல?'

'இருக்கலாம். ஆனா, இப்பவும் நான் சொல்றேன். அத்தை ரொம்ப நல்லவங்க. அவங்களுக்கு எல்லாமே மாமாவும், நீங்களும்தான்'

'ஆனா, நம்பிக்கை மட்டும் வைக்க மாட்டாங்க!'

'குரு, அவசரப்பட்டு அவங்ககிட்டே எதுவும் பேசிடாதீங்க.'

'நீ மட்டும் என்ன? பெண்களுக்காகத்தான் பேசுவே.'

'குரு!' என்றாள் அதிர்ச்சியுடன்.

'நீயும் என்னை நம்பாதவதானே. வேறு யாரையோ காதலிச்சேன்னு நினைச்சுகிட்டு அத மனசுக்குள்ள வச்சிருந்தவதானே?'

திடீரென்று தனக்குச் சாதகமான கருத்துக்களை அவன் தேடித் தேடி இழுக்கிறான் என்பது புரிந்தது.

'குரு... நடந்திருக்கிறது... பெரிய விஷயம்தான். பெரியவங்களே அதைப் பத்திப் பேச விரும்பாதப்ப நீங்க எதுவும் புதுசாக் கெளப்பாதீங்க.'

'எப்படி விடறது? ஒரே நாள்ல உலகமே தலைகீழாப் போன மாதிரி இருக்கு. இது எவ்வளவு பெரிய அதிர்ச்சின்னு உனக்குப் புரியலையா?' என்றான், வேதனையுடன்.

'புரியுது... குரு!' என்று மீண்டும் செய்வதறியாது மௌனமானாள்.

'எங்க ஃபீலிங்ஸோட விளையாடறதே உங்களுக்கு வேலையா?' என்றான்.

பிறகு முகம் இறுக அவள் தோளைப் பற்றித் தன்பால் இழுத்து, 'உங்களுக்கு நாங்க என்ன விளையாட்டுப் பொம்மை களா?' என்றான். இதுவரை இல்லாத விதமாகத் தன் கோபத்தை யெல்லாம் அவளிடம் காட்டியவன், விலகிப் போனபோது, வசுமதி ஆழ்ந்த வருத்தத்துடன் அமைதியாகி விட்டாள்.

வெளியே போய் உலவி விட்டு வந்தவன், அவள் அமைதியாக இருப்பதைப் பார்த்து, 'எப்பவும் மாதிரி சண்டை யாவது போட்டுத் தொலையேன்?' என்று எரிந்து விழுந்தான்.

தாய்மையும், யோகாவும், புத்தகங்களும் வசுமதிக்கு ஒரு பக்குவத்தைக் கொடுத்திருந்தன. ஆழ்ந்த அமைதியுடன் அவன் முகம் பார்த்தாள்.

பிறகு சொன்னாள், 'எனக்கு என்னமோ உங்கப்பா ஏதோ ஒரு பாயிண்டில் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்னுதான் தோணுது. விடை கிடைக்கும். பொறுங்கள்...' என்று அவனை மடியில் கிடத்தித் தட்டிக் கொடுத்தாள்.

தன் கோபத்தை யெல்லாம் உள்வாங்கிக் கொண்டு தாய்மை காட்டுகிற அவளுக்கு முன் அவன் வேறெதும் செய்ய இயலாமல் பணிந்தான்.

'எனக்கு மட்டும் ஏன் வசு! இத்தனை சிக்கல்கள்...?' என்று புலம்பினான். அவன் மனதிலிருப்பதையெல்லாம் கொட்டட்டும் என்று அவளும் அனுமதித்தாள்.

'யாருக்கு வேண்டும், வசு இந்தச் சொத்தும், பணமும்... ஏதாவது ஒரு கூலிக்காரன் வீட்டில் பிறந்திருந்தால் நிம்மதியாக இருந்திருக்கலாம் போலிருக்கு...' என்று வருந்தினான்.

'அப்படி நினைக்காதீங்க... குரு. கடவுளுக்கு நம்மால் எவ்வளவு தாங்க முடியும் என்று தெரியும். இப்பவும் உங்க அவஸ்தைக்கெல்லாம் காரணம் நம்பிக்கைக்கும் அவ



நம்பிக்கைக்கும் இடையே உங்க மனசுல ஏற்பட்டிருக்கிற ஊசலாட்டம்தான்...'

'அவனவன் கஷ்டம் புரியாம, நல்லாத் தத்துவம் பேசு...' என்று அவன் கடுப்பாகவும், அவள் சற்று நேரம் அமைதி யானாள்.

பிறகு மெதுவாக, 'குரு, யார் வயிற்றில் பிறந்தால் என்ன? கீதா உங்க தங்கைதானே?' என்றாள்.

'ஐயோ, நான் அதுக்குச் சொல்லலை. இதைக் கேள்விப் பட்டப்புறம் நான் அவளை ரொம்ப நல்லா பாத்துக்க வேண்டிய கடமை எனக்கிருக்குன்னுதான் நெனைக்கிறேன்.'

'அப்புறம் என்ன பிரச்சினை?'

'பிரச்சினை உனக்கு இன்னும் புரியலையா? ஏன்.. அதை மறைச்சாங்க...' என்று அவன் வேகமாகக் கேட்டான்.

'தெரியலியே...' என்றாள். 'சரி... குரு, நாம வேற பேசலாம். வாங்க, கொஞ்சம் நடந்துட்டு வரலாம்...' என்று அழைத்துப் போனாள்.

'குரு... இன்னைக்கு உங்க மகன் என்ன செஞ்சான் தெரியுமா? உங்க போட்டோவை எடுத்து வெச்சுகிட்டு ஒரே கொஞ்சல்தான்...' என்று மகனைப் பற்றிப் பேசி அவன் கவனம் மாற்றினாள்.

மீண்டும் அறைக்கு வந்தபோது அவன் சற்றே இளகியிருந்தான்.

'வசு... நான் காலையில் நேரத்துல போகணும்...' என்றான்.

'சரிங்க...' என்று அவள் துணிமணிகளை எடுத்து மடித்து வைத்துக் கொண்டிருந்தபோது அதன் உள்ளிருந்து ஒரு டாகுமெண்டின் ஃபோட்டோ ஸ்டேட் நகல் விழுந்தது.

அதை எடுத்து வைக்கத் திரும்பியவள் அந்தக் கையெழுத்தைப் பார்த்தாள். 'ஏங்க, இந்தக் கையெழுத்து மாமாவுதா?' என்றாள்.

'ம்...' என்றான்.

'ஏங்க... இந்தக் கையெழுத்தில உங்க பேரெழுதி ஒட்டியிருந்த கவரை நான் பார்த்தேங்க. உள்ளே ஏதோ கடிதம் இருந்திருக்குமோ?'

'எங்க இருந்தது?'

அவள் யோசித்து யோசித்துப் பார்த்தாள். நினைவுக்கு வரவில்லை.

'சரி, விடு. ஏதாவது டாகுமெண்ட் காப்பி இருந்திருக்கும்.' என்றான் கந்தகுரு.

அப்போது வசுமதிக்குத் தெரியவில்லை. அதில்தான் தன் சந்தோஷத்தின் திறவுகோல் இருக்கிறது என்று...

மறுநாள் காலை... அவள் விழிக்கும் முன்பே அவன் போய்விட்டிருந்தான்.

'வசு.. ஏதோ ஒரு முடிவுக்குப் பின்தான்... உன்னைச் சந்திப்பேன்!' என்று ஒரு சீட்டில் எழுதி வைத்திருந்தான்.

அவள் திகைத்துப் போனாள்.

'ஏதோ ஒரு முடிவென்றால்...?'

கேள்வி பெரிதாக நின்றது.

## 17

எல்லாம் வெறுமையாய் இருக்கிறாற் போல் தோன்றியது வசுமதிக்கு.

கணவன் ஏன் அப்படி எழுதி வைத்துவிட்டுப் போனான். இப்படி விலகுவதும், சேர்வதும், மகிழ்வதும், சந்தேகமும் எத்தனை நாளைக்கு? ஒரு நாள் என் உயிரே நீதான் என்பது மாதிரி அணைக்கிறான். மறுநாள் நம்பிக்கையில்லை என்கிறான்.



நினைத்து நினைத்துக் குழப்பம்தான் மிஞ்சியது. தினமும் செய்கிற யோகாவும், தியானமும்தான் அவளுக்குப் பைத்தியம் பிடிக்காமல் வைத்திருந்தது.

அவள் உள்மனது அவளைக் கேட்டது. 'உன் கணவன் கேட்டது சரிதானே? நீ மட்டும் அவன் மீது முழு நம்பிக்கை வைத்தாயா? அந்த அஞ்சலியைக் காதலித்ததாக நம்பினாயே...' என்று.

'ஆமாம்.. தனக்கு ஏன் ஒரு எண்ணம் அப்படி ஏற்பட்டது. எதிலும் ஒரு பிடிப்பே இல்லாதவன் போல் விட்டேத்தியாய் நடக்கத்தானே தனக்கு அப்படித் தோன்றியது.' என்று நினைத்துக் கொண்டிருந்தபோதுதான் அவளுக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது. அந்தக் கவர்..

அந்தப் பழைய சூட்கேசில்தானே அதைப் பார்த்தோம்.

அந்த நினைவு தோன்றியதும் அவன் செல்ஃபோனுக்கு ஃபோன் செய்தாள்.

'சொல்லு வசு..' என்றான் இறுக்கமான குரலில்.

அந்த இறுக்கமான குரலைக் கேட்டதும் அவள் உற்சாகமெல்லாம் வடிந்து போனது. 'வந்து.. வந்து.. அந்தக் கவர்...'

'எந்தக் கவர்..?'

'அதாங்க.. உங்க அப்பா கையெழுத்தில் இருந்த அந்தக் கவர்... அது அந்த பழைய சூட்கேஸில் இருக்கு.'

அவன் உச்சுக் கொட்டினான்.

'இல்லைங்க.. நீங்க அதை எடுத்துப் படிங்க. அதுல ஏதோ விடையிருக்குன்னு என் உள்மனது சொல்லுது...'

'சரி... சாயங்காலம் பாக்கறேன்.. என்று ஆஃப் செய்தான்.

அவள் அவன் அன்றிரவு அழைப்பான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அழைப்பு வரவில்லை.

மறுநாள் பரபரப்பாகவும், வேறுவிதமாகவும் விடிந்தது.

பத்து மணி இருக்கும். அவள் அப்பா, 'வசுமதி.. இந்த நல்ல நியூஸ் கேளு..' என்று பரபரப்பாக வந்தார்.

'மாப்பிள்ளைக்குச் சிறந்த சிறுதொழில் அதிபர்ன்னு தேசிய விருது கிடைச்சிருக்கு. அவரோட கண்டுபிடிப்புக்கு ஏகப்பட்ட வரவேற்பு. நீதானம்மா இதுக்கு முயற்சியெடுக்கச் சொன்னே. இப்பதான் எனக்கு ரிலையபிளா நியூஸ் கிடைச்சது!' என்றார்.

இடையிலே இருந்த விஷயங்களையெல்லாம் கணத்தில் மறந்தாள். கணவனுக்கு ஃபோன் செய்தாள்.

வாழ்த்துச் சொன்னாள்.

'தாங்க்ஸ், வசு.. இங்க வீடு நிறைய ஒரே கூட்டம். நா அப்புறம் பேசறனே,' என்றான்.

அவள், 'இருங்க... அந்தக் கவர் கிடைச்சுதா?' என்றாள்.

'கிடைச்சுது. வசு... அதையெல்லாம் அப்புறம் பேசலாம். நா அங்கதான் புறப்பட்டு வரேன். இன்னைக்கே டெல்லிக்குப் போகணும்மாம். ஃப்ளைட் டிக்கெட் புக் பண்ணியாச்சு. நாளன்னைக்குக் காலையிலே விருது குடுக்கறாங்களாம்!' என்றான்.

பிற்பகலில் வந்தான். பாக் செய்வதற்கும், புறப்படுவதற்கும்தான் நேரம் இருந்தது. அப்பாவின் நண்பர்கள் எல்லாம் வேறு அடுத்தடுத்து வந்து வாழ்த்தினார்கள். பேச நேரம் கிடைக்க வில்லை. அவசரமாகப் புறப்பட்டுப் போனான்.

இதற்கு நடுவிலே அன்றைக்குப் பார்த்துக் குமாரும், கீதாவும் வந்து சேர்ந்தார்கள். குமாரும் அவனோடு டெல்லி போனான். கீதா ஒரு நாள் வசுமதியோடு தங்கி விட்டு அவர்கள் ஊருக்குப் போனாள்.

வசுமதி பரிசளிப்பு விழாவுக்காகக் காத்திருந்தாள்.

- - - - - - -

ஜனாதிபதியிடம் விருதை வாங்கிக் கொண்டு கணவன் பணிவுடன் வணங்கி நிமிர்ந்த போது வசுமதியின் நெஞ்ச மெல்லாம் பெருமிதத்தால் விம்மியது.

சற்று நேரம் கழித்து டிவியில் தமிழ் சானல்கள் அவன் பேட்டியை ஒளிபரப்பின. அவன் எல்லாக் கேள்விகளுக்கும்



கச்சிதமாகப் பதில் சொன்ன விதத்தை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'இந்த வெற்றிக்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?' என்ற கேள்விக்கு.

'என் மனைவி!' என்று அவன் பதில் சொன்னபோது. வசுமதியே ஒரு கணம் மூச்சுவிட மறந்தாள்.

'எனக்குப் பெற்ற தாய். வளர்ப்புத் தாய் என்று இரண்டு தாய்கள். இரண்டு பேரும் என்மேல் உயிரையே வைத்திருந் தார்கள். என் தங்கை என் மேல் பாசமழை பொழிந்தவள். இவர்களுக்கு நடுவே அன்புமழையில் வாழ்ந்து ஒரு மனிதனாக இருந்து என்னை என் மனைவிதான் முழு மனிதனாக்கினாள்.

'வாழ்க்கைன்னா.. ஒரு அர்த்தம் இருக்கணும். ஏதாவது சாதிக்கணும்!' என்றாள். இந்தக் கண்டுபிடிப்பைச் சாதாரணமாக ஒரு நாள் சொன்ன போது அதைப் பெரிதாக்கிச் சொந்தமாகத் தொழில் ஆரம்பிக்கிற அளவுக்கு ஊக்குவித்தாள்.

'நீ எவ்வளவு தூரம் ஓடிவிட்டு வந்தாலும், எத்தனை கோப்பைகளை ஜெயித்து விட்டு வந்தாலும் உனக்காக நான் தண்ணீர்ப் பந்தலாய்க் குளிர்ந்த நீருடனும், மோருடனும் காத்திருப்பேன்!' என்று கவிதை எழுதி நான் ஜெயிக்க வேண்டிய கோப்பைகளைப் பற்றி அறிவுறுத்தினாள்.

'அந்த மாதிரி ஒரு பெண் கிடைக்கிற எந்த மனிதனின் வாழ்க்கையும் நிறைவுடையதாகத்தான் இருக்கும். வெற்றிகர மாகத்தான் இருக்கும்!' என்று அவன் சொன்ன போது. தன் காதுகளையே நம்ப முடியாதவளாய்த் திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள். இரண்டு கண்களிலும் இருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. தன்னிலை மறந்து அமர்ந்திருந்தாள்.

'ம்மா.. அப்பா... அப்பாம்மா...' என்று டிவியைப் பார்த்தபடி குதிக்கிற மகனை அவள் கைகள் தன்னிச்சையாய் அணைத்துக் கொண்டன. அவன் அவள் ஃபோட்டோவை எடுத்துக் கொடுக்க அதைத் திரையில் காட்டினார்கள்.

முத்துவேல் மகளின் நிலை பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார். சோஃபாவின் அருகில் வந்து நின்றவர், அவள் தலையை அன்புடன் நீவிக் கொடுத்தார்.

அவள் கனவில் இருப்பவள் போல் அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள். அப்பாவின் முகம் பெருமையால் விகசித்தது.

'ரொம்பச் சந்தோஷம்மா.. இப்படி ஒரு பேரை வாங்கிக் கொடுத்தியே. அது போதும்மா!' என்று தழுதழுத்தார். சந்திரவதனி கூட மகளை முத்தமிட்டு வாழ்த்தினாள். வந்தனா, 'கிரேட்க்கா.. சிரிக்கவே தெரியாத மாமாவை இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டுட்டே.. நிஜமாவே கிரேட்!' என்று கட்டிக் கொண்டாள்.

ஆனால், அறைக்குப் போனதும் மீண்டும் அவளுக்குச் சந்தேகம் வந்து விட்டது.

'ஊருக்காக இப்படிச் சொல்கிறானோ?' ஊருலகுக்கு எதுவும் காட்டிக் கொள்வதில்லை என்று எடுத்த முடிவுக்காக அப்படிச் சொல்கிறான் போலும்,' என்ற எண்ணமும் தோன்றியது.

அதற்கேற்றாற் போலவே காரியங்களும் நடந்தன.

டி.வி.யில் பேட்டி கொடுத்ததோடு சரி. அவளைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கவில்லை.

டெல்லியிலிருந்து வந்தவன் கூட நேராகத் தங்கள் ஊருக்குப் போய்விட்டான். குமார்தான் கோயமுத்தூருக்கு வந்தான்.

'வசும்மா.. இங்க இருந்தது போதுமாம். ஐயா ஆர்டர் போட்டாச்சு. கிளம்பு...' என்று அழைத்துக் கொண்டு போனான்.

வீட்டிலும் மனிதர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தியாகி இருந்தான்.

எல்லாப் பேட்டிகளிலும் அவளைப் பற்றிச் சொல்லியிருந்தான்.

வந்தவர்கள் எல்லாரும் அவளையும் பாராட்டினார்கள்.

பெரியாத்தாவும், கமலம்மாவும் அவளை ஒரு வேலை செய்ய விடவில்லை.

'நீ வந்தவங்களையெல்லாம் கவனி!' என்று அனுப்பினார்கள்.



இரண்டு மூன்று நாட்கள் வரை நிலைமை இப்படியே இருந்தது. இரவுதான் சற்று நேரம் கிடைக்கும். கீதாவுடன் சற்று நேரம் செலவழித்து விட்டுப் போனால் கணவன் களைப்பில் உறங்கிப் போயிருப்பான்.

நிம்மதியாக உறங்குகிற அவனைப் பார்க்கும் போது ஊருக்காகத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறான் என்பது நன்றாகவே உறுதியாகி விட்டது.

அன்று கோவை சிறு தொழில் அதிபர் சங்கப் பாராட்டு விழா முடிந்த பின் பொள்ளாச்சியில் ஒரு ஃபங்ஷன் என்று புறப்பட்டுப் போனான்.

கோவைக்கு அவளும் போனாள். 'நீ குமாரோடு வா,' என்று சொல்லிவிட்டு அவன் பொள்ளாச்சிக்குப் போய் விட்டான்.

குமாரும், கீதாவும் வந்து அவளை அழைத்துக் கொண்டு போனார்கள். கார் தங்கள் ஊர்நோக்கிச் செல்லாமல் பண்ணை வீட்டுப் பக்கம் போவதைப் பார்த்து அவள் கேள்விக் குறியுடன் பார்க்கவும்.. கீதா சிரித்தாள்.

'அண்ணனுக்கு இந்த அழகான அண்ணி கூட வீட்டுல பேசவே முடியலையாம். நிறையப் பேசணுமாம். ரெண்டு நாளைக்குப் பண்ணை வீடுதானாம்,' என்றாள்.

'ரெண்டு நாளா? டிரஸ் எல்லாம்...' என்று அவள் விழிக்கவும்,

'அண்ணன் எல்லாம் கொண்டு வருவாங்க...' என்று சிரித்தாள்.

பண்ணை வீட்டுக்கு வந்து சற்று நேரம் இருந்து விட்டு அவர்கள் இருவரும் கிளம்பினார்கள். வசுமதி அவனுக்காகக் காத்திருந்தாள்.

என்ன வரப் போகிறது என்று தெரியாமலே...!

# 18

'அய்யா கொடுக்கச் சொன்னாங்கம்மா,' என்று ஒரு பார்சலைப் பண்ணையாள் நீட்டினான்.

இரண்டு நாட்களுக்குத் தேவையான புடவைகள், நைட்டி, உள்ளாடைகள் என்ற எல்லாம் புதிதாய் இருந்தன. தேவைக்கு அதிகமாகவே வாங்கியிருந்தான்.

அவள் மகனை உறங்க வைத்துவிட்டுக் குளித்து விட்டு வந்தாள். ரெடிமேட் பிளவுஸ் சரியான அளவில் இருந்ததை அணிந்தபோது அவள் முகம் சிவந்து விட்டது. எப்படிக் கரெக்டாக வாங்கியிருக்கிறான் என்று.

எப்போதும் பண்ணை வீட்டில் அவன் வைத்திருக்கும் அந்தச் சின்ன டேப்ரெக்கார்டரில் நல்ல பழைய பாடல்கள் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பத்து மணி வாக்கில் அவன் கார் வரும் சத்தம் கேட்டது. அறைக்கு வெளியே வந்தாள்.

'ஹலோ வசு.. வந்துட்டியா...' என்றவன் அவள் அணிந்திருந்த உடை பார்த்து நின்று விசிலடித்தான். 'நாட் பேட். சரியாத்தான் இருக்கு...' என்று சிரித்தான்.

அவள் முகம் சிவந்தது.

'அடடா! வைஃபை மீட் பண்றதுக்குக் கூட அப்பாயிண்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ண வேண்டியிருக்கு!' என்று அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு உல்லாசமாகச் சிரித்துக் கொண்டு உள்ளே வருகிற கணவனிடம் பேச அவளுக்கு வாயே வரவில்லை.

அவனே டிஃபன் வாங்கி வந்திருந்தான். குளித்து விட்டு வந்தான். இருவரும் டிஃபன் சாப்பிட்டார்கள்.



'செந்தில் சாப்பிட்டானா..?' என்றான்.

'ம்.. எதுக்கும் அவனுக்கும் ரெண்டு இட்லி எடுத்து வச்சிருக்கேன்,' என்றாள்.

அவள் பாத்திரங்களை ஒழுங்கு செய்து விட்டுப் பால் பாக்கெட்டை எடுத்து ஃபிரிட்ஜில் வைத்துவிட்டுத் திரும்பிய போது பின்னால் நெருக்கத்தில் நின்றிருந்தான்.

'மதி... சுமதி... வசுமதி...' என்று வழக்கம் போல் பிலடப் செய்தபோதும் கூட அவள் எப்போதும் போல் சிரிக்கவில்லை.

அவன் சட்டென்று விலகிச் சற்று தூரத்தில் அவளை நிறுத்தி, 'என்ன வசு?' என்றான்.

'முடிவெடுத்திட்டீங்களா?' என்றாள்.

'என்ன முடிவு?'

'டைவர்ஸா.. இல்லே.. இப்படியே சேர்ந்து இருக்கறது மாதிரி நடிச்சுக்கிறதா...ன்னு...'

அவன் புருவங்கள் நெரிந்தன.

'என்ன உளர்றே?'

'இல்லையே, ஏதோ ஒரு முடிவோடதான் சந்திப்பேன்னு எழுதி வச்சீங்க...?'

'ஆமா...'

'முடிவு என்ன செஞ்சீங்க? டைவர்ஸா? இல்லை.. பொய் வாழ்க்கையா?

'ஓங்கி அறைஞ்சுடுவேன்!' என்றான் காட்டமாக.

அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள்.

'நான் நம்ம பிரச்சினைக்கா முடிவுன்னு சொன்னேன். அப்பா சொன்னது பத்தித்தான் எழுதியிருந்தேன்...' என்றான்.

'ஓ...!' என்றாள், திகைத்துப் போய்.

'மக்கு! மக்கு!' என்று தன்னருகில் இழுத்து அணைத்துக் கொண்டான். அந்தக் கணம் வசுமதியின் பாரமெல்லாம்

இறங்கினாற் போல் மகிழ்ச்சியில் இதயமே வெடித்தது போல் உணர்ந்தாள். அவன் மார்பில் முகம் புதைத்துப் புரண்டு அழுதாள்.

'ஏய்.. என்ன இது?...' என்று அவன் திகைத்தான். முதுகில் தட்டிக் கொடுத்துத் தேற்றினான்.

சற்றுத் தேற்றிக் கொண்ட பின், அவள் அவன் மார்பில் கோபமாகவும், செல்லமாகவும் இருகைகளாலும் குத்தினாள்.

அவன் லேசான புன்னகையோடும் கிறக்கமான பார்வையோடும் அந்தக் குத்துக்களையெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் வாங்கிக் கொண்டான். தன்னையுமறியாமல் தனது தாபத்தை அவள் கொட்டுவதைப் புரிந்து கொண்டான்.

'நீங்க எங்கிட்டே சரியாப் பேசி எத்தனை நாளாச்சு தெரியுமா?' என்றாள், ஆற்றாமையுடன். அவன் கட்டிலில் அமர்ந்து அவளைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

'ஆமாடா...' என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு அவளைப் பார்த்துச் சிரித்தான்.

'அதுக்குத்தான்... தேவியார்கிட்டே மனம் விட்டுப் பேசணும். தேசிய விருது வாங்கியிருக்கேன்... இல்லயில்ல... நீதானே வாங்கிக் குடுத்திருக்கே.. உன்கிட்டே ட்ரீட் வாங்கணும்!' என்று அவன் அடுக்கினான். அவள் அதைக் கவனிக்க வில்லை. வேறு யோசனையில் இருந்தாள்.

'குரு... அந்தக் கவர் கிடைச்சுதா?' என்றாள்.

'கிடைச்சுது, கண்ணம்மா... அடடடா.. அதெல்லாம் அப்புறம் பேசலாமே..' என்று சலித்துக் கொண்டான். பிறகு ஒரு நிமிடம் யோசித்தவன், 'வேண்டாம் வசு.. எல்லாத்தையும் கிளியர் பண்ணிடுவோம்,' என்று சிரித்தான். தன் பிரீஃப்கேஸில் இருந்து அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

அவள் பரபரப்பாகப் படிக்கத் துவங்கினாள்.

\- - - - - - -



அந்தக் கடிதத்தில் ஒவ்வொரு பத்தியும் வேறு வேறு மையில் எழுதப்பட்டிருந்தது. நேரம் கிடைக்கும் போது எழுதினார் போலும் என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் மனதின் எண்ண ஓட்டத்தைப் படித்தாற் போல் கந்தகுரு, 'வசு... ஸ்ட்ரோக் வந்தப்புறம் இடது பக்கம் வராமப் போயிருச்சுல்ல... கொஞ்சம் கொஞ்சமா வலது கையால முடிஞ்சப்ப எழுதியிருக்காரு. படுக்கையில இருந்தபடி எழுதினதுல எழுத்தெல்லாம் சரியா வரல...' என்றான்.

'அன்பு மகனுக்கு,

உனக்கு நான் ஒரு பெரிய கொடுமை செய்து விட்டேன். உன் மனதில் ஒரு தவறான எண்ணத்தை, இல்லை... விஷத்தை... விதைத்து விட்டேன். ஆனால், அதற்கு முன்னால் நான் ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்...' என்று சொல்லி மருத்துவச்சி தன்னிடம் சொன்னதை, தனக்கு அதிர்ச்சியாகிப் போனதையெல்லாம் எழுதியிருந்தார்.

'... ஆனால், பிறகு யோசித்தேன். பெரியாத்தா என்னோடு வாழ்ந்த இத்தனை நாளில் ஒரு நாளும் எனக்குத் துரோகம் நினைத்தவளல்ல. அப்படியிருக்கையில் இப்படி ஏன் செய்தாள் என்ற எண்ணம் என்னை அரித்தெடுக்க... அவளையே கேட்டேன். தம்பீ... அப்போது அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'உங்களுக்கும், கமலாவுக்கும் மனசுல எந்தக் குழப்பமும் வரக்கூடாதுன்னுதான் அப்படிச் செஞ்சேன். கமலா எப்பவும் நான் ஏதோ அவளுக்குப் பிச்சை போட்ட மாதிரி ஒரு நன்றி காட்டற பிராணி மாதிரி நடந்துக்கறா. நானும் எத்தனையோ சொல்லிப் பாத்துட்டேன். அவதான் நம்ம குடும்பத்துக்கு ஒரு வாரிசைக் குடுத்து நம்மளுக்குப் பிச்சை போட்டிருக்கான்னு அவளுக்குப் புரிய மாட்டேங்குது. இன்னும், இதுல வேற கீதா என்ற குழந்தைன்னு தெரிஞ்சா.. நான் அனாவசியமா இடையில நுழைஞ்சு உங்க வாழ்க்கையைக் கெடுத்துப் போட்டேனே... ன்னு மாஞ்சு போவா... அதனாலதான் அப்படிச் செஞ்சேன்...ங்கறா.

'அப்ப எனக்குச் சொல்லாமவுட்டயே, ஏன்னு' கேட்கறேன்.

'எப்படியிருந்தா என்னொ? கீதா உங்க மகள்னுதான் ஊருக்குத் தெரியும். அதுவுமில்லாம என்ற புருஷன் என்ற மேலே... எத்தனை நம்பிக்கை வச்சிருக்காருன்னு எனக்குத் தெரியும். என்னைக்காவது தெரிஞ்சாலும் என்ற பெரியாத்தா எது செஞ்சாலும் கரெக்ட்டாதான் இருக்கும்னுதான் சொல்லுவாருன்னு எனக்கு நம்பிக்கையிருக்குது.'

'அப்படிங்கறா...

'அந்த நிமிஷத்துல எனக்கு ரொம்ப மானக்கேடாப் போச்சு தம்பி. அவ என் மேல வச்ச நம்பிக்கையை நான் அவ மேலே வக்கிலியேன்னு. அப்புறம் சொல்றா.

'ஏனுங்க... எல்லாரும் ராமனுக்குத் தம்பி லட்சுமணன்தான் பெருசுங்கறாங்களே. எனக்கு ஆனா, சத்துருக்கனன்தானுங்க பெரிசு. ஏன்னு கேளுங்க. லட்சுமணன் கூட அப்பப்பத் தான் இருக்கறதைக் காட்டறானுங்கோ. ஆனா, சத்துருக்கனன் பரதனுக்குப் பின்னாடியே போனானே யொழிய, எந்த இடத்திலயும் தான் தனின்னு காட்டிக் கிட்டதே இல்லீங்க. அது மாதிரிங்க என்ற கமலாங்கறா.. ஆண்டவன் என்ற வயிறு திறக்க வச்சானே. அதுவே போதுமுங்க. பெத்த பாசமென்னங்க பெருசு. இன்னைக்கு எனக்குன்னா என்ற ராசா கந்தசாமி என்ன வேணா செய்வானுங்க.. அது போதாதா?' என்றாள்.

'நான் கூனிக்குறுகிப் போனேன் தம்பீ. பிறகு, 'எப்படியோ புள்ளே.. இப்ப எனக்குத் தெரிஞ்சதுக்கப்புறம் நான் கமலாவுக்குச் சொல்லியே ஆகோணும்ங்கறேன்... உங்க இஷ்டம்னுட்டா...'

'கமலாவுக்குச் சொல்றேன். அவ, 'அப்பவே எனக்குத் தெரியுமுங்க. நான் அரை மயக்கத்துல இருந்தப்ப அக்காளும் மருத்துவச்சியும் பேசுனதெல்லாம் கேட்டனுங்க.. அக்கா எது செஞ்சாலும் சரியாத்தான் இருக்கும்னு எனக்கு நம்பிக்கை இருக்குதுங்க. என்ன இருந்தாலும் அக்கா மாதிரி வருமுங்களா? அதனாலதானே கந்தசாமியை நீயே வளத்துக் குடு. என்னையாட்ட மந்தமா இல்லாம உன்னையாட்ட கம்பீரமாக வளரட்டும்னு குடுத்தனுங்க!' என்கிறாள்.



'கந்தகுரு.. டேய். இப்ப சொல்றேன் கேட்டுக்க. பெண்கள் நமக்கு வேணுமடா.. ஏன் தெரியுமா? அவர்களை மாதிரி சுயநலமே இல்லாம நமக்கு அன்பு செலுத்த வராதுடா.. வரவே வராது.. ரெண்டு பொம்பளைங்களும் அன்பாலே என்னைத் திணறடிச்சுட்டாங்க போ. நான் பாக்கியசாலிடா.. நீயும்தான்.

'என்னொ.. இந்த பிளட் பிரஷர் எளவு முன்னாடியே இருந்துருக்குமாட்ட இருக்கு. பாக்காம விட்டுப் போட்டேன். நிறைவான வாழ்க்கை வாழ்ந்து போட்டேன்டா. இனி எப்பப் போனாலும் சம்மதம்டா. எல்லாத்தையும் நல்லாப் பாத்துக்கடா. உன்னையும் நல்லா கவனிச்சுக்க.. நல்ல பொண்ணாகக் கல்யாணம் கட்டித் தங்கமா வச்சுக்க.

அன்புடன்,

செந்தில்நாயகம்'

## 19

நேரே பேசுவது போல் எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்து முடித்தவுடன் வசுமதியின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் கண்களும் நிறைந்திருந்தன. அவளைத் தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

'கடைசியில் என் பிரச்சினைக்கும் நீதான் தீர்வு சொல்லியிருக்கே. இந்தக் கவர் மட்டும் கிடைக்காமப் போயிருந்தா.. மனப்போராட்டத்திலேயே நான் ஒரு வழியாயிருப்பேன்...' என்று நெகிழ்ந்த குரலில் சொன்னான்.

'உண்மைதான் வசு.. எங்கப்பா எழுதியது சரிதான். உங்களைப் போல சுயநலமில்லாத அன்பு செலுத்த எங்களுக்கு வராது. சில நேரங்களில் உன்னை ரொம்பப் படுத்திட்டேன். கண்ணம்மா!' என்றான், உருக்கமான குரலில்.

அவள் நம்ப முடியாதவளாய் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ந்தான். 'என்னை மன்னிப்பியா.. வசு..' என்றான். 'என்னைவிடச் சின்னப் பெண்.. என்னையே நம்பி வந்தவள் என்று கூடப் பாக்காம என் குழப்பங்களுக்கும்... கோபங்களுக்கும் உன்னை வடிகாலாக்கி.. சே... நான் மனுஷனே இல்லை...' என்று அவன் ஆழ்ந்த வருத்தத்துடன் சொல்லவும்... அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

'வேண்டாம், குரு... போனதெல்லாம் போகட்டும். அதான்.. எல்லாத்துக்கும் என் மனைவிதான் காரணம்னு சபையிலே சொன்னீங்களே. அதைவிட எனக்கு என்ன வேணுமாம்.. இந்த நிமிடம் உயிர் போனாலும் பரவாயில்லைன்னு இருக்கு..' என்று அவளும் நெகிழ்ந்தாள்.

அவன் ஆவேசமாக அவளை இறுக அணைத்துக் கொண்டான். 'ஹேய் விட்டுருவேனா? எமனேயாகட்டுமே. என்னைத் தாண்டி வந்துருவானா என்ன?' இன்னும் எவ்வளவு இருக்கு வசு...? இதுவரைக்கும் உன்னை அலைக்கழித்ததுக் கெல்லாம் நான் பரிகாரம் செய்யணும். உன்னைப் போலவே.. ஒரு பெண் குழந்தை நீ எனக்குப் பெற்றுக் கொடுக்கணும்... ஒரு நல்ல வாழ்க்கை எப்படின்னு உங்கிட்டயிருந்து கத்துக்கணும்... நிறைய உனக்குச் சொல்லித் தரணும்....' என்று குழைந்த போது மகன் தனது படுக்கையில் சிணுங்கினான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

'இவன் வேற... போட்டிக்கு... வந்துருவான்!' எனச் சிரிக்கவும்,

'குரு.. பேசாம.. இருங்க.. உங்க குரல் கேட்டா முழிச்சிடுவான். அப்புறம்.. உங்க நெஞ்சு மேல படுத்தான்னா.. நகர்த்தவே முடியாது..' என்று அவள் குறும்பாகச் சிரிக்கவும், அவன் அவளை ஆசையாகப் பார்த்துக் கொண்டான். சற்று வெளியே சென்று நின்றான்.



அன்றைக்கும் பௌர்ணமி. இதே போல அன்றொரு பௌர்ணமியில் தான் அவள் முகம் பார்த்து நின்றது நினைவுக்கு வந்தது.

'உள்ளத்தை ஒருத்திக்குக் கொடுத்து விடு – அந்த

ஒருத்தியை உயிராய் நினைத்து விடு..'

என்ற கண்ணதாசனின் பாடல் சௌந்தர்ராஜன் குரலில் காற்றில் மிதந்து வந்தது. அவன் தலை கோதிக் கொண்டு லேசான புன்சிரிப்புடன் ரசித்துக் கொண்டான். சற்றே உலாவினான்.

மகனுக்கு உணவூட்டி அவனை உறங்கச் செய்த பின் வருகிற மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் பௌர்ணமி நிலவைக் காட்ட, இருவரும் சற்று நேரம் அணைப்பில் கட்டுண்டு ரசித்துக் கொண்டார்கள்.

'இனியொன்னும் சந்தேகம் இல்லையே?' என்றாள் அவள் குழைந்த குரலில்.

'ஒரேயொரு சந்தேகம்தான்.'

'என்னவாம்?'

'பெண்கள் எப்படி இப்படி ஆட்களைச் சரியாகப் புரிந்து கொள்கிறீர்கள்? இப்ப வந்த நீ அம்மா எது செஞ்சாலும் சரியாத்தான் இருக்கும்னு சொன்னயே.. அது ஏன் எனக்குப் புரியாமப் போச்சு?'

'ட்யூப் லைட்... ட்யூப் லைட்...' என்று கிண்டல் செய்தாள். பிறகு சீரியஸாகச் சொன்னாள். 'குரு.. பெண்களுக்குப் பொதுவாவே உள்ளுணர்வு ஆழம், தெரியுமா? ஒவ்வொரு தடவையும் அடுத்த தடவை உங்களைத் தொட விடவே கூடாதுன்னு கோபம் வரும். ஆனா என் உள்மனசு சொல்லும்.. வெளியே காட்டிக்கற கந்தகுரு வேற.. உள்ள இருக்கற ஆள் வேறன்னு...

'ம்... அப்படியா?' என்று இழைகிற கணவனைப் பார்த்தாள். 'பண்ணையத்து ஆளுகளுக்கு எல்லா வசதியும் செஞ்சு தரீங்களே.. அதைப் பார்த்து எனக்கு அந்த எண்ணம்... இன்னும் உறுதியாச்சு...'

'அப்புறம்.. சண்டை போட்டே...?' என்றான்.

'ஹேய்... நீ கோபமாச் சண்டை போடும் போது அழகா இருப்பே தெரியுமா? இப்ப.. இப்பத்தான் மிஸ்டர் கந்தகுரு உங்க முகம் இயற்கையாய் இருக்குன்னு சொன்னியே.. நெனச்சு நெனச்சு சிரிச்சேன், தெரியுமா? ஆனா... பாவம்! உன் மனசு வலிக்க... உடம்பு வலிக்க.. சே.. நான் மிருகம்...' தன்னை மிகவும் நொந்து கொண்டான்.

'போதும் மிஸ்டர் கந்தகுரு. ரொம்ப வருத்தப் பட்டுக்காதீங்க...' என்றவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவள் கண்கள் சிரித்தன. பிறகு அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

'எல்லாம்.. எல்லாமும் அந்த வேகமும் பிடிச்சுத்தான் இருந்துது..' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் கிறங்கிப் போனான். நிறையப் பரிசுகள் கொடுத்தான். பிறகு சொன்னான். அஞ்சலியைப் பாத்துட்டு வந்தப்ப கண்ணீரும் கம்பலையுமா உட்கார்ந்திருந்தியே... அன்னைக்கே எனக்குத் தெரியும். வசும்மா.. நான் உன்னை ஜெயிச்சுட்டேன்னு... ஆனா.. அதே சமயத்துல நான் உங்கிட்டே தோத்துக்கிட்டிருக்கேங்கறது எனக்குப் புரிஞ்சு போச்சு.. இப்ப சொல்லு... தோத்தது யாரு? ஜெயிச்சது யாரு..?' என்று இழையவும் –

அவள் சிரித்தாள். 'இன்னைக்கு ரொம்பத்தான் உளர்றீங்க!' என்றாள் மகிழ்ச்சியாக.

'நீ உளறினாக் கவிதைம்பே.. நான் உளறினா மட்டும் கூடாதுங்கறே!' எனவும் சிரித்தார்கள்.



'வசு.. உன் பள்ளிக்கூடம் பெரிசாகணும். நம்ம ஃபாக்டரி பெரிசாகணும். ஒரு அறிவார்ந்த பெண் வாழ்க்கையில் வந்தா என்னென்ன செய்யலாம்னு நாம ரெண்டு பேரும் நிரூபிக்கணும்...' என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். 'இப்ப.. இந்த நிமிஷத்துல என்ன உத்தேசம்னு கேக்க மாட்டியா?' என்றான்.

'இருங்க குரு.' என்ற அவள் திடீரென்று தீவிரமானாள். 'ஏங்க. இது கீதாவுக்குத் தெரியணுமில்ல. அதுதானே நியாயம்...' என்றாள்.

அவன் சற்றே நிதானத்துக்கு வந்தான். பிறகு, 'டெல்லியில் வைத்துக் குமாரிடம் எல்லாம் சொன்னேன். அவன் அதைப் பெரிசாவே எடுத்துக்கலை. அப்புறம் ஊருக்கு வந்ததுக்கப்புறம் கீதாவையும் அவனையும் உட்கார வச்சு மறுபடியும் எல்லாத்தையும் சொன்னேன். ரெண்டு பேரும் முழுசாக் கேட்டுட்டுச் சிரிக்கிறாங்க. கீதா சொல்றா: 'போங்கண்ணா! எப்படியிருந்தாலும் நீ எனக்கு அண்ணன்தானே. எப்பவுமே நாம ரெண்டு அம்மாவையும் ஒண்ணாத்தானே நினைச்சோம். அப்புறம் எதுக்கு இதைப் போய்ப் பெரிசு பண்ணிகிட்டு!'ன்னு அலட்சியமாகச் சிரிக்கிறா...' என்றான்.

தன் மனைவி கண்களை அகல விரித்துக் கொண்டு தன்னைப் பார்ப்பதைக் கண்டவன் அந்த இமைகளில் அழுந்த இதழ் பதித்தான்.

'அப்படிப் பாக்காதே... ஜிவ்வுன்னு பறக்கற மாதிரி இருக்கு...' என்று சிரித்தான்.

'கீதா ரொம்ப ஸ்வீட்.. இல்லே...!' என்றாள் வசுமதி.

'நீயும்தான்...!' என்றான்.

'போதுமுங்க.. பண்ணாடி. குளிர் காத்து ஆரம்பமாயிடுச்சு... உங்க ஐஸ் வேற தாங்கலே.. உள்ளே போலாம்...' என்றாள் வசுமதி. உள்ளே போய்க் கட்டிலில் அமர்ந்ததும்,

'ம்... அப்படியா?' என்று இழைகிற கணவனைப் பார்த்தாள். 'பண்ணையத்து ஆளுகளுக்கு எல்லா வசதியும் செஞ்சு தரீங்களே.. அதைப் பார்த்து எனக்கு அந்த எண்ணம்... இன்னும் உறுதியாச்சு...'

'அப்புறம்.. சண்டை போட்டே...?' என்றான்.

'ஹேய்... நீ கோபமாச் சண்டை போடும் போது அழகா இருப்பே தெ ியுமா? இப்ப.. இப்பத்தான் மிஸ்டர் கந்தகுரு உங்க முகம் இயற்கையாய் இருக்குன்னு சொன்னியே.. நெனச்சு நெனச்சு சிரிச்சேன், தெரியுமா? ஆனா... பாவம்! உன் மனசு வலிக்க... உடம்பு வலிக்க.. சே.. நான் மிருகம்...' தன்னை மிகவும் நொந்து கொண்டான்.

'போதும் மிஸ்டர் கந்தகுரு. ரொம்ப வருத்தப் பட்டுக்காதீங்க...' என்றவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவள் கண்கள் சிரித்தன. பிறகு அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

'எல்லாம்.. எல்லாமும் அந்த வேகமும் பிடிச்சுத்தான் இருந்துது..' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் கிறங்கிப் போனான். நிறையப் பரிசுகள் கொடுத்தான். பிறகு சொன்னான். அஞ்சலியைப் பாத்துட்டு வந்தப்ப கண்ணீரும் கம்பலையுமா உட்கார்ந்திருந்தியே... அன்னைக்கே எனக்குத் தெரியும், வசும்மா.. நான் உன்னை ஜெயிச்சுட்டேன்னு... ஆனா.. அதே சமயத்துல நான் உங்கிட்டே தோத்துக்கிட்டிருக்கேங்கறது எனக்குப் புரிஞ்சு போச்சு.. இப்ப சொல்லு... தோத்தது யாரு? ஜெயிச்சது யாரு..?' என்று இழையவும் –

அவள் சிரித்தாள். 'இன்னைக்கு ரொம்பத்தான் உளர்றீங்க!' என்றாள் மகிழ்ச்சியாக.

'நீ உளறினாக் கவிதைம்பே.. நான் உளறினா மட்டும் கூடாதுங்கறே!' எனவும் சிரித்தார்கள்.



'வசு.. உன் பள்ளிக்கூடம் பெரிசாகணும். நம்ம ஃபாக்டரி பெரிசாகணும். ஒரு அறிவார்ந்த பெண் வாழ்க்கையில் வந்தா என்னென்ன செய்யலாம்னு நாம ரெண்டு பேரும் நிரூபிக்கணும்...' என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். 'இப்ப.. இந்த நிமிஷத்துல என்ன உத்தேசம்னு கேக்க மாட்டியா?' என்றான்.

'இருங்க குரு.' என்ற அவள் திடீரென்று தீவிரமானாள். 'ஏங்க. இது கீதாவுக்குத் தெரியணுமில்ல. அதுதானே நியாயம்...' என்றாள்.

அவன் சற்றே நிதானத்துக்கு வந்தான். பிறகு, 'டெல்லியில் வைத்துக் குமாரிடம் எல்லாம் சொன்னேன். அவன் அதைப் பெரிசாவே எடுத்துக்கலை. அப்புறம் ஊருக்கு வந்ததுக்கப்புறம் கீதாவையும் அவனையும் உட்கார வச்சு மறுபடியும் எல்லாத்தையும் சொன்னேன். ரெண்டு பேரும் முழுசாக் கேட்டுட்டுச் சிரிக்கிறாங்க. கீதா சொல்றா: 'போங்கண்ணா! எப்படியிருந்தாலும் நீ எனக்கு அண்ணன்தானே. எப்பவுமே நாம ரெண்டு அம்மாவையும் ஒண்ணாத்தானே நினைச்சோம். அப்புறம் எதுக்கு இதைப் போய்ப் பெரிசு பண்ணிகிட்டு!'ன்னு அலட்சியமாகச் சிரிக்கிறா...' என்றான்.

தன் மனைவி கண்களை அகல விரித்துக் கொண்டு தன்னைப் பார்ப்பதைக் கண்டவன் அந்த இமைகளில் அழுந்த இதழ் பதித்தான்.

'அப்படிப் பாக்காதே... ஜிவ்வுனு பறக்கற மாதிரி இருக்கு...' என்று சிரித்தான்.

'கீதா ரொம்ப ஸ்வீட்.. இல்லே...!' என்றாள் வசுமதி.

'நீயும்தான்...!' என்றான்.

'போதும்ங்க.. பண்ணாடி.. குளிர் காத்து ஆரம்பமாயிடுச்சு... உங்க ஐஸ் வேற தாங்கலே.. உள்ளே போலாம்...' என்றாள் வசுமதி. உள்ளே போய்க் கட்டிலில் அமர்ந்ததும்,

'குரு... அப்புறம் ஏன்?' என்று அவள் ஏதோ ஆரம்பிக்கவும், அவன் அவள் வாயைப் பொத்தினான்.

'போதும்... முக்கியமான சந்தேகமெல்லாம் தீந்தாச்சு. மத்ததெல்லாம் மெதுவா அப்புறம் கொஞ்சம்... கொஞ்சமாத் தீத்துக்கலாம் என்ன?' என்று அணைத்தான்.

'இல்ல... இன்னும் ஒரேயொரு சந்தேகம்... இருக்கு!' என்று முணுமுணுத்தாள்.

'என்ன?' என்றாற்போல் அவன் பார்க்கவும் –

'இல்லை.. பெண் குழந்தை பிறந்தா என்ன பேர் வப்பீங்கன்னுதான்?' என்று பார்த்தாள்.

அவன் பெரிதாகச் சிரித்து விட்டான்.

'பெரிய கமல சந்திரவதனி!' என்று ராகம் போட்டான்.

'அவ்வளவு பெரிய பேரா?' என்று சிரித்தாள்.

'சும்மா சொன்னேன். சின்னதா வச்சர்லாம்.' என்று சிரித்தான்.

பிறகு, 'சந்தேகமெல்லாம் தீர்ந்ததாம். இனிமே.. சரணாகதி தானாம்...' என்றாள்.

அவன் அந்தச் செய்தியைச் சற்று நேரம் அனுபவித்துக் கொண்டான்.

பிறகு, 'வசு.. இதைக் கேளு.. அன்னைக்குக் கோயமுத்தூர் பாராட்டு விழாவுக்கு வந்தேன.. அப்ப.. உங்க... அம்மா வந்து, 'மாப்பிளே.. என் பொண்ணுகிட்டேயிருந்து நான் பாடம் கத்துக்கிட்டேன். அதிகாரத்தால் எல்லாத்தையும் கைப்பிடியில் வைக்கணும்னு நெனச்சேன்.. ஆனா.. என் மக.. விட்டுக் கொடுத்தே எல்லாத்தையும் ஜெயிக்கலாம்னு காமிச்சுட்டா.. எல்லா வெற்றிக்கும் காரணம் என் மனைவிதான்னு சொன்னீங்களே.. அப்ப என் பெத்த வயிறு எப்படிக் குளிர்ந்துச்சு தெரியுமா?'ங்கறாங்க...



'ம்... அம்மாவா... அப்படியெல்லாம் பேசினாங்களா என்ன?' என்றாள் வியப்புடன்.

'அது மட்டுமில்லே. அன்னைக்கு அம்மா சொல்றாங்க, வசுவுக்கே கோபம் வரோணுமின்னா.. நீ... ஏதோ.. பெரிய தப்புப் பண்ணியிருக்கே. அப்படிங்கறாங்க!' என்றான் பெருமையாக.

'எல்லாரும் நீ எனக்குக் கிடைச்சதே பெரிய விஷயங்க றாங்க.. உண்மைதான் வசும்மா.. என் திறமைகளை எனக்கே புரியவச்சே. அதே சமயத்துல உன்னோட கனவுகளையும் நடத்திக்கிட்டே.. கெட்டிக்காரிதான்!' என்று சிரித்தான்... பிறகு,

'போதும் வசு.. நோ... மோர் டாக்கிங்... நீ... இங்கே... வா!' என்று அணைத்துக் கொண்டான். 'தீ... மதி... சுமதி... வசுமதி...' என்று கொஞ்சி மகிழ்ந்தான்.

'அதென்ன... தீ... சேர்ந்துகிச்சு...' என்றாள் குழைந்த குரலில். அவனுக்கு இசைந்து கொடுத்தபடி.

'நெருப்பு தன்கிட்டே வருகிற எல்லாத்தையும் இழுத்துக் கொள்ளுமில்ல... கரைத்துக் கொள்ளுமில்ல.. அது மாதிரி நீ என்னை உன்னுள் கரைத்துக் கொண்டவளாயிற்றே.. அப்புறம் நெருப்புக்கு.. ஒரு கவர்ச்சி வேற இருக்கு.. வசும்மா.. நீ என் உயிர்த் தீயின் சோதி!' என்றான்.

அவன் புகழ்ச்சி கேட்டு வெட்கத்துடன் சிரித்தாள்.

அந்த வெட்கச் சிரிப்பில் அவன் தன்னைப் பறி கொடுத்தான். மேலும் கரைந்தான்.

அன்றைக்குச் சிரிப்பும், சிணுங்கலும், கிண்டலும், குறும்புமாய் வேறு வசுமதியைப் பார்த்தான்.

அவளும் மென்மையும் அன்புமாய் அணுகுகிற வேறு கந்தகுருவைக் கண்டாள்.

அது முதல் அவர்கள் வாழ்க்கை வேறாக இருக்கப் போகிறது என்பது புரிந்த ஆனந்த அமைதியில் அவர்கள்

திளைத்து மகிழ்ந்து பேசிக் கொண்டிருந்த போது செந்தில் விழித்தான்.

'ஹை.. அப்பா!' என்று தாவிக் கொண்டான். சற்று நேரம் அப்பாவுடன் விளையாடினான்.

பிறகு அவனைத் தோளில் தூக்கிக் கொண்டு நிலாவைக் காட்டிக் கதை சொல்லி உறங்க வைக்கிற அவனை அருகில் நின்றபடி நிறைவாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் வசுமதி. அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

எதிர் காலம் அந்த மனமொத்த தம்பதிக்காக எத்தனையோ ஏற்றங்களை வைத்துக் கொண்டு காத்திருந்தது. பெரியதொரு தொழிற்சாலையும், நல்லதொரு பள்ளிக் கூடமும் அவர்கள் கனவுகளில் மையம் கொண்டன. அவர்கள் ஊர் அவர்களால் வளர வேண்டியிருந்தது.

திறமையும், அன்பும் கொண்ட ஒரு ஆணும், பெண்ணும் தங்கள் தனித் தன்மைகளை இழந்து விடாமல்..... ஆனால், இணைந்து எப்படி அற்புதத்தைப் படைக்கக் கூடும் என அவர்கள் காட்ட வேண்டியிருந்தது.

அதற்கு முன்னே அவர்களுக்குள்ளே பரிமாறிக் கொள்ள எத்தனையோ இருந்தது. பேசிக் கொள்ளவும் கலந்து கொள்ளவும் அவர்களுக்கு நிறைய இருந்ததைப் பார்த்து அந்த முழு நிலவு கூட லேசாகச் சிரித்துக் கொண்டது. விரைந்து மேலேறியது.